முச்சந்தி முரளி



அப்ப அவரைக் காப்பாற்றுவதே நீங்கதான் என்றியள்...


# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை: 20/= பக்கங்கள்: 28 | சுடர் 31 | கதிர் 268 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஆவணி 04, சனிக்கிழமை 20.08.2016


# ஐ.நா. தீர்மானத்திலிருந்து விடுவிப்பதே குறிக்கோள்

## ஓராண்டு நிறைவில் ஜனாதிபதி மைத்திரி உறுதி

கொழும்பு, ஓகஸ்ட் 20
இலங்கையின் சுயாதீனம், தேசிய பாதுகாப்பைப் பலப்படுத்தி ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானத்திலிருந்து நாட்டை விடுவிப்போம்.பன்னாட்டுச் சமூகத்துக்கு ஒருபோதுமே அடிபணியோம்.

இவ்வாறு நல்லாட்சி அரசின் ஓராண்டு நிறைவில் உறுதி வழங்கினார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

நல்லாட்சி அரசின் ஓராண்டு நிறைவு விழா மாத்தறையில் நேற்று இடம்பெற்றது. இதில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது ஜனாதிபதி மேலும் தெரிவித்ததாவது:
ஐ.நா. மனித உரிமைகள் சபையில், 2011ஆம் ஆண்டு தொடக்கம் 2014ஆம் ஆண்டு வரையில் எமது நாடு >> 24ஆம் பக்கம்



## நிதி மோசடி; ரிஷாத்துக்கு அழைப்பாணை

கொழும்பு, ஓக. 20
அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் கைத்தொழில் மற்றும் வர்த்தக அமைச்சருமான ரிஷாத் பதியுதீனை எதிர்வரும் 29ஆம் திகதி நிதி மோசடி தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டது.

மகிந்த ஆட்சியின்போது சதொச நிறுவனத்துக்கு 5 பில்லியன் ரூபாவுக்கு அரிசி இறக்குமதி செய்யப்பட்டதில் இடம்பெற்றுள்ள மோசடிதொடர்பில் வாக்குமூலம் அளிக்கவே இவர் ஜனாதிபதி ஆணைக் குழுவுக்கு >> 24ஆம் பக்கம்

## கலாசார மண்டபத்தை விடுவிக்கிறது இராணுவம்

வவுனியா, ஓக. 20
26 ஆண்டுகளாக படையினர் வசமிருந்த வவுனியா கலாச்சார மண்டபம் எதிர்வரும் 24ஆம் திகதி கையளிக்கப்படும் என வவுனியா மாவட்டச் செயலகத்திற்கு அறிவிக்கப்பட்டது.

வவுனியா மாவட்டத்தில் இராணுவத்தினர் வசமுள்ள நிலங்களை விடுவிப்பது தொடர்பில் கடந்த 13ஆம் திகதி வவுனியா இராணுவத் தலைமையகத்தில் பாதுகாப்பு அமைச்சின் >> 24ஆம் பக்கம்



# மகிந்தவின் குடுமி

## தன் கையில் என்கிறார் மைத்திரி

கொழும்பு, ஓக. 20
மகிந்த அணியினர் புதிய கட்சி ஆரம்பிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வரும் நிலையில், அவ்வாறான நடவடிக்கையை அவர்கள் மேற்கொண்டால், மகிந்த அணியினர் தொடர்பிலான இரகசியங்கள் முழுவதும் வெளியிடப்படும். அதன் பின்னர் அவர்கள் வாழ்நாள் முழுவதும் வீதியில்தான் அலைய வேண்டி வரும்.

இவ்வாறு எச்சரிக்கிறார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா.

ஐக்கிய தேசியக் கட்சி – சிறிலங்கா சுதந்திரக் கட்சி தலைமையிலான தேசிய அரசின் ஓராண்டு நிறைவு விழா நேற்று மாத்தறையில் நடைபெற்றது. இதில் உரையாற்றும்போதே ஜனாதிபதி மைத்திரிபால மேற்கண்டவாறு எச்சரிக்கை >> 24ஆம் பக்கம்

# மீண்டும் போராடுவதற்கு அரசியல் கைதிகள் முடிவு

## அரசின் சிறப்பு நீதிமன்றத்தையும் புறக்கணிக்கப் போவதாக எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 20
மனிதாபிமானத்தின் அடிப்படையில் அரசியல் கைதிகளாகிய எங்கள் விடுதலைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்கப்படாத நிலையில், வேறு வழிகள் எதுவும் இன்றி சாத்வீகப் போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். அரசினால் உருவாக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தையும் புறக்கணிப்புச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம். இதனை மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வாறு தமிழ் அரசியல் கைதிகள் தமது உறவினர்கள் ஊடாக அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளனர்.

அவர்கள் அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:
நல்லாட்சி அரசின் ஓராண்டு நிறைவடைந்த வேளையிலும் கூட, அரசியல்கைதிகளாகிய எமது விடுதலைக்கான முயற்சிகள் எதுவுமே மேற்கொள்ளப்படாத நிலையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர், நவம்பர் மாதங்களில் நாடு முழுவதிலும் உள்ள 14 சிறைச் சாலைகளிலும் தடுத்து வைக்கப்பட்டிருந்த அரசியல் கைதிகள் அனைவரும் ஒன்றிணைந்து உணவு தவிர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டிருந்தோம். >> 25ஆம் பக்கம்

# 4 கிலோ கஞ்சாவுடன் ஒருவர் சிக்கினார்



யாழ்ப்பாணம், ஓக. 20
திருநெல்வேலி – ஆடியபாதம் வீதியில் 4 கிலோ கேரளக் கஞ்சாவை மோட்டார் சைக்கிளுடன் மீட்டுள்ளதாக மதுவரித் திணைக்களத்தினர் >> 24ஆம் பக்கம்

## கஜு தோட்டத்தை விடுவிக்க பராமரிப்புப் பணம் கேட்கிறது இராணுவம்

கிளிநொச்சி, ஓக. 20
கிளிநொச்சி, முழங்காவில் பகுதியில் உள்ள 500 ஏக்கர் கஜு தோட்டத்தை பொதுப் பாவனைக்கு வழங்கச் சம்மதிக்கிறோம். ஆனால் அவற்றுக்காகக் கடந்த ஏழு வருடங்களாகச் செலவு செய்த பணத்தைத் தாருங்கள்.

இவ்வாறு கோருகின்றனர் இராணுவத்தினர்.

இது தொடர்பில் தெரிவிக்கப்பட்டதாவது:
கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர் வசம் உள்ள காணிகள் விடுவிப்புத் தொடர்பில் கடந்த வாரம் இராணுவமுகாமில் சந்திப்பு இடம்பெற்றது. அதில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், மாவட்டச் செயலாளர் மற்றும் பிரதேச செயலாளர் ஆகியோரும் கலந்துகொண்டனர். இதன்போது பூநகரி பிரதேச செயலாளர் பிரிவின் கீழ் உள்ள முழங்காவிலில் உள்ள கஜு தோட்டம் விடுவிப்புத் தொடர்பில் ஆராயப்பட்டது. அந்தத் தோட்டத்தை விடுவிப்பதற்கு >> 24ஆம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வளிக்கும் கைதிகளின் விவரம் செப்ரெம்பரில் கிடைக்கும்

## அமைச்சர் சுவாமிநாதன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 20
தமிழ்அரசியல்கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் புனர்வாழ்வு வழங்கப்பட வேண்டியவர்களின் விவரங்கள் கிடைக்கப் பெறும். அதனைத் தொடர்ந்து நடவடிக்கை எடுக்கப்படும்.

இவ்வாறு மீள்குடியேற்ற அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் தெரிவித்தார்.

மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு நேற்றுச் சென்ற அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், அங்கு வைத்து ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:
தமிழ்அரசியல்கைதிகளுக்கு புனர்வாழ்வு வழங்கப்பட்டு விடுதலை செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அடுத்த மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் புனர்வாழ்வு வழங்கப்பட வேண்டியவர்களின் விவரங்கள் கிடைக்கும். தற்போது 89 பேர் உள்ளனர். அவர்களில் யாருக்குப் புனர்வாழ்வு வழங்க முடியும் என்ற விதத்தில் தெரிவு செய்யப்பட்டு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

இது தொடர்பில் சட்டமா அதிபருடன் கலந்துரையாடியுள்ளேன். பல வருட காலமாகத் தமிழ் அரசியல் கைதிகள் >> 24ஆம் பக்கம்



## நிலைமாற்று நீதிப் பொறிமுறையில் பெண்கள் பங்கு குறித்து கண்காட்சி

யாழ்ப்பாணம், ஓக. 20

நிலைமாற்றுகால நீதிப் பொறிமுறையில் பெண்களுக்கான வகிபங்கு தொடர்பான கலைக் கண்காட்சி நேற்று ஆரம்பமாகியது.

போக்கஸ் வுமன், வோண்ட் மற்றும் பாதிப்புற்ற பெண்கள் அரங்கத்தினால், நல்லூர் மங்கையர்க்கரசி மகா வித்தியாலயத்தில் முற்பகல் 11 மணிக்கு இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் தென்பகுதிக் கலைஞர்களின் பொருள்களும் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. நாடகச் செயற்பாட்டுக் குழுவினரின் ஆற்றுகையும் இடம்பெற்றது.

அத்துடன் சுஜீவா குமாரி என்ற சமூகவியலாளர் உடலை ஊடகமாகப் பயன்படுத்தி விழிப்புணர்வு ஆற்றுகை ஒன்றையும் நடத்தினார். இந்த நிகழ்வு இரண்டாவது நாளாக இன்றும் நடைபெறும். (த-ரி4)

## முன்னாள் போராளிகள் உயிரிழப்பு:
# விச ஊசி விசாரணைக்கு விவரங்களைத் தாருங்கள்
## வடக்கு முதலமைச்சரிடம் கேட்கிறார் மனோ கணேசன்

யாழ்ப்பாணம், ஓக. 20

புனர்வாழ்வளிக்கப்பட்ட போராளிகளுக்கு விச ஊசி மருந்து ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் ஆராய்ந்து மேல் நடவடிக்கை எடுக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகவும், எனவே அதற்கான விவரங்களைத் தருமாறும் தேசிய சகவாழ்வு அமைச்சர் மனோ கணேசன் வடக்கு மாகாண முதலமைச்சருக்கு அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் முதலமைச்சருக்குக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சரணடைந்த அல்லது கைது செய்யப்பட்ட விடுதலைப் புலி உறுப்பினர்களுக்கு, புனர்வாழ்வு நடவடிக்கைகளின்போது விச ஊசி செலுத்தப்பட்டதாகவும், அதனால் பலர் சந்தேகத்துக்குட்பட்ட முறையில் உயிரிழந்துள்ளதாகவும் கூறி வடக்கு மாகாண சபையில் ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இது பாரதூரமான குற்றச்சாட்டு, இவ்வாறு சுமார் 105 பேர் இதுவரையில் உயிரிழந்துள்ளதாக ஒரு தகவல் கூறப்பட்டது.

இதுதொடர்பில் நல்லிணக்க ஆணைக்குழுவிலும் ஒரு முன்னாள் போராளியால் சாட்சியம் அளிக்கப்பட்டுள்ளது. இருப்பினும் உங்கள் மாகாண சபையின் அமைச்சர் டெனீஸ்வரன் இந்த விடயம் தொடர்பில் மாறுபட்ட கருத்தைத் தெரிவித்து வருவதையும் உங்கள் கவனத்துக்குக் கொண்டுவருகிறேன்.

எனவே இது தொடர்பான தகவல்களை, உங்கள் மாகாண சுகாதார அமைச்சின் மூலமாகப் பெற்றுத் தரும் சந்தர்ப்பத்தில் அடுத்த கட்ட நகர்வுகள் தொடர்பில் முடிவு செய்யப்படும்.

உங்களால் தரப்படும் தகவல் திரட்டில் புனர்வாழ்வு பெற்று வீடு திரும்பிய பின்னர் சந்தேகத்துக்கிடமான முறையில் உயிரிழந்ததாகக் கூறப்படும் முன்னாள் போராளிகளின் பெயர்கள், அடையாள அட்டை இலக்கம், கடைசியாக வாழ்ந்த விலாசம், பிரதேச செயலாளர் பிரிவு, உயிரிழந்தபோது அவர்களின் வயது, அவர்களது இறப்புக்கான அதிகாரப்பூர்வ மருத்துவக்காரணம், இறந்த திகதி, தொடர்பு கொள்ளக்கூடிய குடும்ப உறுப்பினரின் பெயர், விலாசம், தொலைபேசி இலக்கம் ஆகியவை உள்ளடங்கியிருத்தல் வேண்டும்.

மேற்கண்ட தகவல்கள் கிடைக்குமானால், அது தொடர்பில் காத்திரமான மேல் நடவடிக்கைகள் எடுக்க முடியும் என நான் நம்புகிறேன்.

ஏனையோருக்கு மருத்துவப் பரிசோதனை செய்யப்படவேண்டும் என்ற கோரிக்கையை, இத்தகைய தகவல்கள் மேலும் வலுவடைய செய்யும். இத்தகைய சம்பவங்கள் நடைபெறவில்லை என வடக்கிலும், தெற்கிலும் கூறி வருவோருக்கும் இது பதிலாக அமையும். அத்துடன் இந்தத் தகவல்கள் முழுமையாக இல்லாத பட்சத்தில் இந்தக் குற்றச்சாட்டு ஏற்புடைமை கொண்ட ஒரு குற்றச்சாட்டாக ஏற்றுக்கொள்ளப்படுவதில் சிக்கல் இருக்கின்றது என்பதை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என நான் நம்புகிறேன்- என்றுள்ளது. (த-4-101)

## கனடாவிலிருந்து வந்த சாட்சியின் பாதுகாப்புக்காக எதிரிக்கு மறியல்
### நீர்வேலி இரட்டைக் கொலை வழக்கில்

யாழ்ப்பாணம், ஓக. 20

கொலை வழக்கில் சாட்சியமளிப்பதற்காகக் கனடாவிலிருந்து வந்தவர் பாதுகாப்புக் கோரியதையடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவர் மீண்டும் விளக்கமறியலில் வைக்கப்பட்டார்.

குறித்த நபர், சகோதரியையும் மைத்துனரையும் கொலை செய்ததுடன் மருமகனைக் காயப்படுத்திக் கொலை செய்ய முயற்சி செய்தார் எனக் குற்றம் சாட்டப்பட்டது. இந்தக் கொலையை அடுத்து வழக்கின் சாட்சி கனடாவுக்குச் சென்றிருந்தார்.

அந்த வழக்கு யாழ். மேல்நீதிமன்றில் விசாரணையில் உள்ளது. வழக்கில் சாட்சியமளிப்பதற்காகச் சாட்சி கனடாவில் இருந்து யாழ்ப்பாணம் வந்திருந்தார். எனினும் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர் பிணையில் உள்ளார். அதனால் அவரால் ஆபத்து வரலாம் என்று சாட்சி தெரிவித்ததையடுத்து குற்றஞ்சாட்டப்பட்டவரை விளக் கமறியலில் வைக்க நீதிமன்று உத்தரவிட்டது.

நீர்வேலி மேற்கில் 2011ஆம் ஆண்டு மார்க்கண்டு உதயகுமார் என்பவரையும், அவருடைய மனைவியாகிய உதயகுமார் வசந்திமாலா என்பவரையும் கொலை செய்ததுடன், அவர்களின் மகனான உதயகுமார் குகதீபனைக் காயப்படுத்தி, அவர் மீது கொலை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாக குணா என்றழைக்கப்படும் அருணாசலம் குகனேஸ்வரன் என்பவருக்கு எதிராகச் சட்டமா அதிபரினால் யாழ். மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. அந்த வழக்கு விசாரணை எதிர்வரும் 29ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மேல் நீதிமன்ற நடவடிக்கைகளுக்கு விடுமுறை அளிக்கப்பட்டிருந்த நிலையில், சாட்சி கடந்த வியாழக்கிழமை யாழ். மேல் நீதிமன்றத்துக்குச் சென்று இந்தக் கொலை வழக்கில் சாட்சியமளிப்பதற்காக, தான் கனடாவில் இருந்து வந்துள்ளதாகவும், தனக்கு உயிரச்சுறுத்தல் இருப்பதாகவும், மேல் நீதிமன்றத்தின் விடுமுறைக் காலம் முடிவடைந்து வழக்கில் சாட்சியமளித்துவிட்டுத் தான் கனடாவுக்குத் திரும்பும் வரையில் தனக்குப் பாதுகாப்பு வழங்கப்படவேண்டும் என்றும் முறையீட்டுக் கோரிக்கை ஒன்றை மேல் நீதிமன்றில் முன்வைத்தார்.

இதனையடுத்து, சாட்சிகள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ், சாட்சிகள் சுதந்திரமாகச் சாட்சியமளிப்பதற்கும், அச்சுறுத்தல் இல்லாமல் சாட்சியமளிப்பதற்கும் ஏதுவாக எதிரிக்கு வழங்கப்பட்ட பிணை உத்தரவை இடைநிறுத்தி உடனடியாக அவரைக் கைது செய்யுமாறு கோப்பாய் பொலிஸாருக்கு யாழ். மேல் நீதிமன்றம் உத்தரவிட்டது.

மறுநாள் குறித்த சந்தேகநபர் கைது செய்யப்பட்டு யாழ் மேல் நீதிமன்ற நீதிபதியிடம் முற்படுத்தப்பட்டார். அவரை எதிர்வரும் 29ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி இளஞ்செழியன் பொலிஸாருக்கு உத்தரவிட்டார். (த-4)

## நடைமுறைகளைப் பின்பற்றி நோய்த் தொற்றை தவிருங்கள்
### போதனா வைத்தியசாலைப் பணிப்பாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக. 20

யாழ். போதனா வைத்தியசாலையில் பின்வரும் நடைமுறைகளை பின்பற்றுமாறு வைத்தியசாலைப் பணிப்பாளர் த.சத்தியமூர்த்தி கேட்டுள்ளார்.

விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடுபவர்கள் காலை 6 மணியிலிருந்து 6.30 மணிவரையும், நண்பகல் 12 மணியிலிருந்து ஒரு மணி வரையும், மாலை 5 மணியிலிருந்து 6 மணிவரையும் பார்வையிடவேண்டும். காலையில் நோயாளர்களுக்கு உணவு வழங்க மாத்திரம் அனுமதிக்கப்படும்.

விடுதியில் நோயாளியைச் சேர்க்கும்போது நோயாளியுடன் ஒருவர் மாத்திரம் உட்செல்ல முடியும்.

விடுதிகளில் தங்கிச் சிகிச்சை பெறும் நோயாளர்களைப் பார்வையிடுவதற்கு ஒரே நேரத்தில் ஒரு நோயாளியின் அருகே இரு பார்வையாளர்கள் மாத்திரம் அனுமதிக்கப்படுவது கட்டாயமாக்கப்பட்டுள்ளதோடு மேலதிகமாக வருகை தரும் பார்வையாளர்கள் முன்னர் பார்வையிட்டவர்கள் வெளியே வந்ததும் பார்வையிடலாம்.

சிறுவர்கள், முதியவர்கள் மிக இலகுவில் நோய்த் தொற்றுக்கு உள்ளாகும் சந்தர்ப்பங்கள் உள்ளதால், இவர்கள் இயன்றவரை விடுதிகளில் பார்வையாளர்களாக வருவதைத் தவிர்த்துக் கொள்ளவேண்டும்.

தீவிர சிகிச்சைப் பிரிவு, அதி தீவிர சிகிச்சைப் பிரிவு, பிரசவ விடுதிகள், குழந்தை விடுதி போன்றவற்றில் சிகிச்சை பெறுபவர்கள் தீவிர மருத்துவக் கண்காணிப்புக்குள் உள்ளதால் இயன்றவரை மேற்படி பகுதிக்குப் பார்வையாளர்களாக வருவதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும் எனப் பணிப்பாளர் அறிவித்துள்ளார். (த-ரி)

## நல்லூரில் இன்று

யாழ்ப்பாணம், ஓக. 20

நல்லூர் ஆலய பெருந் திருவிழாவை முன்னிட்டு ஆலயச் சூழலில் தெய்வீக இசை நிகழ்ச்சிகள் மற்றும் ஆன்மிக உரைகள் என்பன நடைபெற்று வருகின்றன.

இன்று சனிக்கிழமை 13 ஆம் நாள் திருவிழாவில் நல்லூர் முத்துவிநாயகர் ஆலய மண்டபத்தில் பாடும் பணியே பணியாய் அருள்வ எனும் தலைப்பில் சமூக சேவை உத்தியோகத்தர் வே. சிவராசாவின் தெய்வீகச் சொற்பொழிவு மாலை 5 மணி முதல் இரவு 7.30 மணி வரையும், நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் துர்க்காதேவி இல்லத்தின் அனுசரணையில் தெய்வீக இசையரங்கம் மாலை 6.45 மணி முதல் இரவு 8 மணி வரையும், நல்லை ஆதீன மண்டபத்தில் மொடேர்ண் சர்வதேச இந்து ஆகம கலை, கலாசார நிறுவனத்தின் தெய்வீக இசைச் சங்கமம் இரவு 7 மணிமுதல் 8 மணிவரையும் நடைபெறவுள்ளன. (த-ரி)

## மாட்டினால் சிறுமி காயம்

அக்கராயன் பகுதியில் கட்டி வைக்கப்பட்டிருந்த மாட்டின் அருகில் சென்ற சிறுமி, மாடு சுற்றியதில் கழுத்தில் காயம் எற்பட்டு அக்கராயன் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அதே இடத்தைச் சேர்ந்த இரண்டு வயதுடைய சிறுமியே இவ்வாறு காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். அவர் மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார். (த-101)

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், ஓக.20

யாழ். [illegible]டுக்குளி சாமுண்டாம்பிகா சமேத ஞானவைரவர் ஆலய மகா கும்பாபிஷேகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு நடைபெறவுள்ளது. (தி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதாரப் பரிசோதகர்கள் மீதான குற்றச்சாட்டுக் குறித்து விசாரணை

யாழ்ப்பாணம், ஓக. 20
பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு எதிராகச் சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் ஒரு தரப்பினரின் முறைப்பாடு பெறப்பட்டுள்ளது. மறுதரப்பின் முறைப்பாடும் பெறப்படவுள்ளது. இது தொடர்பான அறிக்கை விரைவில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

சமூக மருத்துவ பீடத் தலைவர் வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படுவதாக மாகாண சுகாதாரத் திணைக்களத் தகவல்கள் தெரிவித்தன.

யாழ். மாவட்டச் செயலகத்தில் கடந்த தவணை நடைபெற்ற மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது ஒரு தனியார் யூஸ் உற்பத்தி நிலைய உரிமையாளர் குற்றச்சரட்டுக்களை முன்வைத்தார். அதில் குடாநாட்டின் பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள் பலர் கையூட்டுக்கள் பெறுவதாக அவர் குற்றம் சாட்டியிருந்தார்.

இதனைச் செவிமடுத்த வடக்கு மாகாண முதலமைச்சர், இது குறித்து சுகாதாரத் திணைக்களம் உடன் விசாரணை மேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்கவேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இது தொடர்பில் சுகாதாரத் திணைக்களத்திடம் கேட்டபோது, குடாநாட்டுப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களுக்கு எதிராக சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுத் தொடர்பில் துறை சார்ந்த சமூக மருத்துவ பீடத் தலைவர் வைத்திய கலாநிதி சுரேந்திரகுமார் தலைமையில் விசாரணைகள் முன்னெடுக்கப் படுகின்றன.

இந்த விசாரணைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுக் குற்றச்சாட்டை முன்வைத்தவரின் அறிக்கை பெறப்பட்டுள்ளது. அதேபோன்று தற்போது மறுதரப்பிடம் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தக் குழுவில் 5 பேர் அங்கம் வகிக்கின்றனர். விரைவில் விசாரணை பூர்த்தி செய்யப்பட்டு நீதியான அறிக்கை சமர்ப்பிக்கப் படும்–என்றார். (த–101)

# தர நிர்ணய சான்றிதழ் அற்ற தலைக்கவசங்களுக்குத் தடை

## செப்ரெம்பர் முதல் நடைமுறைக்கு

கொழும்பு, ஓக.20
இலங்கையின் தர நிர்ணய (எஸ்.எல்.எஸ்) சான்றிதழ் அற்ற மோட்டார் தலைக் கவசங்களை விற்பனை செய்வோருக்கு எதிராக எதிர்வரும் செப்ரெம்பர் முதலாம் திகதியிலிருந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் அலுவல்கள் அதிகார சபை தெரிவித்தது.

தலைக் கவசங்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் மோட்டார் சைக்கிளின் தலைக் கவசங்களுக்கு எஸ்.எல்.எஸ். 517 தர முத்திரை கட்டாயப்படுத்தி வர்த்தமானி அறிவித்தல் விடுக்கப்பட்டது.

நாட்டில் மோட்டார் சைக்கிள் விபத்துக்கள் அதிகம் பதிவாகியுள்ளன. உயிரிழப்புக்களும் அதிகளவில் இடம் பெற்றுள்ளன. அதற்கு தரமற்ற தலைக் கவசம் காரணமும் என்பதால் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. (வ–5)

# கனடாவில் வாழும் தமிழரைத் தேடுகிறது பன்னாட்டுப் பொலிஸ்

டொரண்டோ, ஓக.20
பன்னாட்டுரீதியாக தேடப்படும் பயங்கரவாத நடவடிக்கைளுடன் தொடர்புடையதாகக் கூறப்படும் இலங்கைக் குடிமகன் ஒருவர் தற்போது கனடாவில் குடியுரிமை பெற்று வாழ்ந்து வருவதாக கனடாவின் ஊடகமான சீடிவி செய்தி வெளியிட்டுள்ளது.

ரவிசங்கர் கனகராஜா என்ற 43 வயதுடைய இலங்கை குடிமகனுக்கு கடந்த 2010ஆம் ஆண்டு பன்னாட்டு பொலிஸாரினால் பிடியாணை பிறப்பிக்கப்பட்டது. இதனால் பன்னாட்டு பொலிஸாரின் தேடப்படுவோர் பட்டியலில் அவர் தொடர்ந்தும் இடம்பெற்றுள்ளார். தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்காக வடகொரியாவில் இருந்து கப்பல்கள் மூலம் ஆயுதங்களைக் கடத்தினார் என்று அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டது.

இந்நிலையில் அந்த நபர் தற்போது கனேடிய குடியுரிமை பெற்று டொரண்ரோ பகுதியில் வாழ்வதாக அவரது வழக்கறிஞர் கோப்லன் கனேடிய தொலைக்காட்சி சேவைக்குக் கூறினார் என அந்த செய்தியில் கூறப்பட்டுள்ளது. (வ–5)

# இசை நாடகங்கள் மேடையேற்றம்

அளவெட்டி, ஓக.20
அளவெட்டி நாகவரத நாராயணர் கோயில் வருடாந்த மகோற்சவ காலத்தில் யாழ்ப்பாணம் நாட்டார் வழக்கியற் கழகத்தினரால் புராண இசை நாடகங்கள், கூத்துக்கள் மேடையேற்றப்பட்டு வருகின்றன என கழகத்தினர் தெரிவித்தனர்.

தினமும் மாலை 7.30 மணி தொடக்கம் 10 மணிவரை ஆலய முன்றிலில் நடைபெறும் இந்த நிகழ்வுகளில் இன்று சத்தியவான் சாவித்திரியும், நாளை ஞாயிற்றுக்கிழமை இரா்வணேசன் கூத்தும் நாளைமறுதினம் திங்கட்கிழமை அரிச்சந்திர மயான காண்டமும் மறுநாள் செவ்வாய்க்கிழமை காத்தவராயன் கூத்தும் இடம்பெறும் என கழகத்தினர் அறிவித்தனர். (வ)

# மாதாந்த ஒன்றுகூடல்

தேசிய தேசோதய சபையின் மாதாந்த ஒன்று கூடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்குச் சர்வோதய அமைப்பின் அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டத்தில் சமாதான நீதிவான்களுக்கான விதிமுறைக் கையேடு வழங்கப்படவுள்ளதாகவும், இதுவரை இணைந்து கொள்ளாத யாழ். மாவட்ட சமாதான நீதிவான்கள் இதில் இணைந்து கொள்ள முடியுமெனவும் தெரிவிக்கப்பட்டது. (த–135)

அடுத்த செவ்வாய்க்கிழமை சுப்பர் பரிசுப் பொதி
ரூ. 91,507,280/-
038
2016.08.49
கோடீபதி
ஆங்கில எழுத்து மற்றும் வெற்றி இலக்கங்கள்
H 12 20 23 49
தொ.இல: 011 4 062 002 / 011 4 062 062 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SF என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்.
அல்லது துரித அழைப்பு: 011 4 824 824

இம்முறை தனயோகம் உங்களுடையதா?
திகதி 19.08.2016
வெற்றி வாரம் 2019
சிகப்பு
கும்பம்
வெற்றி இலக்கங்கள்
30 37 44 49
ஞாயிற்றுக்கிழமை வெற்றிப்பொதி
ரூ 4,500,800 /-

நியத்த ஜய
489
19.08.2016
நீலம்
07 27 47 59 G
11,824,020/=
2016.08.23
Tel: 011 4 824 824

**பெண் சமையலாளர் தேவை**

நல்ல சமையல் தெரிந்த 40 - 55 வயதுக்குட்பட்ட பெண் சமையல் ஆள் தேவை. மாதம் 12000/= வழங்கப்படும்.
தொடர்பு - 076 7011645

**தேவை MANAGER**

சர்வதேச English பரீட்சைக்கு ஆயத்தப்படுத்தும் English College இற்கு ஒரு பெண் Manager தேவை. A/L வரை படித்திருக்க வேண்டும். தகுந்த சம்பளம் வழங்கப்படும். C.V உடன் நேரில் வரவும்.
BRITISH COLLEGE OF ENGLISH
192. Navalar Road-Jaffna
T.P: 021 222 0384, 077 8803887

## அரசாங்க அறிவித்தல்
## மாவட்டசெயலகம் யாழ்ப்பாணம்
## கேள்வி கோரல்

யாழ் மாவட்டச்செயலகத்தால் 13.08.2016 ஆம் திகதியன்று உதயன் பத்திரிகையில் 4ஆம் பக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரத்தில் **"கேள்விகள் 09.08.2016 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும்"** எனப் பிரசுரமானதை **"29.08.2016 ஆம் திகதி பிற்பகல் 2.30 மணிக்கு திறக்கப்பட்டு ஆராயப்படும்"** எனத் திருத்தி வாசிக்கவும்.

நா. வேதநாயகன்,
மாவட்டச் செயலரும், அரசாங்க அதிபரும்.
யாழ் மாவட்டம்.

## INVITATION FOR BID
## District Secretariat, JAFFNA

1. The Chairman, District Secretariat Procurement Committee on behalf of the Jaffna Municipal Council, invites sealed bids from eligible and qualified bidders for the Construction works described in the table below.
2. Bidding will be conducted through National Competitive Bidding (NCB) Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered in the field of building construction for grade mentioned in the table below with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Interested bidders may obtain further information from **District Secretariat, Jaffna ( T.No: 021-222 2427)** and inspect the bidding documents at the same place on any working days from 9.00 hrs to 15.00 hrs. from 20.08.2016.
5. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **District Planning Secretariat, District Secretariat, Jaffna from 20.08.2016 until 02.09.2016 from 9.00 hrs to 14.00 hrs upon payment of a non-refundable fees of Rs.1,000.00** The method of payment should be by cash.
6. Bids shall be delivered to the address at **District Secretariat, Kandy Road, Jaffna on or before 05.09.2016 and 15.00 hrs.** Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend.
7. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Table.
8. The pre-bid meeting will be held on **29.08.2016** at **15.00 Hrs** at the **District Secretariat, Jaffna.**

| Se. no | Bid No | Description of Work | Engineer's Estimated Cost /(Rs in million) | Estimated Cost with all Taxes /(Rs in million) | Contract Period | Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | Security Amount | Valid Period |
| 1 | JMC/WD/02/SP.PRO/2016/02 | Construction of recyclable waste collection cum operation centre at Navanthurai; Renovation of recyclable waste collection cum operation centre at Ariyalai; Construction of recyclable waste store room at Kakaithevu | 3.692 | 4.245 | 6 months | C 8 or above | 42,500.00 | 91 days (till 01.12.2016) |

**N. Vethanayahan,**
Government Agent / District Secretary,
Jaffna District.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

# ஆளும் கட்சி மீதும் வேண்டும் நிதிக் குற்றப் பிரிவு விசாரணை

## கூட்டு எதிர்க்கட்சி கோருகின்றது

நிதிக் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் ஆளும் கட்சி தொடர்பிலான முறைப்பாடுகளும் விசாரணை செய்யப்படவேண்டுமென கூட்டு எதிர்க்கட்சி கோரிக்கை விடுத்துள்ளது.

கூட்டு எதிர்க்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களினால் இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன, விவசாய அமைச்சர் துமிந்த திஸாநாயக்க மற்றும் மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் ஆகியோருக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்த விசாரணைகள் நடத்தப்படவில்லை.

சுகாதார அமைச்சருக்கு எதிராக முறைப்பாடு செய்யப்பட்டு ஒன்றரை ஆண்டுகள் கடந்துள்ள நிலையில் இதுவரை எவ்வித விசாரணைகளும் நடத்தப்படவில்லை. கூட்டு எதிர்க்கட்சியினருக்கு எதிராக மட்டுமே சட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது என்று அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

(த-5)

## ஐ.நா.

தொடர்பில் அன்று இருந்த அரசு தொடர்பில் பன்னாட்டுச் சமூகம் என்ன கூறியது என்று உங்களுக்குத் தெரியும்.

அன்று தலைவர்கள் கிராமம், நகரங்களுக்குச் சென்று பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றம், மின்சாரக் கதிரை பற்றிப் பேசினர். நாம் என்ன செய்தோம் என்று கேட்பவர்களிடம் நான் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன். அன்று கூறிய பன்னாட்டுப் போர்க்குற்ற நீதிமன்றம், மின்சாரக் கதிரை இந்த நாட்டு இராணுவம் உள்ளிட்ட முழு மக்களுக்கும் மீண்டும் பேசமுடியாத வகையில் எமது அகராதியிலிருந்து நீக்கியது என்னுடையதும், ரணில் விக்கிரமசிங்கவினதும் தலைமையிலான அரசும்தான் என்பதை மிகத் தெளிவாகக் கூறவேண்டும். ஒருவேளை, நான் கடந்த ஜனவரியில் வெற்றி பெறாமல், நீங்கள் என்னை வெற்றிபெறச் செய்யாமல் அன்று ஆட்சியிலிருந்த தலைமைத்துவத்துக்கே இந்த நாட்டைக் கொடுத்திருந்தால், இன்று நாட்டுக்கு என்ன நடந்திருக்கும் என்பதை, நாம் என்ன செய்தோம் என்று கேட்கிறவர்களிடம் மிகத் தெளிவாகக் கூறுகின்றேன்.

நாம் ஆட்சியை ஏற்கும்போது, பன்னாட்டு ரீதியில் பொருளாதாரத் தடைபோட்டு முடிந்து விட்டது. ஜி.எஸ்.பி.பிளஸ் வரிச்சலுகை நீக்கப்பட்டு விட்டது. ஐரோப்பிய ஒன்றியம் எமது மீன் ஏற்றுமதிக்குத் தடைபோட்டது. இப்போது நாம் அந்த வெற்றிகளைப் பெற்றுச் செல்கின்றோம். கடந்த அரசே மீண்டும் ஆட்சியில் இருந்திருந்தால், ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி, பன்னாட்டு நாணய நிதியம் உள்ளிட்ட அனைத்தும் எமக்கு வழங்கிய ஆதரவிலிருந்து விலகியிருக்கும். இந்த நாட்டு மக்கள் வீதியில் பிச்சை எடுத்துச் சாப்பிடும் நிலமை ஏற்பட்டிருக்கும். ஒரு பக்கத்தில் 9 இலட்சம் கோடி கடன். மறுபக்கத்தில் பொருளாதாரத் தடைபோட்டு, உலகில் அபிவிருத்தியடைந்த பிரபல நாடுகள் எம்மிடமிருந்து முழுமையாக விலகி, பன்னாட்டு நிதி நிறுவனங்கள் எம்மிடமிருந்து விலகி நாம் உலகில் தனிமைப்படுத்தப்பட்ட நாடாக மாறும் நிலை எமக்கு இருந்தது.

தனிமைப்படுத்தப்படவிருந்த நாட்டை பன்னாடுகள் மற்றும் அமைப்புகளின் நல்லுறவு மற்றும்நட்பினூடாக வெற்றிகொண்டு, இந்தத் தாய்நாட்டுக்கு நல்லெண்ணத்தை என்னாலும் ரணில் விக்கிரமசிங்க அரசாலும்தான் பெற்றுக் கொடுக்க முடிந்தது.

நாம் அரசு என்ற வகையில் பெற்றுக்கொண்டவற்றை வயிறுக்கு உணர முடியாது. (சட்டைப்) பைகளுக்கு விளங்காது என்பது உண்மை. கண்களுக்கும் விளங்காது. ஆனால், மூளை அறிவு, பரிணாமம் நிபுணத்துவம் ஊடாக சமூகத்தையும் உலகத்தையும் புரிந்து கொள்பவர்களுக்கு நாம் பெற்ற வெற்றி என்ன என்பது தெரியும்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் உள்ளவாறு காணாமற்போனோர் அலுவலகத்தை நிறுவுவதற்கான சட்டத்தை நாம் கடந்த வாரம் நாடாளுமன்றில் நிறைவேற்றினோம். நாடாளுமன்றத்துக்கு காலையில் முன்வைத்த சட்டவரைவில் இருந்த சில சாதகமற்ற கருத்துக்களை நானும் பிரதமரும் பேச்சு நடத்தி நீக்கிக் கொண்டோம்.

சட்டத்தை நடைமுறைப்படுத்தும்போது நாடாளுமன்றத்தால் புதிய ஒழுங்கு முறைகள் நிறைவேற்றப்பட வேண்டும் என்பதைத் திருத்தப்பட்ட சட்டத்தில் உள்ளடக்கினோம்.

இந்த அரசை தேசத்துரோகி என்றும், தேசிய பாதுகாப்பை பலவீனப்படுத்துகின்றது என்றும், நாட்டையும் நாட்டு மக்களையும் பற்றி நினைக்காதவர்களே இந்த அரசில் உள்ளனர் என்றும் சில தேசப்பற்றாளர்கள் கூறுகின்றனர். சொல்பவர்களின் பக்கம்தான் இவை அனைத்தும் இருக்கின்றன என்று நான் கூறுவேன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் தீர்மானங்களுக்கு முகங்கொடுக்க முடியாமல், கடந்த வருடம் ஜனவரி 8ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலுக்கு சென்றவர்கள். நாம் கடந்த வருடம் கொண்டு வரவிருந்த தீர்மானத்தை இலகுபடுத்தி நாட்டுக்குப் பெரிய பிரச்சினையை ஏற்படுத்த இருந்த பரிந்துரைகளை நீக்கி, எமக்கு முகங்கொடுக்கக் கூடிய - நடை முறைப்படுத்தக் கூடிய பரிந்துரைகளாக அவற்றை மாற்றினோம்.

பன்னாட்டு சமூகத்துடன் பேச்சு நடத்தி, கடும் நிபந்தனைகளை நீக்கி இந்த நாட்டின் தேசிய பாதுகாப்புக்கும் நாட்டின் இறைமைக்கும் முப்படையினரின் பாதுகாப்புக்கு ஐக்கியத்தைப் பாதுகாக்கும் வகையிலும் அனைத்துத் துறைகளையும் பலப்படுத்தி, அந்தத் தீர்மானத்தை நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை நாம் எடுக்கும்போது, இந்த அரசு தவறிழைக்கிறது, தேசிய பாதுகாப்பை இல்லாது செய்து நாட்டைப் பிளவுபடுத்தி, மேற்குலகுக்கு ஏற்றவகையில் நாட்டை முகாமைத்துவம் செய்வதாகப் பொய்யான தேசப்பற்றாளர்கள் கூறுகின்றனர். கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு என்று உலகின் எந்த வெளிநாட்டு சக்திகளுக்கும் இந்த அரசு அடிபணியாது. அப்படி முகாமைத்துவம் செய்யவும் முடியாது. நாம் அரசு என்ற வகையில் சுயாதீனமாக பக்கச்சார்பற்ற வகையில் செயற்படுவோம். பன்னாட்டுக்கு அச்சமின்றி முகம்கொடுப்போம். எந்த சக்திக்கும் அடிபணியமாட்டோம் என்பதை மிகத் தெளிவாகக் கூறுகின்றேன்.

ஐ.நா. மனித உரிமைகள் சபைத் தீர்மானத்தை நாம் நடைமுறைப்படுத்துவது தொடர்பில் விமர்சனம் முன்வைப்பவர்கள், தயவுசெய்து வெறுமனே பேசாமல், அந்த யோசனைக்கு அவர்களின் மாற்று யோசனையை- அதைத் தீர்க்கும் முறையைத் தருமாறு கேட்கின்றேன். அவசியமான தீர்வை நாட்டு மக்களிடம் முன்வைக்குமாறு நான் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன். அந்த மாற்று யோசனை என்ன என்பதை எமக்கும் பார்க்க முடியும்.

சத்தம் போட முடியும். வீதியில் செல்ல (யாத்திரை) முடியும். ஆனால், அவர்கள் உருவாக்கிய பன்னாட்டுப் பிரச்சினை, பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்க நாம் பொறுப்பேற்றுள்ளோம். அதற்கு நாம் முகங்கொடுப்போம் - என்றார் ஜனாதிபதி மைத்திரிபால.

(வ-5)

## மகிந்தவின்...

விடுத்தார்.

“ஆட்சியைக் கைப்பற்றுவதற்காக புதிய கட்சியை ஆரம்பிக்கும் முயற்சியில் ஈடுபடுகின்றனர். அதன் பின்னர் அவர்கள் வீதியில் செல்ல முடியாத நிலையே ஏற்படும்.

2015 ஜனவரி மாதம் இடம்பெற்ற சூழ்ச்சிகளைத்தான் நாம் இப்போது அம்பலப்படுத்துகிறோம். இவ்வாறான நிலையில் புதிய கட்சியை ஆரம்பித்தால், இதுவரை காலமும் வெளிப்படுத்தப்படாத பல இரகசியங்கள் வெளியிடப்படும். அப்போது அவர்களின் தேசப்பற்று சாயம் கரைந்து விடும்” என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

(வ-5)


### யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை

### வான் (Hiace) ஒன்றினை வாடகைக்கு வழங்கக் கூடியவர்களிடமிருந்து கேள்விப் பத்திரங்கள் கோரல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின். அறிவியல் நகர் கிளிநொச்சியில் அமைந்துள்ள தொழில்நுட்ப பீடத்தின் (Faculty of Technology) உத்தியோகபூர்வ தேவைக்காக ஆங்கில இலக்கப் பதிவுடைய குளிரூட்டல் வசதியுடன் கூடிய வான் ஒன்றை கிலோமீற்றர் அடிப்படையில் வாடகைக்கு வழங்கக்கூடிய வாகன உரிமையாளரிட மிருந்து விலைமனு கோரப்படுகின்றது.

**வான் (Hiace) குளிரூட்டல் வசதியுடன்**

மேற்குறிப்பிட்ட வான் சேவையை அவ்வாகனத்துக்கான சாரதி. எரிபொருள். காப்புறுதி மற்றும் திருத்தவேலைகள் போன்றவற்றுடன் வழங்க வேண்டும். மேலும் வாகனத்தின் முதற்பதிவு ஆனது 2011 ஆம் ஆண்டுக்கு பிற்பட்டதாகவும் வாகனத்தின் உற்பத்திக்காலம் 2009 ஆம் ஆண்டுக்கு பின்னரானதாகவும் இருக்கவேண்டும்.

மேற்படி வாகனத்துக்குரிய விண்ணப்ப படிவம் மற்றும் கூறுவிலை ஆவணங்களையும் மேலதிக விவரங்களையும் 01.09.2016 மதியம் 12.00 மணிவரை மீளளிப்புச் செய்யப்படாத வைப்புப்பணமாக ரூபா 500.00 பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் செலுத்திப் பெற்ற பற்றுச்சீட்டை சிரேஷ்ட உதவிப்பதி வாளர் நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

முறையாகப் பூர்த்திசெய்யப்பட்டு அரக்கிடப்பட்ட ஆவணங் களை கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "வான் ஒன்றை வாடகைக்கு வழங்குவதற்கான கேள்வி" என அடையாளமிட்டு 2016.09.02 பிற்பகல் 2.30 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாகப் பதிவுத்தபாலில் **தலைவர், கேள்விச் சபை, த.பெ.எண் 57, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், திருநெல்வேலி** என்னும் முகவரிக்கு அனுப்பிவைக் கலாம். நேரடியாகச் சமர்ப்பிக்க விரும்புவோர் மேற்குறித்த காலவரை யறைக்குள் பதிவாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியினுள் இடலாம்.

கேள்வி மனுக்கள் 2016.09.02 அன்று பி.ப. 3.00 மணிக்கு திறக்கப்படும். மனுதாரர்கள் அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் கேள்விமனுக்கள் திறக்கப்படும் இடமான சபா மண்டபத்துக்கு சமுகமளிக்கலாம். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தலைவர்,**
**கேள்விச்சபை,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.** (சி.24996) (13.18.17)



### அறிவித்தல்

### நல்லூர் பிரதேச சபை, நல்லூர் உப அலுவலகம் ஆதனப் பெயர்மாற்றம்

**81, சிவன்கோவில் வீதி,**
**வட்டாரம் - 08**

நல்லூர் பிரதேச சபைக்குட்பட்ட நல்லூர் உப அலுவலக வட்டாரம் - 08 இல 81, சிவன்கோவில்வீதி எனும் ஆதனம் எமது பதிவேட்டின் பிரகாரம் சொ.உ.கோ.விஜயகுமார் பெண் செல்வராணி எனும் பெயரில் காணப்படுகின்றது. வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று திருநெல்வேலி இறை "நெல்லியடி வளவு" நில.பர 1 ½ இது நில அளவையாளர் கே.கனகசபை அவர்களால் வரையப்பட்ட 9351 ஆம் இலக்கப் படத்தில் சுட்டிய 1ஆம் இலக்கத் துண்டின்படி நிலப்பரப்பு 0 குளி 14.76 . இது சட்டத்தரணியும் பிரசித்த நொத்தாரிசுமான கனகரட்ணம் கேசவன் அவர்களால் வரையப்பட்ட 6909/07.12.2003 ஆம் இலக்க உறுதி மூலம் வல்லிபுரம் கைம்பெண் பராசக்தி என்பவரால் கதிரவேலு விஜயகுமார் பெண் செல்வராணி என்பவருக்கு சீதனமாக வழங்கப்பட்டது. பின்பு இவ் ஆதனம் இதே நொத்தாரிசுவால் வரையப்பட்ட 9351/ 25.03.2006 ஆம் இலக்க உறுதி மூலம் கதிரவேலு விஜயகுமார் பெண் செல்வராணி ஆகியோரால் யோகரட்ணம் இராஜ்குமார் பெண் குமுதினி என்பவரிற்கு சீதனமாக வழங்கப்பட்டது

பின்பு இவ் ஆதனம் இதே நொத்தாரிசுவால் வரையப்பட்ட9964/ 01.06.2007 ஆம் இலக்க அறுதி உறுதி மூலம் யோகரட்ணம் இராஜ்குமார் பெண் குமுதினி என்பவர்களிடமிருந்து இளையதம்பி தியாகராசாவும் பெண் தவமணியும் என்பவர்களை வந்தடைந்தது.

கனகரட்ணம் கேசவன் அவர்களால் வரையப்பட்ட தாயுறுதியான 6909/07.12.2003 ஆம் இலக்க உறுதியில் அதன் தாயுறுதியின் இலக்கம் குறிப்பிடப்படாமல் நெடுங்காலத் தடையற்ற ஆட்சியுடையது என்றே குறிப்பிடப்பட்டுள்ளது.

நல்லூர் பிரதேச சபையின் ஆதனப்பதிவேட்டில் குறித்த ஆதனத்தினை தனது பெயரிற்கு மாற்றம் செய்து தருமாறு **இளையதம்பி தியாகராசாவும் பெண் தவமணியும்** என்போர் விண்ணப்பித்துள்ளனர்.

இவ் ஆதனப்பெயர் மாற்றம் தொடர்பாக ஆள்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் **உரிய ஆவணங்களுடன் 30 நாட்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும்** அவ்வாறு உரிமை கோராதவிடத்து குறித்த ஆதனமானது இளையதம்பி தியாகராசாவும் பெண் தவமணியும் என்பவர்களுக்கு பெயர்மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர் மாற்றத்தால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் நல்லூர் பிரதேச சபை பொறுப்பாளியல்ல என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

திருமதி.தி.அன்னலிங்கம்
செயலாளர்
நல்லூர் பிரதேச சபை
2016.08.20 (சி.24989)(13.18)



### காணி தேவை

யாழ் நகரில் இருந்து 03 கி.மீ சுற்றளவிற்குள் 05 பரப்பிற்கு குறையாத காணி வீதி முகப்புடன் தேவை. (J 3865) (14,17,18)

**தொடர்பு: 077 997 6869**

### தவறிவிட்டது

முரசுமோட்டையில் இருந்து பரந்தன் சந்தி வரையுள்ள பிரதான வீதியில் தேசிய ஆள்அடையாள அட்டை. வாகன அனுமதிப்பத்திரம். வரி( Tax). காப்புறுதி அடங்கிய கைப்பை தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (J 3866) (14,17,18)

**077 167 9244(S.ஜெயரூபன்)**

### தேவை

- அனுபவம் வாய்ந்த திடகாத்திரமான மேசன் தேவை.
- நிரந்தரமான வேலை.
- சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும்.

தகுதியானவர்கள் நேரில் வரவும். (J 3874) (14,17,18)

பிள்ளையார் இன்
இல 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இராணுவ மண் அணை இருந்த வயல்களில் இம்முறை நெற்செய்கை

## யாழ். மாவட்டச் செயலகம் நடவடிக்கை

தென்மராட்சி, ஓக. 20
தென்மராட்சிப் பிரதேசத்தில் படையினரின் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் இருந்தவேளை அமைக் கப்பட்ட மண் அணைகளால் நெற்செய்கை மேற் கொள்ளப்படாத வயல்களில் இவ்வருட காலபோகச் செய்கையை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் யாழ்.மாவட்டச்செயலகத்தினால் மேற்கொள்ளப்பட்டு துரித கதியில் நடைபெற்று வருகின்றன.
படையினரால் அமைக்கப்பட்ட மண் அணையினால் வெள்ளம் வழிந்தோட முடியாமல் பாதிக்கப்பட்டிருந்த நெற்செய்கையாளர்கள் இவ்வருட நெற்செய் கையைச் சிரமமின்றி மேற்கொள்ள முடியும் எனக் கூறப்பட்டுள்ளது.
இராணுவ மண்அணையினால் பாதிக்கப்பட்ட எழுதுமட்டுவாழ் தெற்குப் பகுதியில் கனரக வாக னங்கள் மூலம் அணைகள் அப்புறப்படுத்தப்பட்டு உரிய காணிகள் அவற்றின் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளன .
இதனையடுத்து கரம்பகம், தனங்களப்பு பகுதிகளில் உள்ள மண் அணைகளையும் அப்புறப்படுத்தும் பணிகள் ஆரம் பிக்கப்பட்டுள்ளன. இப் பகுதிகளில் மண் அணைகள் அப்புறப்படுத்தப்பட்டதும் எழுது மட்டுவாழ் வடக்குப் பகுதியில் காணப்படும் மண் அணைகள் அகற்றப்படவுள்ளதாகவும் தெரி விக்கப்பட்டது.
மீள்குடியேற்ற அமைச்சின் அனுசரணையுடன் யாழ்.மாவட்டச் செயலகத்தின் வழிநடத்தலில் மண் அணைகள் அப்புறப்படுத்தும் பணிகள் இடம் பெற்றுவருகின்றன.
தென்மராட்சிப் பிரதேச செயலக அதிகாரிகள் முன் னிலையில் இந்தப் பணிகள் நடைபெறுவதாகக் கூறப்பட்டது. (த-9)

# மயானங்களின் அபிவிருத்திக்கு பதிவு நடவடிக்கை கட்டாயம்


யாழ்ப்பாணம்,ஓக.20
வலி.கிழக்குப் பிரதேச சபைக்கு உட்பட்ட பகுதிகளில் உள்ள மயானங்களின் அபிவிருத்திச் சங்கங்கள், கட்டாயம் சபையில் பதிவை மேற்கொள்ளவேண்டும் என்று சபைச் செயலாளர் அறிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:-
அபிவிருத்திச் சங்கங்கள் தம்மைச் சபையில் பதிவு செய்வதன் மூலமே மயா னங்களின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள முடியும். சபைக்கு உட்பட்ட பகுதியில் 34 மயானங்கள் உள்ளன. இதில் ஏழு மயா னங்களே வலி.கிழக்குப் பிர தேச சபையில் பதிவை மேற் கொண்டுள்ளன. ஏனைய 27 மயானங்களும் இது வரை பதிவை மேற் கொள்ள வில்லை.
மயானங்களுக்கு நிர்வாகக் கட்டமைப்புக்களை ஏற் படுத்தி அவற்றை சபையில் பதிவு செய்வதற்கு சமூக ஆர்வலர்கள் முன்வர வேண் டும்-என்றார். (த-17)

பன்னாலை - தெல்லிப்பழை
வரத்தலம் கற்பக விநாயகர் தேவஸ்தானம்
மஹோற்சவ விஞ்ஞாபனம் - 2016

| | | | |
|---|---|---|---|
| 21.08.2016 | ஞாயிறு | 10.30 மணி | கொடியேற்றம் |
| 28.08.2016 | ஞாயிறு | 3.30 மணி (பி.ப) | வேட்டைத்திருவிழா |
| 30.08.2016 | செவ்வாய் | 8.00 மணி (இரவு) | சப்பைரதம் |
| 31.08.2016 | புதன் | 9.00 மணி (காலை) | இரதோற்சவம் |
| 01.09.2016 | வியாழன் | 10.00 மணி(காலை) | தீர்த்தம் |
| 02.09.2016 | வெள்ளி | 9.00 மணி (காலை) | பிராயச்சித்தம் |
| | | 3.00 மணி (மாலை) | வைரவர்பொங்கல் |

குறிப்பு:
கொடியேற்றம் பொது உபயமாக நடைபெறுவதால் அன்பர்கள் தங்களால் இயன்ற நிதியுதவியோ அல்லது பொருள் உதவியோ செய்யும்படி வேண்டுகின்றோம்.

ம.மகேந்திரசர்மா
ஆதீனகர்த்தா



20 பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கு நேற்றுக் கிளிநொச்சியில் வீடமைப்பு அதிகார சபையினால் வீட்டுக்கடன் வழங்கப்பட்டது. கிளிநொச்சி வீடமைப்பு அதிகார சபை அலுவலகத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இதில் கிளிநொச்சி மாவட்ட மேலதிகச் செயலர் எஸ்.சத்தியசீலன் கலந்துகொண்டு காசோலைகளை வழங்கினார். (தி)

## திருப்பீட அபிசேக திறப்புவிழா

கொழும்புத்துறை, ஓக.20
குருநகர் புனித ஆரோக் கியநாதர் ஆலய புதிய திருப்பீட அபிஷேக திறப்பு விழா இன்று சனிக்கிழமை மாலை 5 மணிக்கு நடை பெறவுள்ளது.
புதிதாக நிர்மாணம் செய் யப்பட்ட திருப்பீடத்தை யாழ். ஆயர் மேதகு ஜஸ் ரின் பேணாட் ஞானப் பிர காசம் ஆண்டகை திறந்து வைத்து திருப்பலியை ஒப்புக் கொடுப்பார். ஆலய வருடாந்ததிருவிழா இன்று மாலை கொடி யேற்றத் துடன் ஆரம்பமாகவுள்ள தாக நிர்வாகத்தினர் தெரி வித்தினர். (த-135)

# பாழடைந்த வயல் கிணறுகளை புனரமைப்பதற்கு நடவடிக்கை

## மறவன்புலவுப் பிரதேசத்தில்

தென்மராட்சி ஓக. 20
தென்மராட்சி தெற்குப் பிரதேசத் தில் மறவன்புலவுப் பகுதியில் காலபோக நெற்செய்கையின் பின்னர் விவசாயம் செய்வ தற்கென, பழுதடைந்து காணப் பட்ட இரு கிணறுகள் இரண்டு லட்சம் ரூபா செலவில் புதுப்பிக் கப்பட்டு விரைவில் கையளிக் கப்படவுள்ளன.
முதலில் மறவன்புலவு வள்ளக் குளம் பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் வயலுக்குள் சேத மடைந்த நிலையில் காணப்பட்ட கிணறு புனரமைக்கப்பட்டுள்ளது.
இந்தக் கிணற்றை அண்டிய பகுதியில் உள்ள வயல் உரிமை யாளர்கள் காலபோக நெற் செய்கையின் பின்னர் விவசாயம் மேற்கொள்ள அனுமதிக்கப் படுவர்.
மறவன்புலவு திருமகள் ஐக்கிய நாணய சங்கத்தின் வேண்டு கோளின் பிரகாரம் யாழ்.பல் கலைக்கழக விலங்கியல் பீடத்தி னர் ஐக்கிய நாடுகள் அபிவிருத் தித் திட்ட நிறுவனத்தின் அனு சரணையுடன் கிணறுகளைப் புனரமைத்துள்ளனர்.
தென்மராட்சி தெற்குப் பகுதியில் காலபோக நெற்செய்கை மேற் கொள்ளப்பட்ட வயல்களில் உப உணவுப் பயிர்ச் செய்கை மட்டும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.
வயல்களுக்குள் காணப்படும் கிணறுகளில் விவசாயத்திற்குத் தேவையான தண்ணீர் வசதி குறைவாகக் காணப்படுவதால் விவசாயம் மேற்கொள்ள முடி யாத நிலை காணப்பட்டது.
இந்த விடயம் தொடர்பாக அங் குள்ள ஐக்கிய நாணய சங்கத்தி னர் விடுத்த வேண்டுகோளை யடுத்து யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் பீடத்தின் பங் களிப்புடன் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தி னர் தமது சிறுகொடைத் திட்டத் தின் கீழ் வறட்சியைத் தாங்கக் கூடிய பயிர்வகைகளைப் பயி ரிட்டுச் சேதனப் பசளைகளின் பாவனையுடன் விவசாயத்தை மேற்கொள்வது தொடர்பான பயிற்சிகளை அப் பகுதியைச் சேர்ந்த 50 குடும்பங்களுக்கு வழங்கியிருந்தனர்.
இதனையடுத்து வயல்களில் பாழடைந்து காணப்பட்ட இரு கிணறுகளை முதற்கட்டமாகப் புனரமைத்து வழங்க [illegible] தெரி விக்கப்பட்டது. (த-9)

மணிவிழா வாழ்த்து




செல்வி கமலநாயகி
கதிர்காமலிங்கம் (அதிபர் தரம் I)
(யா/கொக்குவில் ஸ்ரீ இராமகிருஷ்ண வித்தியாலயம்)
யாழ்.குடாவின் சப்த தீவுகளில் ஒன்றான புங்குடுதீவுதனில்
திரு.திருமதி கதிர்காமலிங்கம் தம்பதிகள் ஈன்றெடுத்த
தவப்புதல்வி கமலநாயகி அதிபர் அவர்கள் மணிவிழா காணும்
திருநாளான நன்நாளாம் இன்று.
கடமையில் சிறந்த கல்வி முகாமையாளராய்
தயை கூர்வதில் தன்நிகரில்லா தாய் போன்றவராய்
முப்பத் தெட்டாண்டுகள் முழு நிறைவாய் சேவையாற்றி
தாய் நாட்டிற்கும் தனக்கும் தன்நிகரில்லா பெருமை சேர்த்து
பூக்களில் எல்லாம் சிறப்பானது கமலம் என்பது போல்
எங்கள் கமலநாயகி அதிபர் சேவையில் சிறப்புப் பெற்றார்.
கல்வியின் கலங்கரை விளக்கமாய், கடமையே கண்ணெனப்
பம்பரமாய்ச் சுழன்று, காலந்தவறாமல் எங்கும் பிரசன்னமாய்
நின்று சிரித்துச் சிரித்து அனைவரின் சிந்தையிலும் நிறைந்த
எங்கள் மதிப்பார்ந்த அதிபர் கமலநாயகி அவர்களது ஓய்வு
காலம் சீருடனும் சிறப்புடனும் திகழ எல்லாம் வல்ல
நயினை நாகபூசணி அம்மன் திருவருளினை வேண்டுகின்றோம்.
வாழ்த்துவோர்: திருமதி வ.கதிரேசபிள்ளை
திருமதி வி.கடம்பமலர்
திருமதி பு.சண்முகராஜா
திருமதி சி.நந்தகுமார்
(கே.38860) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 25 ஆவது ஆண்டு நினைவஞ்சலி அழைப்பு

அமரர்
**முருகேசர் அம்பலவாணர் தம்பிஐயா**
(முன்னாள் உரிமையாளர் - லக்சுமி ஸ்ரோர்ஸ், பொலநறுவை)



தோற்றம்
22.12.1927

மறைவு
27.08.1991

அன்னாரின் 25ஆவது நினைவு தினத்தை முன்னிட்டு நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் அவரின் நினைவாலயத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்று வருகை தரவும்.

அம்மன் கோயில்வீதி,
கைதடி வடக்கு, கைதடி.
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி

அமரர்
**மரியமலர் ஜோசப் (நாகம்மா)**
(முன்னாள் யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர்)



தாயின் மடியில்
25.12.1936

இறைவன் மடியில்
23.07.2016

அன்புக்கோர் அன்னையாய்
கருணைக்கோர் தெய்வமாய்
ஆற்றலுக்கோர் உத்தமியாய்
பண்புக்கோர் இலக்கணமாய்
தியாகத்துக்கோர் உதாரணமாய்
மனிதருள் மாணிக்கமாய்
வையகத்தில் வாழ்வாங்கு வாழ்ந்து
எம்மையெல்லாம் வாழவைத்த தெய்வமே
உம்மைப் பிரிந்து விழிநீர் சொரிந்து ஏங்கி நிற்கின்றோம்

105, புகையிரத நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.
(j 3892)(11.17.18)
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும் நன்றிநவிலலும்



அமரர்
**ரங்கநாதன் புவனேஸ்வரி (பூமணி)**

தோற்றம்
04.11.1942

மறைவு
21.07.2016

கடந்த 21.07.2016 வியாழக்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி ரங்கநாதன் புவனேஸ்வரி அவர்களின் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் இன்று (20.08.2016) சனிக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறவிருப்பதால் தாங்கள் குடும்பசகிதம் வருகை தந்து அன்னாரது ஆத்ம சாந்திக்காக பிரார்த்திப்பதோடு தொடர்ந்து இடம்பெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரது மரணச்செய்திகேட்டு நேரில் வந்து ஆறுதல் கூறியவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிப்பிரசுரம், மலர்வளையம், பத்திரிகைப் பிரசுரம் போன்ற இன்னோரன்ன செயற்பாடுகளிலும் பங்கெடுத்த அனைத்து உள்ளங்களுக்கும் எம் நெஞ்சார்ந்த நன்றிகள்!

இல.18/5,
பிள்ளையார் கோயிலடி,
தாவடி கிழக்கு, கொக்குவில்.
(J3894)(13.18)
தகவல்:
குடும்பத்தினர்.

## 31ஆம் நாள் நினைவஞ்சலி



அமரர்
**சுப்பிரமணியம் சற்குணபாலன்**
(விமல்காமம்,தெல்லிப்பழை)

தோற்றம்
27.04.1953

மறைவு
20.07.2016

அன்புமொழி பேசி ஆதரவு தனை நல்கி
இங்கிதமாய் பேசி ஈடின்றி வாழ்ந்தவரே
உங்கள் பிரிவதனால் ஊமையராய் வாழ்கின்றோம்
எங்கையா சென்றீர்கள்?
தாங்கி இங்கு தவிக்கின்றோம்..
ஐயா உங்கள் ஆத்மா சாந்திபெறுக
என்றும் நினைவுகளுடன்...

இல.37, 6ஆம் ஒழுங்கை,
வேப்பங்குளம், வவுனியா
குடும்பத்தினர்.

## 10ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
17 . 03 . 1946



விண்ணில்
09 . 09 . 2006

அமரர் **அன்புமலர் பேரின்பநாயகம்**
திதி: துதியை

எங்களை வாழ வைத்த
எமது குலவிளக்கே
ஆண்டுகள் பத்தாகியும்
இன்றும் எம்முடன் வாழ்கின்றீர்கள்
எங்கள் அம்மாவே

உங்கள் நினைவில் வாழும்
கணவர், மகன்மார், மருமகன்மார்,
பேரப்பிள்ளைகள்; மலரவன், கவிநயா

மடத்தடி வீதி,
கொடிகாமம்
(J 1871)(12.18)

## 13ஆம் ஆண்டு நீங்கா நினைவலைகள்

செல்வி **மங்கையர்க்கரசி**
(மங்கை) **பொன்னம்பலம்**



மலர்வு. குப்பிளானில்
23.08.1978

உதிர்வு. லண்டனில்
20.08.2003

அன்பின் திருவுருவாய்
அறிவுச்சுடர் விளக்காய்
பாசத்தைப் பொழிந்த
இனிய இளைய மகளே!
வசந்த காலத்தில் மின்னலென
மலர்ந்த மங்கையே!
மறக்காது அம்மா உன் நினைவு.

உன் நினைவில் வாழும்.
அப்பா, அம்மா,
அண்ணாமார், அக்காமார்,
"பொன்மணி வாசா"
குப்பிளான் தெற்கு.
077 852 6152


# அமைப்பாளர் பதவியை நேற்றுத் துறந்தார் டலஸ்

கொழும்பு, ஓக. 20

நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து விலகியுள்ளார்.

கொழும்பில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சுதந்திரக் கட்சியின் மூத்த உறுப்பினர்களின் தொகுதி அமைப்பாளர் பதவிகளைப் பறிக்கக் கட்சித் தலைமை எடுத்துள்ள தீர்மானத்தைக் கண்டிக்கின்றேன். சுதந்திரக் கட்சி தனது முக்கிய கோட்பாடுகளுக்கு மாறாக இன்று செயல்பட்டு வருகின்றது. இதற்கு எதிர்ப்பைத் தெரிவிக்கவே எனது மாவட்ட அமைப்பாளர் பதவியிலிருந்து விலகுகின்றேன் என்று அவர் தெரிவித்தார். (த-5)

# இருபாலைக் கிராம மக்களுக்கு கோப்பாயிலிருந்து குடிதண்ணீர்

வழங்குகிறது வலி. கிழக்கு பிரதேச சபை

யாழ்ப்பாணம், ஓக.20

இருபாலைக் கிராம மக்களுக்கு கோப்பாய் பகுதியில் இருந்து குடிதண்ணீர் விநியோகிக்கும் பணியை வலி. கிழக்குப் பிரதேச சபை ஆரம்பித்துள்ளது.

கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலைக்கு அருகில் உள்ள நன்னீர்க் குழாய்க்கிணறு ஊடாக இந்தக் குடிதண்ணீர் விநியோகம் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக வலி.கிழக்குப் பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

இருபாலைப் பகுதி மக்களுக்கு முன்னர் தொண்டமானாற்றில் இருந்தே பவுசர் மூலம் குடிதண்ணீர் எடுத்து வரப்பட்டு விநியோகிக்கப்பட்டது. நீண்ட தூரத்தில் இருந்து குடிதண்ணீரை எடுத்து வந்து விநியோகிப்பதில் சிரமங்கள் ஏற்பட்டன.

இதனை அடுத்துச் சபையினால் கோப்பாயில் நன்னீர் குழாய்க் கிணறு அமைக்கப்பட்டு, இதன் ஊடாகப் பவுசர் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப்பட்டு வருகின்றது.

இதனைவிட இந்தப் பகுதியில் பிளாஸ்ரிக் நீர்த் தாங்கிகளை வைத்துக் குடிதண்ணீரை மக்களுக்கு விநியோகிக்கவும் சபை நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது எனத்தெரிவிக்கப்பட்டது. (த-17)


## மரண அறிவித்தல்

**கந்தையா தெய்வேந்திரம்**
(சின்னத்தம்பி மேஸ்திரியார்)



தோற்றம் : 18.11.1952
மறைவு : 18.08.2016

நவிண்டில், கரணவாய் மத்தி குஞ்சர்வளவைச் சேர்ந்த கந்தையா தெய்வேந்திரம் (சின்னத்தம்பி மேஸ்திரியார்) 18.08.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - செல்லம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான பூபாலு (மேஸ்திரியார்) - சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும், தவமலரின் பாசமிகு கணவரும், சுதர்சன், சுலேக்கா (லண்டன்), சுகந்தா (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், மயூரதன் (லண்டன்), தய்பாபரன் (பிரான்ஸ்) ஆகியோரின் மாமனாரும், க.பரமேஸ்வரன் (கரவெட்டி ப.தெ.வள. அபிவிருத்திக் கூ.சங்க முன்னாள் முகாமையாளர்), அருந்தவம், இராஜேஸ்வரி, குணசுந்தரம் (இத்தாலி) ஆகியோரின் சகோதரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் அவரின் இல்லத்தில் நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

குஞ்சர் வளவு,
கரணவாய் மத்தி.
தகவல்:
குடும்பத்தினர்.
021 226 4322
(N/116)
(11.18)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நகரில் திண்மக் கழிவுகளை உரிய பெட்டிகளில் இடுங்கள்

## மாநகர ஆணையாளர் கோரிக்கை

யாழ்ப்பாணம் ஒக.20

யாழ்.மாநகரப் பகுதியில் திண்மக் கழிவுகளைச் சேகரிப்பதற்காக வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் மக்கள் அதற்குரிய கழிவுகளைப் போடவேண்டும் என்று மாநகர ஆணையாளர் பொ.வாகீசன் கேட்டுள்ளார். அவர் தெரிவித்ததாவது:-

முக்கிய சந்திகள், வீதிகள், பொது இடங்களில் இந்தக் கழிவு சேகரிப்புப் பெட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. உக்கும், உக்காத வகையிலான கழிவுகளை வேறாக்கிச் சேகரிப்பதற்காக இவை உள்ளன.

மக்கள் தமது சுற்றாடல்களில் சேரும் கழிவுப் பொருள்களை தரம்பிரித்து வேறாக்கி அதற்கென ஒதுக்கப்பட்ட சேகரிப்புப் பெட்டிகளில் கழிவுகளைச் சேர்க்கவேண்டும்.

மாநகராட்சி மன்றத்தின் இந்தத் திண்மக் கழிவகற்றும் செயற்பாட்டுக்கு மக்கள் முழுமையான ஒத்துழைப்பைத் தரவேண்டும். கழிவுகள் யாவற்றையும் பொதியாக்கிக் கழிவு சேகரிப்புப் பெட்டியில் சேர்ப்பதால் இவற்றைத் தரம் பிரிப்பதில் ஊழியர்கள் சிரமப்படுகின்றனர்- என்றார். (த-17)

# யானைகள் சாவுக்காக கண்ணீர் சிந்தும் வடமாகாண சபை

## பசுமாடுகளும் மனிதர்களும் உயிரிழக்கும்போது பேசாதிருந்தமை ஏன் என்கின்றனர் விவசாயிகள்

யாழ்ப்பாணம், ஒக. 20

வவுனியா தொடக்கம் யாழ்ப்பாணம் வரை ரயில் வந்த பின்பு சுமார் 25 இற்கும் மேற்பட்ட வாழ்வாதார பசு மாடுகளும் 10 இற்கும் மேற்பட்ட மனிதர்களும் இறக்கும்போது பேசாத வடக்கு மாகாண சபையினர், யானைகளுக்காகக் கண்ணீர் வடிப்பது கவலை அளிப்பதாகக் கிளிநொச்சி மாவட்ட விவசாய சம்மேளனத்தின் தலைவர் சிவமோகன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

மீள்குடியேறிய மக்களுக்காக வழங்கப்பட்ட ஏராளமான வாழ்வாதார மாடுகள் ரயிலில் மோதுண்டு உயிரிழந்துள்ளன. இதேபோன்று 20 இற்கும் மேற்பட்ட மனிதர்களும் உயிரிழந்துள்ளனர். பல இடங்களில் பாதுகாப்புக் கடவைகளே கிடையாது. இவற்றுக்கெல்லாம் வாய் திறக்காத வடக்கு மாகாண சபையினர், அண்மையில் செட்டிகுளத்தில் இறந்த யானைகளுக்காகக் கண்ணீர் வடிப்பது கவலை அளிக்கின்றது.

யானையும் ஓர் அரிய வகை உயிரினம் என்ற வகையில் கவலைக்குரிய விடயமே. இருப்பினும் நெடுங்கேணி, பழம்பாசி, ஒலுமடு, ஒட்டுசுட்டான், கரப்புக்குத்தி போன்ற பல இடங்களில் ஆண்டுக் கணக்காக

> ❝ புளியங்குளம் முதல் நெடுங்கேணி வரைக்கும் உள்ள விவசாயிகள் பல லட்சம் ரூபா செலவு செய்து பப்பாசிச் செய் கையை மேற் கொண்டு பழத்தை அறுவடை செய்யக் காத்திருந்தவேளை, யானைகள் புகுந்து அழிக்கின்றன. இதற் கும் இன்று வரை நட வடிக்கை எடுக்கப்படவில்லை. ❞

விவசாயிகளின் வாழ்வாதாரத்தை மட்டுமன்றி குடியிருப்புக்களை அழித்தொழிக்கும் யானைகளைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் குரல் கொடுத்து வருகின்றனர். இவ்வாறு ஊர்மனைக்குள் புகுந்த யானைகளால் பல மனித உயிர்கள் காவு கொள்ளப் பட்டுள்ளன.

இவற்றுக்கு அப்பால் தென்பகுதிகளில் அட்டகாசம் புரிகின்ற யானைகள் இரவுவேளைகளில் ஏற்றிவரப்பட்டு கடந்த ஆண்டு வட்டக்கச்சிக் காட்டுப் பகுதிகளில் இறக்கப்பட்டன. இதனால் பல மாதங்களாக நாம் நித்திரை இன்றி இருந்து யானைகளை விரட்டினோம். அப்போதும் எவரும் குரல் கொடுக்கவில்லை. புளியங்குளம் முதல் நெடுங்கேணி வரைக்கும் உள்ள விவசாயிகள் பல லட்சம் ரூபா செலவு செய்து பப்பாசிச் செய்கையைமேற்கொண்டு பழத்தை அறுவடை செய்யக் காத்திருந்தவேளை, யானைகள் புகுந்து அழிக்கின்றன. இதற்கும் இன்றுவரை நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

இவை அனைத்தையும் செய்ய வேண்டிய எமது விவசாய அமைச்சர், நான்கு யானைகள் இறந்தவுடன் யாழ்ப்பாணத்தில் இருந்து செட்டிகுளத்துக்கு உடனடியாகப் பறந்து சென்று பார்வையிட்டு அறிக்கையும் விட்டு நடவடிக்கையில் இறங்கியுள்ளார்.

அவ்வாறானால் வடக்கு விவசாயத்தையும், மனித உயிரையும் விட யானைகளின் உயிர் பெரிதாகி விட்டதா என்ற கேள்வி எழுகின்றது-என்றார். (த-101)

# நூலக வாசிப்புப் பகுதியை இரவு 8 மணிவரை திறக்குக

## சங்கானை மக்கள் கோரிக்கை

சங்கானை,ஒக 20

சங்கானைப் பொது நூலகத்தின் பத்திரிகை வாசிப்புப் பகுதியை இரவு 8 மணிவரை வாசகர் பயன்படுத்த அனுமதிக்க வேண்டும். இவ்வாறு சங்கானை வாழ் பொதுமகன் ஒருவர் நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவனின் குறைகேள் சேவையின்போது கேட்டுக்கொண்டார். இந்தக் குறைகேள் சேவை வலி. மேற்குப் பிரதேச சபை மண்டபத்தில் இடம்பெற்றது.

இதில் கருத்து வெளியிட்ட சங்கானை வாழ் பொதுமகன் ஒருவர், சங்கானைப் பட்டின நூலகத்தைச் சனி, ஞாயிறு தினங்களில் முழுமையாகப் பயன்படுத்த அனுமதிக்கவேண்டும். அதேபோல தினமும் பத்திரிகை வாசிப்புப் பகுதியை இரவு 8 மணி வரை திறக்கவேண்டும்- என்றார்.

இதற்கு நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் பதிலளிக்கையில், நூலகங்களின் கடமைநேரத்துக்கு ஏற்ப சேவை இடம்பெறுகின்றது. மேலதிக நேரத்தில் சேவையைக் கூட்டுவதாயின் மேலதிக ஆளணி தேவையாக உள்ளது. ஆளணி அதிகரிப்பு கிடைக்க நான் உள்ளூராட்சி ஆணையாளருடன் பேசுவேன். அதற்கேற்ப கிடைக்கும் பதிலை அடிப்படையாகக் கொண்டு நூலக சேவையின் வேலை நேரத்தை அதிகரிப்பது தொடர்பில் சபைச் செயலாளருடன்பேசிநல்லதொருமுடிவைப் பெறலாம்- என்றார். (த-50)

# மோட்டார் சைக்கிள் ஓட்டும் பயிற்சியில் ஈடுபட்ட பெண் காயம்

சாவகச்சேரி ஒக. 20

வீதியில் இரவுவேளை மோட்டார் சைக்கிள் செலுத்தும் பயிற்சியில் ஈடுபட்ட குடும்பப் பெண், அது கட்டுப்பாட்டை இழந்ததால் மின் கம்பத்துடன் மோதுண்டு காலில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு சாவகச்சேரி இந்து ஆரம்பப் பாடசாலைக்கு அருகே இடம்பெற்றது.

இந்த வீதியில் இரவு வேளை சனநடமாட்டம் குறைவு என்பதால் மோட்டார் சைக்கிள் செலுத்திப் பயிற்சி பெற்ற 48 வயதுப் பெண், நேற்று முன்தினம் இரவு புதிய மோட்டார் சைக்கிளில் பயிற்சியில் ஈடுபட்டுள்ளார்.

இதன்போது அது வேகக் கட்டுப்பாட்டை இழந்து வீதியோர மின்கம்பத்துடன் மோதியதால் கால் எலும்பு முறிந்துள்ளது.

இவர் சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டார்.(த-9)

# 2 ஆம் கட்டமாக அமைக்கப்படும் வீதிச் சமிக்ஞை விளக்குகள்

## பணிகள் அடுத்த வாரம் ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஒக 20

வீதிச் சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்குரிய இரண்டாம் கட்டப் பணிகள் அடுத்த வாரத்தில் மீள ஆரம்பிக்கப்படும் என்று வீதி அபிவிருத்தி அதிகார சபையின் பிரதம பொறியியலாளர் வி.சுதாகர் தெரிவித்தார்.

சமிக்ஞை விளக்குகளை அமைப்பதற்குரிய கம்பங்களுக்கான அத்திபாரங்கள் இடும் பணிகள் யாவும் நிறைவு பெற்றுள்ளன.

அடுத்த கட்டப் பணியாகக் கம்பங்கள் நிறுத்தப்பட்டுச் சமிக்ஞை விளக்குகளைப் பொருத்தும் நடவடிக்கை ஆரம்பிக்கப்படும். அடுத்த மாத இறுதிக்குள் சகல பணிகளும் நிறைவுபெறும் என்றும் அவர் கூறினார்.

வேம்படிச் சந்தி, ஆரியகுளம் சந்தி, திருநெல்வேலிச் சந்தி, கோப்பாய்ச் சந்தி, சுன்னாகம் சந்தி, நெல்லியடிச் சந்தி ஆகிய முக்கிய சந்திகளில் இந்த வீதிச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படவுள்ளன.

இந்தப் பிரதான சந்திகளில் இடம்பெறும் விபத்துக்களைக் குறைக்கவும், போக்குவரத்து விதிமுறைகளைச் சீராகப் பேண வசதியாகவும் இந்தச் சமிக்ஞை விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. (த-17)

# முற்றவெளியில் துப்புரவுப் பணி

யாழ்ப்பாணம் ஒக.20

யாழ்.முற்றவெளிப் பகுதியில் கோட்டையைச் சூழ உள்ள பிரதேசம் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றது.

கோட்டையைச் சூழ்ந்துள்ள அகழியை அண்டி அடர்ந்து வளர்ந்திருக்கும் பற்றைகள், செடிகள் என்பன வெட்டி அழிக் கப்பட்டு வருகின்றன. தொல்பொருள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் இந்தத் துப்புரவுப் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன.

முனியப்பர்கோயிலடியை அண்டிய பகுதியில் வளர்ந்திருக்கும் பற்றைகளும் இவ்வாறு வெட்டப்பட்டுத் துப்புரவு செய்யப்பட்டு வருகின்றன. (த-17)

# கிராம அபிவிருத்திச் சங்கத்தின் சேதமான கட்டடம் புனரமைப்பு

வலி.தென்மேற்கு, ஒக 20

கிராமத்திற்கு ஒரு மில்லியன் நிதியுதவித் திட்டத்தின் கீழ் வலி.தென்மேற்குப் பிரதேசத்தில் ஜே/129 கிராம உத்தியோகத்தர் பிரிவில் சேதமடைந்த நிலையிலுள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான கட்டடம் புனரமைக்கப்படவுள்ளது.

சுதுமலை அம்பாள் ஆலயத்துக்கு முன்பாக அமைந்துள்ள கிராம அபிவிருத்திச் சங்கத்துக்குச் சொந்தமான இந்தக் கட்டடத்தில் கடந்த காலங்களில் விடுதலைப் புலிகளின் நீதிமன்றமும் தெங்கு, பனம்பொருள் உற்பத்தி விற்பனவுக் கூட்டுறவுச் சங்கத்தின் பனங்கட்டித் தொழிற்சாலையும் இயங்கிவந்தன.

போர்க்காலச் சூழ்நிலையைத் தொடர்ந்து சேதமடைந்த நிலையிலிருந்த இந்தக் கட்டடத்தில் இராணுவ முகாமும் இயங்கி வந்தது.

கடந்த 20 வருடங்களுக்கு மேலாகக் கூரையின்றி இடிந்த சுவர்களுடன் உள்ள இந்தக் கட்டடத்தைப் புனரமைப்பதற்கு அப்பொழுதிருந்த நிர்வாகம் பல தடவைகள் முயற்சி எடுத்துக் கொண்ட போதிலும் அரசால் நிதி வழங்கப்படாமையினால் அது கைகூடவில்லை. காலத்துக்குக் காலம் இந்தச் சங்கத்தை இயக்குவதற்காகக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் பல தடவைகள் முயன்றபோதும் எவரும் முன்வராமையினால் சங்கம் செயலிழந்திருந்தது.

இந்த நிலையில் அரசால் ஆரம்பிக்கப்பட்டுள்ள கிராமத்திற்கு ஒரு மில்லியன் நிதியுதவித் திட்டத்தின் கீழ் மேற்படி சங்கத்தைப் புனரமைப்பதற்குச் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் நிதி ஒதுக்கியுள்ளமையைத் தொடர்ந்து கட்டடத்தின் புனரமைப்பு வேலைகள் ஆரம் பிக்கப்படவுள்ளன. (த-115)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# புளொட் அமைப்பினரால் மாணவருக்கு சைக்கிள்கள்

வவுனியா, ஓக. 20

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் அங்கத்துவக் கட்சிகளில் ஒன்றான ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் (புளொட்) ஜேர்மனிக் கிளையினரால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட இரண்டு சைக்கிள்கள் வவுனியா வெளிக்குளம் மகா வித்தியாலய மாணவர்கள் இருவரிடம் கையளிக்கப்பட்டன.

கடந்த 6 ஆம் திகதி சனிக்கிழமை 'கல்வியால் எழுவோம்' செயற்றிட்டத்தின் மூலம் புளொட் அமைப்பின் வவுனியா மாவட்ட தலைமைக் காரியாலயத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

இதில் மாணவர்களுக்கு, சைக்கிள்களை புளொட் அமைப்பின் ஜேர்மனிக் கிளையின் பவானந்தன், அதன் உபதலைவர்களில் ஒருவரும், வவுனியா நகர சபையின் முன்னாள் உபதலைவருமான க.சந்திரகுலசிங்கம் ஆகியோர் வழங்கினர்.

(த-402)

# விகாரைகள் அமைப்பை எதிர்த்து இன்று பேரணி

## ஆனையிறவில் இருந்து கிளிநொச்சி வரை

யாழ்ப்பாணம், ஓக. 20

இரணைமடு ஆலயச் சூழலில் பௌத்த விகாரை கட்டுவது மற்றும் பௌத்தர்கள் இல்லாத இடங்களில் பௌத்த சின்னங்கள் அமைப்பது உள்ளிட்டவற்றைக் கண்டித்து மாவட்டத்தின் பொது அமைப்புக்கள் இணைந்து நாளை மறுதினம் திங்கட்கிழமை பேரணி ஒன்றை நடத்தவுள்ளன. ஆனையிறவில் இருந்து அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகம் (யு.என்.எச்.சி.ஆர்) வரை இந்தப் பேரணி இடம்பெறவுள்ளது.

இது தொடர்பில் மாவட்டப் பொது அமைப்புக்கள் தெரிவிக்கையில், இந்தப் பேரணியில் மாவட்டத்தின் பொது அமைப்புக்கள், நிறுவனங்கள் பங்கு கொள்வது குறித்து இன்று (நேற்று) கூடி ஆராய்ந்தோம். இதன் பிரகாரம், குறித்த பேரணி ஆனையிறவில் இருந்து புறப்பட்டு கிளிநொச்சியில் அமைந்துள்ள அகதிகளுக்கான ஐ.நா. அலுவலகத்துக்கு (யு.என்.எச்.சி.ஆர்) முன்பாக நிறைவு செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. இங்கு வாழும் மக்களின் மனதைப் புண்படுத்தி-நல்லிணக்கத்துக்குக் குந்தகமாக மேற்கொள்ளப்படும் இவ்வாறான செயல்களைக் கண்டித்தும், இவற்றை உடன் நிறுத்தக் கோரியுமே இந்தப் போராட்டம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பௌத்தர்களே இல்லாத பிரதேசங்களில் அமைக்கப்படும் இந்த விகாரைகளை மற்றுமோர் ஆக்கிரமிப்புச் சின்னமாகவே கருதுகிறோம். இவ்வாறான செயல்களை நிறுத்துமாறு கோரியே மேற்படி பேரணியை முன்னெடுக்கிறோம்-என்று கூறின. (த-101)

# மத்தியஸ்தர் சபை அமர்வு நாளை இடம்பெறாது

யாழ்ப்பாணம், ஓக. 20

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை காரணமாக மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் வழமையாக நடைபெறும் மத்தியஸ்தர் சபை (இணக்க சபை) அமர்வுகள் நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெறமாட்டாது என மன்னார் பிரதேச மத்தியஸ்தர் சபைத் தவிசாளர் ம.றெ.பிறின்ஸ் டயஸ் தெரிவித்தார். (த)

# 320 வீதி விளக்குகள் பொருத்த ஏற்பாடு

## மன்னார் பிரதேச சபை எல்லைக்குள்

மன்னார், ஓக. 20

பிரதேச சபைகளை வலுவூட்டும் தேசிய வேலைத் திட்டத்தின் கீழ் மன்னார் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளில் 320 வீதி விளக்குகள் பொருத்தப்படவுள்ளன. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் பிரதேச சபைச் செயலாளர் இ.தயாபரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

320 வீதி விளக்குகளுக்குக் கேள்வி கோரப்பட்டு தெரிவு செய்யப்பட்டவர்களுக்குக் கொள்வனவுக் கட்டளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. வீதி விளக்குகள் கிடைத்ததும் அவற்றைப் பொருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

வீதி விளக்குகளைப் பொருத்துவதற்கான இடங்கள், குறித்த பிரதேசங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஆலோசனைக் குழுக்களிடம் இருந்து பெற்றுக்கொள்ளப்படும்.

ஏற்கனவே பொது அமைப்புக்களிடம் இருந்து கிடைக்கப் பெற்ற கோரிக்கைகளும் கருத்தில் எடுக்கப்பட்டு, பொருத்தும் இடங்கள் தெரிவு செய்யப்படும்-என்றார்.

(த-56)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 9 குடும்பங்களுக்கு வீடமைக்கக் காணி

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்டதையடுத்து

காரைநகர், ஓக. 20
காரைநகர் பிட்டியெல்லைக் கிராமத்தில் வெள்ளத்தினால் பாதிப்படைந்த 9 குடும்பங்களுக்கு எஸ்.கே.நாதன் நற்பணி மன்றத்தின் பணிப்பாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் வீடமைப்பதற்கான காணிகளை அன்பளிப்புச் செய்துள்ளார்.
காரைநகர் பிட்டியெல்லைக் கிராமத்தில் வெள்ளத்னால் பாதிப்படைந்த 9 குடும்பங்களின் அவல நிலையைக் கடந்த வருட வெள்ள இடரின்போது நேரடியாகப் பார்வையிட்ட எஸ்.கே.நாதன் நற்பணி மன்றத்தின் பணிப்பாளர் சுப்பிரமணியம் கதிர்காமநாதன் அந்தக் கிராமத்தில் பிறிதொரு இடத்தில் வீடமைப்பதற்கான காணிகளை வாங்கி அன்பளிப்புச் செய்துள்ளார். பயனாளிகளுக்கு காணி உறுதி வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை பிட்டியெல்லைக் கிராமத்தில் இடம்பெற்றது. காரைநகர் அபிவிருத்திச் சபைத் தலைவர் பா.விக்னேஸ்வரன், காரைநகர் பிரதேச செயலர் திருமதி பாபு தேவந்தினி, காரைநகர் யாழ்ற்ரன் கல்லூரி அதிபர் வே.முருகமூர்த்தி உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். ஒவ்வொருவருக்கும் தலா 2 பரப்புக் காணிகள் வீதம் வழங்கப்பட்டுள்ளதுடன் பொதுக் கிணறு, பொது அமைப்புக்களுக்கான கட்டடங்கள் நிறுவுவதற்காக 4 பரப்புக் காணியும் கொள்வனவு செய்து வழங்கப்பட்டுள்ளது. (த-5-250)

# மகரந்தக் காவிகள் பயன்பாடு; 40 பயனாளிகளுக்குப் பயிற்சி



தென்மராட்சி, ஓக 20
மகரந்தக் காவிகளின் பயன்பாடு தொடர்பான பயிற்சிப் பட்டறை மறவன்புலவு சகலகலாவல்லி வித்தியாலய மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.
யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் துறையினரும் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிர்ப் பல்வகைமைச் செயலகத்தினரும் இணைந்து நடத்திய முழு நாள் பயிற்சிப் பட்டறையில் மறவன்புலவு கிராமத்தைச் சேர்ந்த 40 பயனாளிகள் வரை கலந்து கொண்டனர்.
யாழ்.பல்கலைக்கழக விலங்கியல் துறையின் கலாநிதி திருமதி இ.ஞானேஸ்வரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமைப் பிரிவுப் பணிப்பாளர் திருமதி பத்மா அபயக்கோன். அமைச்சின் ஆராய்ச்சி அலுவலர் திருமதி ஹேமமாலி ஹேறத் ஆகியோர் கலந்து கொண்டண். மறவன்புலவைச் சேர்ந்த 50 குடியிருப்பாளர்களுக்கு வறட்சியைத் தாங்கி விளையக்கூடிய பயிர் வகைகளைச் சேதனப் பசளைப் பாவனையுடன் விளைவிப்பது தொடர்பான பயிற்சிப் பட்டறை ஏற்கனவே ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்ட நிறுவனத்தின் அனுசரணையுடன் நடத்தப்பட்டதெனவும், அதன் தொடராக மறவன்புலவு கிராம மக்களுக்கு மகரந்தக் காவிகளைப் பாதுகாப்பதற்கான முக்கியத்துவம் குறித்துப் பயிற்சிப் பட்டறை நடத்தப்படுகின்றது எனவும் கூறப்பட்டது.
பயிற்சிப் பட்டறையில் மகரந்தச் சேர்க்கைக்கு உதவும் பூச்சிகள், அவற்றினால் எமக்குக் கிடைக்கும் பயன்பாடுகள், தேன் உற்பத்தி உற்பத்திக்குக் கையாளும் முறைகள் தொடர்பாகப் படங்களுடனான பயிற்சிகள் பயனாளிகளுக்கு வழங்கப்பட்டன. (த-9)

# தாராளமாகக் கிடைக்கிறது பசுப்பால்

யாழ்ப்பாணம், ஓக.20
தற்போது ஆலய உற்சவங்கள் மற்றும் விரத காலமாக இருந்தாலும் பசுப் பாலுக்கு எந்தவித பற்றாக்குறையும் இல்லை என்று யாழ்கோ முகாமையாளர் தெரிவித்துள்ளார்.
அவர் தெரிவித்ததாவது:-
யாழ். கோவின் 28 கிளை நிலையங்கள்(பால் சாலைகள்) ஊடாகத் தினமும் 5ஆயிரம் லீற்றர் பசுப் பால் காலை, மாலை வேளைகளில் விற்கப்பட்டு வருகின்றது.
நுகர்வோருக்குத் தேவையான அளவு பால் தட்டுப்பாடின்றி வழங்கப்பட்டு வருகின்றது. ஒரு லீற்றர் பசுப் பால் 80 ரூபாவாகவும், தயிர் லீற்றர் நூறு ரூபாவாகவும் விநியோகிக்கப்பட்டு வருகின்றன. தற்போது ஆலயங்களில் உற்சவங்கள் மற்றும் விரத காலம் ஆகையால் பசுப் பாலின் நுகர்வு அதிகரித்துள்ளதாகச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (த-17)

# மரண அறிவித்தல்

மாதகலைப் பிறப்பிடமாகவும் கனடா, கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி தம்பிப்பிள்ளை (C.T.B. நவரத்தினம்) 18.08.2016 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சரவணமுத்து, செல்லமுத்து தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற நவரத்தினம் (C.T.B) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற இராஜேஸ்வரி (மலேசியா) இராசேந்திரம் (சேனாதி- தொட்டிலடி). காலஞ்சென்ற சுப்பிரமணியம், தர்மகுலசிங்கம், இந்திராணி (கனடா) புஸ்பராணி (பிரான்ஸ்) குணசிங்கம் (கனடா) சத்திய பாமா (கனடா) விஜியகுமாரி (கொழும்பு) காலஞ்சென்ற தில்லை நடராஜா, ஜீவகன் (கனடா) ஆகியோரின் பாசமிகு தாயாரும், காலஞ்சென்ற நல்லையா (மலேசியா) புஸ்பராணி, வசந்தா, குணநிதி, கணேசதாஸ், மாலினி, ஜெயக்குமார், செல்வரத்தினம், ஜெயராணி ஆகியோரின் பாசமிகு மாமியாரும், சண்முகராஜன், சித்ரா (மலேசியா) இராஜகுலேந்திரன், மோகனதாஸ், கிருபாகரன், (பிரான்ஸ்) சங்கீதா, காலஞ்சென்ற கார்த்திக் துஸ்யந்தன் (லண்டன்) டயானா, துஸ்யந்தினி, ஜெனார்த்தனி, சுபேந்திரன் (கனடா) கவிதா, அஜித் பாபு (பிரான்ஸ்) வினோத் குமார், ரஜித் குமார் (கனடா) கௌதமன் (ஜேர்மனி) கௌதமி, புருசோத்தமன் (கொழும்பு) சிந்துஜன், நிருஷா (கனடா) ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கல்கிசை மகிந்த மலர்ச்சாலையில் இடம்பெற்று பூதவுடல் கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும்.

தகவல்: குடும்பத்தினர்
தொடர்புகளுக்கு: திரு. செல்வரத்தினம்
0112361749, 0779453329



சரஸ்வதி தம்பிப்பிள்ளை


தோற்றம்: 10.06.1925 மறைவு: 18.08.2016

(சி.25248) (13.18)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குற்றம் இழைத்தவர்கள் பொறுப்பை ஏற்றாகவேண்டும்

## போரின்போது உரிமை மீறல்கள் பொதுவானவையே அதற்காக அவற்றை மறுக்க முடியாதென்கிறார் ரணில்



கொழும்பு, ஓக.20
குற்றம் இழைத்தவர்கள் அதன் பொறுப்பை ஏற்கவேண்டும். அதிகளவான மக்கள் கொல்லப்பட்டனர். இதனை யார் செய்தார்கள் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது? உண்மைகள் சில சமயங்களில் கசப்பானதாக இருக்கலாம். ஆனால் நாம் அந்தக் கசப்போடுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

போர் அல்லது முரண்பாடு ஒன்று ஏற்படும்போதும் மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கும். இது அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது. இதனைப் பற்றி நாம் கலந்துரையாடவேண்டும். அதேநேரம் அவற்றை யாரும் மறுக்க முடியாது.

இவ்வாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொழும்பில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை நடைபெற்ற சட்டக் கல்லூரியின் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்று கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் தெரிவித்ததாவது:

இலங்கையில் 1971ஆம் ஆண்டு கலவரம் மற்றும் 1980ஆம் ஆண்டு காலப்பகுதி முதல் வடக்கில் ஏற்பட்ட இன்னுமொரு கலவரம் என்பன மனித உரிமைகள் மீறலுக்கான சிறந்த எடுத்துக்காட்டாகவே அமைந்தன. 1990 மற்றும் 91 ஆம் ஆண்டுகளில் மனித உரிமை மீறல்கள் தொடர்பில் வடக்கிலும் தெற்கிலும் வேறுபட்ட கருத்தாடல்கள் காணப்பட்டன. ஜெனிவாவுக்குச்சென்று எமது நிலைமை தொடர்பில் தெளிவுபடுத்தவேண்டியிருந்தது.

எனது நெருங்கிய நண்பர்கள் சிலரே ஐநா.வுக்குச் சென்று மனித உரிமைகள் பாதுகாப்பு தொடர்பில் விவாதித்தார்கள். உதாரணமாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்சவைக் கூறலாம். வடக்கு மற்றும் கிழக்கில் இந்திய - இலங்கை ஒப்பந்தம் காரணமாக கலவரங்கள் தோற்றம் பெற்றன. மக்கள் விடுதலை முன்னணி தரப்பிலும் சிலர் கொல்லப்பட்டனர். வடக்கு- கிழக்கிலும் சிலர் கொல்லப்பட்டனர். இதனையெல்லாம் மறைப்பதற்கில்லை. நாம் அவ்வாறான விடயங்களுக்கு அரசு என்ற வகையில் பொறுப்புக் கூறவேண்டும்.

**உரிமை மீறல்களை மறைக்க முடியாது**

போர் அல்லது முரண்பாடு ஏற்படும்போது மனித உரிமைகள் மீறப்பட்டிருக்கும். இது அனைத்து நாடுகளுக்கும் பொதுவானது. இதனைப் பற்றி நாம் கலந்துரையாடவேண்டும். அதேநேரம் அவற்றை யாரும் மறுக்கவும் முடியாது. அதிகமான நீதிமன்ற வழக்குகளும் பதிவாகியுள்ளன. போர்க் காலத்தின்போது ஏற்பட்ட உரிமை மீறல்களை மறைக்க முடியாது. அதற்கு எதிராகப் பல்வேறு முறைப்பாடுகள் உள்ளன. சிலர் வெள்ளைக் கொடி ஏந்தி வந்ததாகவும் பெரியளவில் உரிமை மீறல்கள் இடம்பெற்றதாகவும் குற்றம் சுமத்துகின்றனர். அதற்கு எதிராக வழக்குகளும் நிலுவையில் உள்ளன.

பரணகம ஆணைக்குழு நியமிக்கப்பட்டபோது அந்த அறிக்கைகளை வெளியிடவேண்டாம் என்றும் கடந்த அரசு கூறியது. இருப்பினும் அந்த ஆணைக் குழுவின் செயற்பாடுகள் வரவேற்கத்தக்கவையாகும். நாம் தற்போது நல்லிணக்கம் தொடர்பில் மட்டுமே கவனம் செலுத்த வேண்டும். கடந்த காலங்களில் நீதி முறைமைகளில் குறைபாடு இருந்தது.

யாழ்ப்பாணத்தில் இடம்பெறும் பாலியல் வன்புணர்வுகள் தொடர்பில் எவரும் முறைப்பாடு செய்வதில்லை. அப்போது நீதிக்கட்டமைப்புக்கள் ஒழுங்காகச் செயற்படவில்லை. தற்போது அவை சிறப்பாகச் செயற்பட ஆரம்பித்துள்ளன. அந்தச் செயற்பாடுகளுக்கான தீர்வுகளை நாம் கண்டறிய வேண்டும்.

**பொறுப்பேற்கவேண்டும்**

குற்றம் இழைத்தவர்கள் அதன் பொறுப்பை ஏற்கவேண்டும். அதிகளவான மக்கள் கொல்லப்பட்டனர். இதனை யார் செய்தார்கள் அல்லது அவர்களுக்கு என்ன நடந்தது. நாம் காணாமற் போனோர் தொடர்பில் ஆராயும் அலுவலகத்தை உருவாக்கினோம். அது எதிர்காலத்திலும் தொடர்ந்து இயங்கும். நாம் சட்ட மாணவர்கள் மற்றும் ஊடகவியலாளர் எக்னெலிகொட போன்றவர்களை இழந்தோம். அவர்கள் தொடர்பிலான தகவல்களைத் தேடவேண்டும். அதனைப் பதிவு செய்யவேண்டும். இறுதியாக எத்தனைபேர் காணாமற் போயுள்ளனர் என்பதனைக் கண்டறிய வேண்டும்.

உண்மைகள் சில சமயங்களில் கசப்பானதாக இருக்கலாம். ஆனால் நாம் அந்தக் கசப்போடுதான் வாழ்ந்து கொண்டிருக்கின்றோம். காலாகாலமாக எமது செயற்பாடுகள் மற்றும் சட்டச் சேவைகள் என்பன மாற்றமடையலாம். ஆனால் நாம் எவ்வகையான புரிந்துணர்வுடன் உள்ளோம், எமது வரலாறு என்ன என்பது தொடர்பில் அறிந்திருக்க வேண்டும் – என்றார். (த-5)

# சட்டவிரோதமானது

## துறைமுக நகர ஒப்பந்தம்

*குற்றம் சாட்டுகின்றது ஜே.வி.பி*

கொழும்பு, ஓக. 20
கொழும்புத் துறைமுக நகர நிர்மாணத்துக்காகச் சீன நிறுவனத்துடன் இலங்கை அரசுடன் கைச்சாத்திட்ட ஒப்பந்தம் சட்டவிரோதமானது என்று மக்கள் விடுதலை முன்னணி தெரிவித்துள்ளது.

இலங்கையில் கடலை நிரப்புவதற்குச் சட்டமொன்று நடைமுறையில் இல்லாததால் சீன நிறுவனத்துடன் கடலை நிரப்பி அங்கு கொழும்புத் துறைமுக நகரை அமைக்க மேற்கொண்ட ஒப்பந்தம் செல்லுபடியாகாது.

இவ்வாறு மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தெரிவித்ததாவது:

சீனாவினால் நிர்மாணிக்கப்படவுள்ள கொழும்புத் துறைமுக நகரத் திட்டத்தினால் சுற்றுச் சூழலுக்கு ஏற்படக்கூடிய பெரிய அழிவுகள் தொடர்பில் கடற்கரைப் பாதுகாப்பு அதிகார சபையின் சட்டத்துக்கு அமையத் தெளிவுபடுத்தப்பட்டுள்ளது.

கடலை நிரப்பி உருவாக்கும் நிலத்தைப் பகிர்ந்து கொள்ளும்போது இலங்கை அரசுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இந்த நிலப் பகுதியை யார் நிர்வகிப்பது என்பது தெளிவில்லாமல் இருக்கின்றது.

நாட்டின் இறையாண்மையும் கேள்விக்குறியாகியுள்ளது. அனைத்துவிதத்திலும்கொழும்புத் துறைமுக நகரம் நாட்டுக்குப் பாதகமானது என்பதால் அதனை அரசு கைவிடுவதே சிறந்தது - என்றார்.

கொழும்பு துறைமுக நகர நிர்மாணப் பணிகளுக்கான ஒப்பந்தம் கடந்த வார ஆரம்பத்தில் கைச்சாத்திடப்பட்டது. அதனை நடைமுறைப் படுத்தவும் சீன நிறுவனம் தயாராகி வருகின்றது.

அடுத்த மாதம் நகர நிர்மாணப் பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் சீன நிறுவனம் அறிவித்துள்ளது. (த-5)

# அமெ. முதலீட்டாளர்களை அழைக்கிறது இலங்கை அரசு

கொழும்பு, ஓக. 20
இலங்கையில் முதலீடுகளை மேற்கொள்ளுமாறு அமெரிக்க முதலீட்டாளர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவுக்குப் பயணம் மேற்கொண்டுள்ள பிரதி அயலுறவுத்துறை அமைச்சர் ஹர்ச டி சில்வாவுக்கும் அமெரிக்க அதிகாரிகளுக்கும் இடையில் இடம்பெற்ற கலந்துரையாடலின்போதே அவர் இந்த அழைப்பை விடுத்துள்ளார்.

இந்தப் பயணத்தின்போது பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா, அமெரிக்காவின் தெற்கு மற்றும் மத்திய ஆசிய விவகாரங்களுக்கான இராஜாங்கச் செயலாளர் நிசா பிஸ்வால் உள்ளிட்டவர்களைச் சந்தித்துக் கலந்துரையாடினார். இந்தச் சந்திப்பின்போது இலங்கையின் நல்லிணக்கச் செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பிலும் பிரதி அமைச்சர் ஹர்ச டி சில்வா தெளிவுபடுத்தியமை குறிப்பிடத்தக்கது. (த-5)

# அமைப்பாளர் பதவியை பறித்தமை மகிழ்ச்சியே

## சொல்கிறார் ஹெகலிய ரம்புக்வெல



கொழும்பு, ஓக. 20
சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் அமைப்பாளர் பதவியில் இருந்து நீக்கப்பட்டமை மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. தற்போது எவ்விதமான தயக்கமும் இன்றி நல்லாட்சி அரசின் பன்னாட்டு அடிமைத் தனத்தை நாட்டு மக்களுக்கு எடுத்துரைத்து நீதி கோரலாம்.

இவ்வாறு மகிந்த ஆதரவு அணியில் செயற்படும் நாடாளுமன்ற உறுப்பினரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தொகுதி அமைப்பாளர் பதவியிலிருந்து நீக்கப்பட்டவருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சியின் அரசியல் ரீதியிலான பழிவாங்கல்தொடர்பில் மகிந்த ராஜபக்ச தலைமையில் விரைவில் கூடித் தீர்மானம் எடுப்போம். கட்சியில் இருந்து நீக்கினாலும் அரசுக்கு எதிரான போராட்டத்தைக் கைவிடப்போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (த-5)

# காட்டு யானைகளைப் பாதுகாக்க ரயிலில் வனஜீவராசி அதிகாரிகள்

கொழும்பு, ஓக. 20
காட்டு யானைகள் பிரவேசிக்கும் பகுதிகளுக்கு அண்மையில் பயணிக்கும் ரயில்களில் நேற்றுமுன்தினம் முதல் வன ஜீவராசிகள் திணைக்கள அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டனர்.

ரயில் மார்க்கங்களைக் கண்காணித்து ரயில் சாரதிகளுக்கு வழி காட்டுவதற்காகவே அவர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். தலைமன்னார் முதல் மதவாச்சிக்கு இடைப்பட்ட ரயில் மார்க்கத்திலும், மதவாச்சி தொடக்கம் கிளிநொச்சி வரையான ரயில் மார்க்கத்திலும் அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்று வன ஜீவராசிகள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் நாயகம் டபிள்யூ.எஸ்.கே பத்திரத்ன குறிப்பிட்டார்.

செட்டிக்குளம் பகுதியில் ரயிலில் மோதுண்டு நான்கு காட்டு யானைகள் உயிரிழந்ததைத் தொடர்ந்து இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

வருடத்தில் இதுவரையான காலப் பகுதிக்குள் ரயிலில் மோதுண்டு 10 காட்டு யானைகள் உயிரிழந்துள்ளன என்று வனஜீவராசிகள் திணைக்களம் குறிப்பிட்டது. (ற-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கிராம அலுவர்கள் போட்டிப் பரீட்சை செப்ரெம்பர் 13

கொழும்பு, ஓக. 20
கிராம உத்தியோகத்தர்களுக்கான மூன்றாம் தரத்துக்குரிய போட்டிப் பரீட்சை அடுத்த மாதம் 3 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

நாடளாவிய ரீதியில் 858 மத்திய நிலையங்கள் ஊடாக இந்தப் போட்டிப் பரீட்சை நடைபெறவுள்ளதோடு இதில் ஒரு லட்சத்து 9 ஆயிரத்து 21 பேர் தோற்றவுள்ளதாகவும் பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது. தற்போது இதற்கான அனுமதி அட்டைகள் தபால் மூலம் பரீட்சார்த்திகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகப் பரீட்சைகள் திணைக்கள ஆணையாளர் பிள்யு. என். எம்.ஜே.புஸ்பகுமார தெரிவித்தார்.

இதேவேளை, இந்த மாதம் 29 ஆம் திகதிக்கு முன்பாக அனுமதி அட்டைகள் கிடைக்காதவர்கள் 1911 அல்லது 011 278 5230, 011 217 7075 ஆகிய தொலைபேசி இலக்கங்களின் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறும் ஆணையாளர், பரீட்சார்த்திகளிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (த-5)

# அரசமைப்புக்கு முரணானது

## காணாமற்போனோர் சட்டம்

### குற்றம் சுமத்துகின்றது கூட்டு எதிர்க்கட்சி

கொழும்பு, ஓக. 20
காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவது தொடர்பிலான சட்டம் அரசமைப்புக்கு முரணாக நிறைவேற்றப்பட்டுள்ளதாகக் கூட்டு எதிர்க்கட்சி குற்றம் சுமத்தியுள்ளது. கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில், கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் தினேஸ் குணவர்த்தன இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:
காணாமற்போனோர் அலுவலகம் நிறுவுவது தொடர்பிலான சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது. அது நிறைவேற்றப்பட்ட விதம், நிறைவேற்றுவதற்கு மேற்கொள்ளப்பட்ட பரப்புரைகள் தொடர்பில் கூட்டு எதிர்க்கட்சியைச் சேர்ந்த 51 நாடாளுமன்ற உறுப்பினர்கள் எதிர்ப்பை வெளிப்படுத்தியுள்ளனர். நாங்கள் கடிதம் மூலம் அனுப்பி வைத்த கோரிக்கையைச் சபாநாயகர் ஏற்றுக் கொண்டுள்ளார். அது தொடர்பில் கலந்துரையாடல்களை நடத்தியுள்ளோம். நாடாளுமன்றில் சட்டவரைவு சமர்ப்பிக்கப்படுவது எவ்வாறு, விவாதம் எவ்வாறு நடைபெறவேண்டும், வாக்கெடுப்பு எவ்வுாறு நடத்தப்பட வேண்டும் என்பது தொடர்பில் எமது அரசமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதனை மீறும் வகையில் இந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

நாடாளுமன்றின் நிலையியற் கட்டளைச் சட்டம் அரசமைப்புடன் இணைக்கப்பட்டுள்ளது. அதில் நாடாளுமன்றக் கூட்டத் தொடர்கள், விவாதங்கள், நேர ஒதுக்கீடு உள்ளிட்ட அனைத்து விடயங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளன. இதுவே நீதி, இதனை யாரும் இல்லையென்று கூறினால் அது தவறு–என்றார். (த-5)


பன்னிரண்டாம் நாள் உள்வீதியுலா

## பதின்மூன்றாம் திருவிழா

### அலங்காரக் கந்தன் அடியார்கள்

நிலவும் நீண்டிடு நல்லூர்த் திருவிழாவை
நேரில் சென்று பார்ப்பதற்கு
உலகெங்கு மிருந்து அலங்காரக் கந்தன்
அடியார்கள் உவகையுடன் வருகின்றார்
வளமும் நலமும் வேண்டி வணங்கி
வடிவேலன் அருளைப் பெறுகின்றார்
புலவர் பலரும் அழகன் முருகன்
புகழை அழகாய் பாடுகின்றார்.

- குளப்பிட்டி .க.அருமைநாயகம்)

### "உன் புகழ் பாட எட்டு வரிகள் போதாது"

வள்ளி தெய்வானையுடன் புள்ளி மயில் மீதினில் ஏறி
எட்டுத் திக்கும் புகழ் பரப்பி வீதிவலம் வரும் – முருகோனே,
உன்னை நம்பியோரின் பாவ வினைகள் போக்கும்
யாழ்.நல்லூர் பதியுறை வாழ் – அரியோனே,
வட மாநிலத்தில் கொடிய போரைப் போக்கி
நாட்டில் சமாதானத்தை நிலை நாட்டிய – திறலோனே,
உன் புகழை 'பா' வரிகளால் தீட்ட
எட்டுவரிகள்போதாதுஎண்ணூறுகோடிவரிகள்வேண்டுமே–
குமரோனே.

- க. கனகசபை, சண்டிலிப்பாய்.

### முன் வினைகள் தீருமையா!

வாடிய பயிருக்கு வான்மழை போலவே
தேடிவரும் பக்தருக்கு அருளும் முருகையா!
கொடியவர் கொட்ட மடக்கிடும் குமரா!
அடியவர் படும்துன்பம் அகற்றிடும் வேலையா!
படியேறும் பாலகர் எமைக்கண் பாருமையா!
இடியேறு கேட்ட ஏதிலிகளானோமையா!
கொடி யேறியவுன் கோபுரம் காணவந்தோம்
முடியோடு காட்சிதந்து முன்வினைகள் தீருமையா!

-அபீர்ராஜன்

### நல்லையம்பதியை ஆளுகின்ற தெய்வமே

சிதறிவிட்ட உறவுகளை சேர
வைக்கும் சிங்காரனே
கதறிவிட்ட கண்ணீரை துடைத்து
எடுக்கும் வேலனே
பதறிவிட்ட எம்மனதை திடப்
படுத்தும் மயிலோனே
புகழ்மிகு நல்லையம்பதியை
ஆளுகின்ற தெய்வமே

தாவையூர்
சண்முக ராஜா சுபபிரியன்
யா/இ/க.

## வெள்ளவத்தையில் குண்டுகள் மீட்பு

கொழும்பு, ஓக. 20
வெள்ளவத்தையிலுள்ள காணியொன்றில் இருந்து இரண்டு கைக்குண்டுகள் நேற்று முன்தினம் மாலை மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைக்குண்டுகள் இரண்டையும் மீட்ட பொலிஸ் சிறப்பு அதிரடிப் படையினர், அதனைச் செயழிலக்கச் செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இது தொடர்பில் மேலதிக விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (த-5)

## வற் வரி குறித்து சு.கவின் அறிக்கை நிதி அமைச்சிடம்

கொழும்பு, ஓக. 20
பெறுமதிசேர் வரி (வற்) குறித்த புதிய சட்டவரைவு எவ்வாறு அமைய வேண்டும் என்பது தொடர்பில் தனது கட்சியின் நிலைப்பாட்டைத் தெளிவுபடுத்தி சிறிலங்கா சுதந்திரக் கட்சி, நிதி அமைச்சிடம் அறிக்கையொன்றைக் கையளித்துள்ளது.

புதிய சட்டவரைவில் எவ்வாறான திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற யோசனையும் அறிக்கையில் முன்வைக்கப்பட்டுள்ளது என்று சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் தெரிவித்தார்.

நாடாளுமன்றத்தில் மே மாதம் சமர்ப்பிக்கப்பட்ட வற் (திருத்தச்) சட்டவரைவு செல்லுபடியற்றது என்று உயர்நீதிமன்றம் அண்மையில் தீர்ப்பளித்துள்ளது. புதியதொரு சட்டவரைவைத் தயாரித்து அதைச் சபைக்குச் சமர்ப்பிக்கும் நடவடிக்கையில் நிதி அமைச்சு இறங்கியுள்ளது.

புதிய சட்டவரைவு எவ்வாறு அமைய வேண்டும், அதற்கு எவ்வாறான யோசனைகளை முன்வைக்க வேண்டும் என்பது பற்றி ஆராய்வதற்காக அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தலைமையில் சிறிலங்கா சுதந்திரக் கட்சி குழுவொன்றை அமைத்தது.

இந்தக் குழுவின் பரிந்துரை அறிக்கையே கடந்த புதன்கிழமை நிதி அமைச்சர் ரவி கருணா நாயக்கவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

வற் குறித்த புதிய சட்டவரைவு விரைவில் அமைச்சரவையின் அங்கீகாரத்துக்காகச் சமர்ப்பிக்கப்படவுள்ளதுஎன்றுநிதிஅமைச்சு வட்டாரங்களிலிருந்து அறிய முடிகின்றது. (த-5)

## போலிக் கடவுச்சீட்டு தயாரித்த 6 பேர் கொழும்பில் கைது

கொழும்பு, ஓக. 20
கொழும்பின் மருதானை, புதுக்கடை மற்றும் மாளிகாவத்தைப் பகுதிகளில் போலிக் கடவுச் சீட்டுகள் மற்றும் போலி வீசாக்கள் தயாரித்த 6 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பயங்கரவாதத் தடுப்புப் பிரிவினர் நடத்திய சிறப்புச் சுற்றிவளைப்பின் போதே இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட சந்தேக நபர்களிடமிருந்து 200 போலிக் கடவுச்சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் போலி வீசாக்களையும் தயாரித்துள்ளனர். கனடாவுக்கு நபர்களைச் சட்டவிரோதமாக அனுப்புவதற்காகக் குறித்த வீசாக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன.

இவற்றுக்காகப் போலியான அரச முத்திரைகளையும் குறித்த சந்தேக நபர்கள் பயன்படுத்தியுள்ளனர் என்று கூறப்பட்டது. (த-5)

## 30 ஆண்டுகளுக்கு முன் உயிர் காத்த கனடா மீனவர்களுக்கு நன்றி கூறிய தமிழர்கள்

மொன்றியல், ஓக 20
அகதி அந்தஸ்துக் கோரி இலங்கையிலிருந்து 1986 ஆம் ஆண்டு கனடாவுக்குப் பயணமான இலங்கைத் தமிழர்கள் 155 பேர், தங்களை நிர்க்கதி நிலையிலிருந்து காப்பாற்றிய கனடா மீனவர்களைச் சந்தித்து நன்றி பாராட்டிய நிகழ்வு ஒன்று கடந்த 11 ஆம் திகதி வியாழக்கிழமை கனடா நாட்டின் நியூபவுண்லாந்தில் இடம்பெற்றுள்ளது.

இது தொடர்பில் தெரியவருவதாவது:
1986 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் இலங்கையில் இருந்து கப்பல் ஒன்றின் மூலம் கனடா நோக்கிப் புறப்பட்ட 155 தமிழ் அகதிகள் கடலில் நிர்க்கதி நிலைக்கு உள்ளாகினர். அந்தச் சந்தர்ப்பத்தில் அங்கு வந்த மீனவர்கள், தமது சிறிய மூன்று படகுகள் மூலம் அனைவரையும் காப்பாற்றி நியூபவுண்லாந்துக் கடற்கரைக்குப் பத்திரமாகக் கொண்டு சென்று சேர்ப்பித்தனர்.

இந்த நிலையில், தம்மைக் காப்பற்றிய மீனவர்களுக்கு நன்றி செலுத்தும் நிகழ்வை இவர்கள் கடந்த 11 ஆம் திகதி நடத்தியுள்ளனர். இந்த நிகழ்வில் கப்பலில் பயணித்த இலங்கையர்கள் மற்றும் காப்பாற்றிய கனடா மீனவர்கள் உட்படப் பலர் பங்கேற்றனர். (த)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## தமிழர் உரிமைகளைப் பறித்த பாவத்துக்கு பிரதி உபகாரம்...?

வடக்கில் இன்னமும் பிரச்சினைகள் இருக்கின்றன. வடக்கு வாழ் மக்கள் முழுமையான விடுதலையை இன்னமும் அடையவில்லை.

மேற்கண்ட கருத்தை நாட்டின் தெற்கின் பழுத்த அரசியல் தலைவரும், முன்னாள் ஜனாதிபதிகளில் ஒருவரும், முன்னாள் பிரதமர்கள் எஸ்.டபிள்யு.ஆர்.டி.ப்ண்டாரநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க தம்பதியரின் புத்திரியுமான சந்திரிகா குமாரணதுங்க திருவாய் மலர்ந்துள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்போதைய அரசுடன் ஒத்துழைத்து வந்தாலும் கூட, வடக்கில் வாழும் மக்களின் உரிமைகள் தேவைகள் முற்றாக நிறைவேற்றப்படவில்லை--

இறுதிப் போரின்போது காணாமற் போன தமிழ் மக்கள் தொடர்பில் அனைத்துலக சமூகம் தொடர்ச்சியாகக் கேள்வி எழுப்பி வருகிறது--

ஆகையால் அரசு இந்த விடயம் குறித்து துரித கதியில் செயற்பட வேண்டியது கட்டாயமாகி உள்ளது--

ஆட்சிமாற்றத்தின் பின்னர் நாம் ஜனநாயகத்தைக் கையில் எடுத்துள்ளதால், வடக்கு மற்றும் கிழக்கு வாழ் மக்களுக்கு ஏற்ற தீர்வுகளை வழங்குவதற்கு அரசு செயற்பட்டு வருகிறது--

ஆட்சி மாற்றத்தின் பின்னர் வடக்கில் மேற்கொள்ளப்படும் ஜனநாயகச்செயற்பாடுகளும் பாதிப்புற்ற மக்களுக்கு நலன் விளைக்கும் வகையில் விரைந்து உழைப்பதில் அரசு அக்கறையாக உள்ளது என்றவாறாகவும்

முன்னாள் ஜனாதிபதியும் நல்லிணக்க அரசைத் துளிர்க்கச் செய்வதில் முன்னின்று உழைத்தவருமான சந்திரிகாவின் கருத்துக்கள் கேட்பதற்கு இதமாகவும் இனிப்பாகவும் இருக்கின்றன.

ஆனால் அதனைக் கருக் கொண்டு தமிழ் மக்களை இரண்டாம் தரப்புப் படியில் அமர்த்தாது, பிரதான நிலைக்கு உயர்வது என்பது சின்னஞ்சிறு விவகாரம் அல்லவே...!

பின்னோக்கிப் பார்ப்போமாயின், சிங்களம் மட்டுமே ஆட்சி மொழி என்று பிரகடனம் செய்து நாட்டைப் "பிளவுபடுத்திய" சந்திரிகாவின் தந்தையார் எஸ்.டபிள்யு. ஆர்.டி பண்டாரநாயக்க, இந்த (இலங்கை) நாட்டுக்கு மூட்டிய தீ அணைக்கப்படுவது சமான்யமான செயல் அல்லவே.

முன்னை இட்ட தீ முப்புரத்திலே... என்ற நிலைக்கு நிகராக அன்றி --

தந்தை, தாய், மகள் என்று அடுத்துத் தொடுத்து தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளைப் பறித்த பாவத்துக்குப் பிரதி உபகாரம் செய்யவேண்டிய பொறுப்பும் கடமையும் சந்திரிகா அம்மையாருக்கு உண்டு.

அவர் அதனைப் பக்கச்சார்பின்றி செய்விப்பார் ஆயின், தமிழ் மக்களுக்குப் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள் செய்த தீமைக்கு, பாவத்துக்கு பிராயச்சித்தம் செய்த பலனாவது கிட்டுமல்லவா? எதிர்பார்க்கலாமா...?

## பிரச்சினைகளுக்குத் தீர்வுகாண

# சிங்கள மக்கள் தடையா?

■ சேரலாதன்



சிறுபான்மையின மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்குவதற்கு சிங்கள மக்கள் தொடர்ந்தும் எதிர்ப்பைத் தெரிவித்து வருவதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

சிங்கள அரசியல்வாதிகள், புத்திஜீவிகள் உட்பட சாதாரண பொது மக்களும் சிறுபான்மையினரின் பிரச்சினைத் தீர்வு விடயத்தில் தமது எதிர்ப்புக்களைத் தெரிவிப்பதாகவும் பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார். பிரதமர் ஏதோவொரு புதிய உண்மையைக் கூறிவிட்டதாக நாம் கருதிவிடமுடியாது. இந்த நாட்டில் தொடர்ந்து இடம் பெற்றுவரும் ஒரு விடயத்தைத்தான் அவர் இப்போது பகிரங்கமாகக் கூறியுள்ளார்.

அந்நியரின் ஆட்சிக் காலத்தின் போது தமிழர்கள், சிங்களவர்களைவிட ஒருபடி உயர்ந்த நிலையிலேயே காணப்பட்டனர்.

அரசின் உயர் பதவிகளில் தமிழர்களைக் காண முடிந்தது. அரசியலிலும் அவர்கள் செல்வாக்குப் பெற்றுத் திகழ்ந்தனர். இதைச் சிங்கள மக்கள் எதிர்க்கவுமில்லை, காழ்ப்புணர்வுடன் நடந்து கொண்டதுமில்லை. தமிழர்களுடன் அந்நியோன்யமாக வாழ்வதையே அவர்கள் விரும்பினார்கள். அப்போதெல்லாம் தமிழர்களின் ஏராளமான வணிக நிலையங்கள் தென்பகுதியில் காணப்பட்டன. சிங்கள மக்கள் தமது தேவைகளை அவற்றின் மூலமாகப் பூர்த்தி செய்து கொண்டனர். தமிழர்களும் தமது வணிக முயற்சிகளால் அதிக வருமானத்தை ஈட்டிக் கொண்டனர்.

நாடு சுதந்திரமடைந்த நாளிலிருந்து இந்த நிலையில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. இனவாத அரசியல்வாதிகளும், சமூக விரோதச் சக்திகளும் சிங்கள மக்களின் மனங்களில் நச்சு எண்ணங்களை விதைக்க ஆரம்பித்ததால் தமிழ், சிங்கள உறவில் பெரும் விரிசல் ஏற்பட்டது. தமிழர்கள் இந்த நாட்டின் வந்தேறு குடிகள், அவர்களால் நாட்டுக்கும்,சிங்கள மக்களுக்கும் தீமைகள் ஏற்படப் போகின்றன. அதைவிட இலங்கைக்கு மிக அருகில் இந்தியாவின் தமிழ்நாட்டில் பெரும் எண்ணிக்கையான தமிழர்கள் வாழ்வதால், அவர்களாலும் சிங்கள மக்களுக்கு ஆபத்துக்கள் உள்ளன. இதைவிட நாட்டின் மூன்றிலொரு பகுதியில், வடக்கிலும், கிழக்கிலும் தமிழர்கள் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் சிங்கள மக்களுக்கு எதிர்காலத்தில் வாழ்வதற்குரிய நிலம் போதாமல் இருக்கப் போகின்றது. இவ்வாறெல்லாம் தவறான பரப்புரைகள் சிங்கள மக்கள் நம்பும் வகையில் மேற்கொள்ளப் பட்டன. சிங்கள மக்களும் இவற்றை நம்பவேண்டிய நிலைக்குத் தள்ளப் பட்டனர். தமிழர்கள் எமது எதிரிகள் என்ற வெறியுணர்வு அவர்களின் மனங்களில் குடிகொண்டது. சிங்கள அரசியல் தலைவர்களில் ஒருவரான பண்டாரநாயக்க இன வாத வெறியை முதன் முதலாக சிங்கள மக்களுக்கு ஊட்டினார். சிங்களம் மட்டும் சட்டம் என்ற அவரது கோசம் ஒவ்வொரு சிங்கள மகனின் நாடி நரம்புகளை முறுக்கேற வைத்தது. இந்த நாடு எமக்கு மட்டுமே சொந்தமானது, இங்கு வேறு எவருக்குமே இடமில்லை என்ற சிந்தனை வலுப்பெற்றது. இவற்றின் விளைவுகளை நாம் இன்று அறுவடை செய்துகொண்டிருக்கின்றோம். உண்மையைக் கூறப் போனால் அப்பாவிச் சிங்கள மக்களை இனவாதத்தின் பக்கம் திருப்பியவர்கள் இந்த நாட்டின் சிங்கள அரசியல்வாதிகளும், இனவாதிகளுமே என்பதை எவருமே மறுக்க முடியாது.

அரசியல்வாதிகள் தமது அரசியல் இருப்பைத் தக்கவைத்துக் கொள்வதற்காக இரண்டு பிரதான இனங்களுக்குமிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்தனர். நாட்டு நலனைப்பற்றி இவர்கள் ஒரு போதுமே சிந்தித்ததில்லை. இதனால்தான், ஒரு காலத்தில் சிங்கப்பூர் நாட்டைவிட உயர்வாகக் கருதப்பட்ட இலங்கை, இன்று பல்வேறு துறைகளிலும் பின்னடைவைச் சந்தித்து வருகின்றது.ஐக்கிய தேசியக் கட்சியைப் பிரதிநிதித்துவம் செய்த நாட்டின் முதலாவது பிரதமரான டி.எஸ் சேனநாயக்க, வளம் கொழிக்கும் கிழக்கு மாகாணம் தமிழர்களின் வசம் இருப்பதைப் பொறுக்காது பொருமினார். இதன் காரணமாகவே கிழக்கு மாகாணத்தில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. இதனால் தமிழர்கள் கிழக்கில் சிறுபான்மை இனத்தவர்களாக மாற்றப்பட்டனர். இன்று இதே வேலைதான் வடக்கில் இடம்பெற்று வருகின்றது. காலப்போக்கில் கிழக்கை ஒத்ததாக வடபகுதியின் நிலையும் மாறி விடப் போகின் றது. இனங்களுக்கிடையில் பிரிவினையை ஏற்படுத்திக்கொண்ட எந்தவொரு நாடும் முன்னேறியதாகச் சரித்திரம் இல்லை. நாட்டு மக்கள் அனைவருமே இது எமது தேசம் என்ற உணர்வுடன் ஒன்றுபடும்போதுதான், நாடு வளர்ச்சிப் பாதையில் செல்லமுடியும். ஆனால் துரதிர்ஷ்டவசமாக இங்கு அந்த நிலை இல்லை.

நாட்டின் எந்தப் பாகத்திலும் குடியிருக்கக்கூடிய உரிமை இங்கு வாழுகின்ற அனைத்துச் சமூகத்தினருக்கும் உள்ளது. ஆனால் ஒரு சமூகத்தினருக்கு மத்தியில் திட்டமிடப்பட்ட வகையில் வேறொரு சமூகத்தினரைக் குடியேற்றுவதை ஒரு போதுமே ஏற்றுக்கொள்ள முடியாது. அரசின் ஆசீர்வாதத்துடன் சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்திக் கொண்டு இன ஐக்கியம் பற்றிப் பேசுவதில் எந்தவிதமான அர்த்தமும் இருக்கப் போவதில்லை. மேலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பாக சிங்கள மக்களுக்குப் போதிய தெளிவின்மை இல்லாமலுள்ளது. தமிழர்கள் நாட்டைப் பிளவுபடுத்தப் போகிறார்கள், தமக்கென ஒரு நாட்டை அமைக்கப்போகிறார்கள் என்பனவே சிங்கள மக்கள் அறிந்த விடயங்கள். ஆனால் தமிழர்கள் அனுபவித்து வருகின்ற துயர்கள் தொடர்பாக எதுவுமே அவர்களுக்குத் தெரியாது, தெரிந்து கொள்வதற்கான வாய்ப்புக்களும் அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கப் படுவதில்லை. ■

## வாசகர் திருமுகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

> நாட்டின் முக்கிய பதவிகள் சிங்கள பௌத்தர்கள் மூலமே நிரப்பப்பட வேண்டுமென்ற யோசனை மூலம் நாட்டின் ஏனைய இனத்தவர்கள், மதத்தவர்களது மனித உரிமை மீறப்படுகின்றது. இதுவோர் நியாயமற்ற யோசனையாகும். அரசமைப்புக்கு முரணானது எனவும் மகிந்த அவ்வேளையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

# அன்றைய மகிந்தவுக்கு என்னதான் ஆகிவிட்டது?

சிங்கள மொழிமூலம் மவ்பிம
தமிழில் வீ.எஸ்.ரீ

**1992** ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அவ்வேளைய ஜனாதிபதி பிரேமதாச காணாமல் போனோரைக் கண்டறியும் ஜனாதிபதி ஆணைக்குழுவை நியமித்தபோது, அவ்வேளையில் எதிர்க்கட்சி நாடாளுமன்ற உறுப்பினரொருவராக இருந்த மகிந்த, அந்த விடயம் குறித்து தாம் முன்னெடுத்த போராட்டங்கள் காரணமாகவே குறித்த ஆணைக்குழுவை பிரேமதாச நியமித்துள்ளதாகப் பெருமையடித்துக் கொண்டார்.

காணாமல் போனோர் குறித்துக் கண்டறிய மனித உரிமைகள் ஆணைக்குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி பிரேமதாசவுக்கு அழுத்தம் கொடுக்குமாறு சர்வதேச மன்னிப்புச்சபைக்கு அழுத்தம் கொடுத்தவர் மகிந்தவே. அது குறித்து பிரேமதாசவை வலியுறுத்தி குரல் எழுப்பியவரும் மகிந்தவே. தென்பகுதியில் காணாமல் போனோர் குறித்து மட்டுமன்றி, வடபகுதியில் காணாமல் போனோர் குறித்தும் மகிந்த குரல் எழுப்பத் தவறவில்லை. குறித்த ஆணைக்குழு ஜனாதிபதி பிரேமதாசவால் நியமிக்கப்பட்டதையடுத்து 'யுக்திய' பத்திரிகைக்கு 1992 பெப்ரவரி மாதத்தில் தாம் வழங்கிய நேர்காணலில் மகிந்த குறித்த விடயம் குறித்து விரிவாக கருத்து வெளியிட்டிருந்தார்.

சர்வதேச அழுத்தம் காரணமாகவே அரசு இந்த யோசனையை ஏற்றுக் கொள்ளவேண்டி ஏற்பட்டது. மனித உரிமைகள் ஆணைக்குழு நியமிப்பு, இனப் பிரச்சினைக்கான தீர்வு முயற்சி போன்றவை சர்வதேச அழுத்தம் மற்றும் உதவிகள் பெறும் நோக்கில் அரசால் முன்னெடுக்கப்படுபவையே. சர்வதேச மன்னிப்புச் சபையின் யோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டாலும், அதன் பின்னரும் பலர் கடத்தப்பட்டுள்ளனர். அரசின் அனுசரணையுடனேயே இவை இடம்பெறுகின்றன. ஆனால் அரசு சர்வதேசத்தின் குற்றச்சாட்டுக்கு மட்டுமே அஞ்சுகிறது. நாட்டின் பொதுமக்கள் தமது உரிமைகள் குறித்தும் அவற்றைப் பாதுகாத்தல் குறித்தும் தெளிவுபடுத்தப்படவேண்டும். அப்போதுதான் நாட்டில் ஜனநாயகம் நிலைக்கும் என அவ்வேளை மகிந்த தமது அந்த நேர்காணலில் கருத்து வெளியிட்டிருந்தார்.

தாங்கள் தென்பகுதியின் மனித உரிமைகள் தொடர்பில் அக்கறை செலுத்தும் ஒருவராகக் கருதப்படுகிறீர்கள். நீண்ட காலத்துக்கு முன்னரிருந்தே நாட்டின் வடக்கு கிழக்குப் பகுதிகள் மற்றும் மலையகத்திலும் நிலவும் அத்தகைய பிரச்சினைகள் குறித்து என்ன கருதுகிறீர்கள் என மகிந்தவிடம் அப்போது வினவப்பட்டது.

நாட்டின் எந்தப்பகுதியில் மனித உரிமைகள் மீறப்பட்டாலும் அவற்றை நாம் எதிர்ப்போம். வடக்கு-கிழக்குப்பகுதிகளில் இராணுவத்தினரால் மட்டுமன்றி, விடுதலைப் புலிகளாலும் மனித உரிமைகள் மீறப்படுகின்றன. எமக்குத் தெரிந்த, நாம் கேள்விப்பட்ட சகல சம்பவங்கள் தொடர்பாகவும் நாம் உடனடியாக செயற்பட்டாக வேண்டும். மகசீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களது பிரச்சினையும் இவற்றில் முக்கியமானதொன்று என மகிந்த அவ்வேளை பதிலளித்திருந்தார்.

மனித உரிமைகள் ஆணைக்குழு இந்தமாதத்தில் கூடும்போது நாமும் அதில் கலந்து கொள்ளவுள்ளோம். இந்த அரசு கடுமையான விதத்தில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டு வருவதாக ஏனைய பல பன்னாட்டு அமைப்புக்களிடமும் எடுத்து விளக்கியுள்ளோம்.

கடந்த தடவை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் நாம் முன்வைத்த இலங்கை அரசுமீதான குற்றச் சாட்டுக்கள் காரணமாக, அவசர காலச்சட்டத்தின் 5ஆவது பிரிவில் மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இத்தகைய அழுத்தங்களுக்கு அரசு தலைசாய்த்தே ஆகவேண்டும் எனவும் மகிந்த தெரிவித்திருந்தார். அதுமட்டுமன்றி நாட்டின் முக்கிய பதவிகள் சிங்கள பௌத்தர்கள் மூலமே நிரப்பப்பட வேண்டுமென்ற யோசனை மூலம் நாட்டின் ஏனைய இனத்தவர்கள், மதத்தவர்களது மனித உரிமை மீறப்படுகின்றது. இது வோர் நியாயமற்ற யோசனையாகும். அரசமைப்புக்கு முரணானது எனவும் மகிந்த அவ்வேளையில் கருத்து வெளியிட்டிருந்தார்.

இவை ஒருபுறமிருக்க 2008 ஆம் ஆண்டு ஜூலை மாதத்தில் பி.பி.ஸி 'சந்தேசிய' சிங்கள சேவைக்கு நேர்காணல் வழங்கிய இலங்கைக்கான முன்னாள் பிரிட்டன் தூதுவர் டேவிட் கிளாட்சன், ஜனாதிபதி பிரேமதாசவின் ஆட்சிக்காலத்தில் எனது நல்ல நண்பராக இருந்த இப்போதைய ஜனாதிபதி மகிந்தராஜபக்ச அடிக்கடி என்னைச் சந்தித்து வந்தார். அவ்விதச் சந்திப்புக்களின் போதெல்லாம் நாட்டின் சகலபகுதிகளிலுமிருந்தும் காணாமல் போகும் இளைஞர்களைக் கண்டுபிடிக்குமாறு இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்குமாறு என்னைக் கேட்டுக்கொள்வார். அவர்களது கஷ்டத்தை உலகத்துக்கு வெளிப்படுத்தவெனத் தாம் காணாமல் போனோரது பெற்றோர் மற்றும் உறவினர் களது சங்கமொன்றை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவித்திருந்தார். அது குறித்து ஐ.நா.சபைக்கும், சர்வதேச மன்னிப்புச் சபைக்கும் தெரியப்படுத்துமாறு அந்த வேளையில் மகிந்த ராஜபக்ச என்னைக் கேட்டுக்கொண்டார் எனத் தெரிவித்திருந்தார்.

அன்றுபிரிட்டன் தூதுவரிடம் இவ்விதம் தமது நிலைப்பாட்டை வெளிப்படுத்திய மகிந்த ராஜபக்ச, கடந்த வாரத்தில் காணாமல் போனோரைக் கண்டறியும் அலுவலகமொன்றை மைத்திரிபால–ரணில் அரசு நிறுவவுள்ளதாகவும், அது நாட்டையும் படையினரையும் காட்டிக் கொடுக்கும் ஒரு செயற்பாடாகும் எனவும் குற்றஞ்சாட்டி விமர்சித்திருந்தார். அவ்வாறானால், முன்னைய பல சந்தர்ப்பங்களில் காணாமல் போனோர் குறித்து மகிந்த வெளியிட்ட கருத்துக்கள் நாட்டையும் நாட்டின் படையினரையும் காட்டிக் கொடுக்கும் ஒன்றாக அமையவில்லையா என்ற கேள்வி எழுவதும் நியாயமே!

உண்மையில் அன்று மகிந்த காணாமல் போனோரது பெற்றோர் மற்றும் உறவினர்களது சங்கத்தை உருவாக்கி அதில் வடபகுதியைச் சேர்ந்த காணாமல் போனோரின் பெற்றோர்களையும் உறுப்பினர்களாகச் சேர்த்துக் கொண்டமை, காணாமல் போன றிச்சார்ட் டி சொய்சாவின் தாயாரான மனோராணி சரவணமுத்து போன்றவர்களின் உதவியுடனாகும். வடபகுதியைச் சேர்ந்த குறித்த தரப்பினர்களையும் தமது அந்தச்சங்கத்தில் இணைத்துக் கொண்டால் தமது சங்கம் பிரபல்யம் பெறுமென மகிந்த நம்பினார். அவ்விதம் தமிழ்த் தரப்பினரும் இணைந்த சங்கத்தின் கூட்டம் கொழும்பு கோல்பேஸ் திடலில் மகிந்தவின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டமை வரலாற்றுப் பதிவொன்றாகும். அன்று அத்தகைய விதத்தில் செயற்பட்ட மகிந்த இன்று காணாமல் போனோரைக் கண்டறியும் அலுவலகம் உருவாக்கப்படுவதை கடுமையாக எதிர்க்க முனைவதேன்?

உண்மையில் அன்று பிரேமதாசவால் நியமிக்கப்பட்ட காணாமல் போனோரைக் கண்டறியும் ஆணைக்குழுவுக்கு உரிய வகையில் பொருத்தமான உறுப்பினர்கள் நியமிக்கப்படவில்லை என்றும், அதற்கு உரிய அதிகாரங்கள் வழங்கப்படவில்லை எனவும் மகிந்த விமர்சித்திருந்தார். அதிகாரமற்ற ஆணைக்குழுவை நியமிப்பதால் என்ன பயன்? பிரச்சினையைத் திசை திருப்ப இத்தகைய ஆணைக்குழுவை நியமிக்கவேண்டுமா? ஆணைக்குழுவுக்கான உரிய பொருத்தமான அதிகாரங்களை வழங்குங்கள் என அவ்வேளை, மகிந்த நாடாளுமன்றத்தில் உரையாற்றியிருந்தார்.

அதே மகிந்த ராஜபக்சவும் அவரது தரப்பினரும் இன்று காணாமல் போனோரைக் கண்டுபிடிக்கும் அலுவலகமொன்றை உருவாக்குவது தேசத்துரோகச் செயற்பாடெனக் கடுமையாகக் கூக்குரல் இடுகின்றனர்.

அவ்வாறானால், அன்றைய மகிந்த ராஜபக்ச இன்று காணாமல் போய்விட்டாரா?

## முன்னெச்சரிக்கையுடன் நடக்கப் பழகிக் கொள்வோம்

கடந்த சில மாதங்களுக்கு முன்னரான கால கட்டமொன்றில், வட பகுதியில் குறிப்பாக யாழ். குடாநாட்டில் பொதுமக்கள் திருட்டுக் கோஷ்டிகளது அட்டகாசம் காரணமாக இரவு வேளைகளில் பெரும்பாலும் நித்திரைக்குச் செல்லாது வீடுகளில் விழித்திருக்க நேரிட்டதாகச் செய்திகள் வெளிவந்ததுண்டு. மிகுந்த சிரமத்துடன் சிறுகச் சிறுகச் சேமித்து குடும்பத்தின் பெண்களுக்காக வாங்கி வைத்துப் பயன்படுத்திய தங்க நகைகள் முதல், வீடுகளில் தமது பயன்பாட்டுக்காக பொருத்தி வைத்திருந்த நீர் இறைக்கப் பயன்படுத்தப்படும் மோட்டார் பம்பிகள் வரை தமது உடைமைகளைத் திருடர்களிடம் பறிகொடுக்கும் நிலை யாழ். குடா நாட்டு மக்களில் பலருக்கு ஏற்பட்டிருந்தது. கிராமப் புறங்களிலுள்ள வீடுகளைக் குறிவைத்து வெளியிடத்துத் திருட்டுக் கோஷ்டியினர் திருட்டில் ஈடுபடும் வாய்ப்பு மிகக் குறைவே.

குறித்த பகுதியில் உள்ள ஒருவரோ, பலரோ, குறித்த வீடொன்றை தொடர்ச்சியாக நோட்டமிட்டு, அந்த வீட்டவர்கள் வெளியே செல்லும் வேளைகளைக் கணிப்பிட்டு வழங்கும் தகவல்களை ஆதாரமாகக் கொண்டே திருட்டுக் கோஷ்டிகள் தமது நடவடிக்கைகளைத் திட்டமிட்டு, பொதுமக்களது பொருள்களை கொள்ளையிட்டு வந்தனர். வாள் வெட்டு, தாக்குதல்கள் போன்ற தீவிர அச்சுறுத்தல் செயற்பாடுகளால் மக்களை அச்சுறுத்தித் தமது காரியங்களைச் சாதித்து வந்த இவர்கள் மீதான அச்சம் காரணமாக, ஒரு வீட்டில் கொள்ளை இடம் பெறும் சமயம் அது குறித்து உணர்ந்து கொண்டாலும், அண்டை அயலில் வசிப்போர் உதவிக்குச் சென்று கொள்ளையர்களை விரட்டியடிக்க இயலாத சூழ்நிலையும் நிலவியதுண்டு.

இது குறித்து சமூக மட்ட அமைப்புக்கள், புத்திஜீவிகள் எடுத்துக் கொண்ட அக்கறை காரணமாக நீதித் துறை பிரமுகர்களது ஒத்துழைப்புடன் இத்தகைய கொள்ளைக் கோஷ்டியினர்களது செயற்பாடுகள் கடந்த சில மாதங்களாக ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டிருந்தன.

ஆயினும் தற்போதைய நல்லூர் கந்தசுவாமி கோயில் வருடாந்த உற்சவ காலத்தை முன்னிட்டு மேற்குறித்த கொள்ளைச் சம்பவங்கள் குடாநாட்டில் மீண்டும் தலையெடுத்துள்ளதாகத் தோன்றுகிறது. "வீட்டிலுள்ளவர்கள் கோயிலுக்குச் சென்றவேளை நகைகள்திருட்டு; நல்லூரில் சம்பவம் என்ற செய்தியை வாசித்தபோது, இது எமது வீட்டுக்கான பாதுகாப்பை உறுதிப்படுத்தாது குடும்பத்தவர்கள் கோயிலுக்குச் செல்வதை நோட்டம் பார்த்துத், திட்டமிட்டுத் திருட்டுக்களை மேற்கொள்ளும் கோஷ்டியினருக்கு நாமாகவே வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுப்பதாக அமைவதாகக் கருதத் தோன்றுகிறது.


திருடாதே என்ற திரைப்படத்துப் பாடலொன்றின் வரி திருடராய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது என்றமைகின்றது. எமது இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் அதற்கான எதிர்பார்ப்பு ஒரு போதுமே சாத்தியப்படப் போவதில்லை.

எனவே நாம் இன்றைய காலச் சூழ்நிலைக்கு ஏற்றவாறு சிந்தித்துச் செயற்படுவதே புத்திசாலித்தனமானதாகும். கோயில் உற்சவத்துக்கு குடும்பத்தவர்களுடன் செல்லும் வேளை தமது வீட்டினதும், வீட்டுப் பொருள்களுக்குமான பாதுகாப்பை உறுதிப்படுத்திச் செல்வது புத்திசாலித்தனமானது என்பதை மனதில் இருத்திச் செயற்பட முனைவோம்.

கே.கணேஸ்
திருநெல்வேலி

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆண்களுக்கான 200 மீற்றர்; மீண்டும் மின்னியது மின்னல்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான 200 மீற்றர் ஓட்டப் போட்டியில் மின்னல் வேக மனிதர் என்று அழைக்கப்படும் உசைன் போல்ட் தங்கப் பதக்கம் வென்றார்.

உசைன் போல்ட்டுக்குக் கடும் சவாலைக் கொடுக்க வல்லவராகக் கருதப்பட்ட அமெரிக்காவின் ஜஸ்டின் கேத்லின் இறுதிப் போட்டிக்குத் தகுதி பெறாத நிலையில் தங்கம் வெல்வதில் உசைன் போல்ட்டுக்கு அதிக வாய்ப்புக்கள் இருந்தன.

இதன்படி அவர் பந்தயத் தூரத்தை 19 செக்கன்கள் 78 மில்லி செக்கன்களில் அடைந்து தங்கப் பதக்கத்தை வென்றார். போல்ட்டுக்கும் வெள்ளிப் பதக்கம் வென்ற கனடாவின் அன்ரே கிராசிக்கும் இடையே கிட்டத்தட்ட 3மீற்றர் இடைவெளி பேணப்பட்டது. இதன்படி அன்ரே கிராசி 20 செக்கன்கள் 02 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்தார். பிரான்ஸ் வீரர் கிறிஸ்தொப் 20 செக்கன்கள் 12 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கம் வென்றார்.

உசைன் போல்ட் தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினாலும் ஒரு விதத்தில் அவர் தோல்வியடைந்ததாகவே கருதப்படுகின்றது. குறுந்தூர ஓட்டப்போட்டிகள் ஆரம்பிப்பதற்கு முன்னைய நாள் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் போல்ட், 19 செக்கன்களுக்குள் ஓடி முடித்து உலக சாதனை படைப்பேன் எனத் தெரிவித்தார். அதை அவரால் செய்ய முடியாமல் போயுள்ளது. இதை போல்ட்டும் ஏற்றுக்கொண்டுள்ளார்.

ஒலிம்பிக் தொடரில் இம்முறை என்னால் ஒரு சாதனை படைக்க முடியுமாயின் அது 200 மீற்றர் ஓட்டத்திலேயே சாத்தியமாகும் என்று எண்ணினேன். கடும்முயற்சிகளை மேற்கொண்டேன். ஆனால் என்னால் அதைச் சாதிக்க முடியாமல் போனது.

எனக்கு இந்தப்போட்டி ஒரு முனையில் தங்கம், மறுமுனையில் ஏமாற்றம் என இரு பெறுதிகளைத் தந்துள்ளது என போல்ட் தெரிவித்தார்.

200 மீற்றர் ஓட்டத்தின் உலக சாதனை 19 செக்கன்கள் 19 மில்லி செக்கன்கள் ஆகும். இதுவும் போல்ட்டின் பெயரிலேயே உள்ளது. மொத்தத்தில் அவர் தன்னிடம் தானே தோற்றுள்ளார். (ம-ரி4)

## குண்டெறிதலில் அமெ. தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான குண்டெறிதலில் அமெரிக்கா தங்கப் பதக்கத்தை வென்றது.

அமெரிக்காவின் சார்பாகக் களமிறங்கிய ரியான் குரூசன் 22 மீற்றர் 52 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றினார். அமெரிக்காவின் பிறிதொரு வீரரான ஜோய் கோவாஸ் 21மீற்றர் 78 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், நியூசிலாந்தின் தோமஸ் வோல்ஸ் 21மீற்றர் 36 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-ரி4)




## 400 மீ. தடை தாண்டலில் அமெரிக்காவுக்குத் தங்கம்

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற 400 மீற்றர் தடை தாண்டலில் அமெரிக்காவுக்குத் தங்கம் கிடைத்தது.

அமெரிக்காவின் சார்பாகக் களமிறங்கிய கிளெமென்ற் 47 செக்கன்கள் 73 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தங்கப் பதக்கத்தையும், கென்ய வீரர் மொச்செரு 47 செக்கன்கள் 78 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெள்ளிப் பதக்கத்தையும், துருக்கியின் கொபில்லோ 47 செக்கன்கள் 92 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம-ரி4)



## ஆண்கள் ஹொக்கிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா தங்கம் வென்றது

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற ஆண்களுக்கான ஹொக்கிப் போட்டியில் ஆர்ஜென்ரீனா தங்கப் பதக்கத்தைக் கைப்பற்றியது.

தங்கப்பதக்கத்துக்கான போட்டியில் ஆர்ஜென்ரீனாவை எதிர்த்து [illegible] பரீட்சை நடத்தியது. [illegible] கணக்கில் வெற்றிபெற்ற ஆர்ஜென்ரீனா தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றியது. பெல்ஜியத்துக்கு வெள்ளிப் பதக்கம் கிடைத்தது.

வெண்கலப் பதக்கத்துக்கான ஆட்டத்தில் ஜேர்மனியும், நெதர்லாந்தும் எதிர்த்து மோதின. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு [illegible] சமநிலைத் [illegible] வைத்து நெதர்லாந்தை வீழ்த்தி ஜேர்மன் வெண்கலம் வென்றது. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பூப்பந்தாட்டத்தில் ஜப்பானு...

ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் பிரிவு இரட்டையர் பூப்பந்தாட்டத்தில் ஜப்பானுக்குத் தங்கப் பதக்கம் கிடைத்தது.

ஜப்பானின் சார்பாகக் களமிறங்கிய டேக்சி, மக்சுமோ இ... பெடெர்சன் இ... றது. டென்ம... பதக்கம் கிடை...






## ஒரு ... ரியே...

பிரேஸிலின் ரி... நகரில் ஒலிம்... பெற்றுவரும் நி... மான கொலை... பவங்களும் அ... வருகின்றன. ரி... ஸாரின் கருத்து... ஒரு நாளில் 65... கேறி வருவதாக... ரியோ டி ஜெனி... பகுதியான பை... ஸிலேயே அதிக... இடம்பெறுவதாக... நிறுவனம் ஒன்று... ளது. குறித்த ... அந்த நிறுவனம்... ஈடுபட்டபோது, ... பெற்ற துப்பாக்... ஒன்றையும் குறி... கமராவில் பதிவு... இந்தக் காட்டும்... நடவடிக்கைகள்... பாதிக்காமலில்லை... தொடர் ஆரம்... நாள்களுக்கு மு... கடற்கரையில் து... டப்பட்ட உடல்கள்... சர்ச்சை ஏற் பட்... தொடரில் தாக்கு... ஓர் உள்ளூர் அ... ஐ.எஸ். (ஈராக்,... ஸ்ரேட்) அமை... செய்யப் பட்டமை... கைது வேட்டை ந...

## பளுதூக...

ரியோ ஒலிம்பிக் தொ... முன்தினம் நடைபெற்... எடைப்பிரிவு பளு... ஜோர்ஜியா வீரர் உ... யுடன் தங்கம் வென்... ஜோர்ஜியாவைப் பிர...

# ரு நாளில் 65 கொலைகள்
# யோ நகரின் இருண்ட முகம்



ரியோ டி ஜெனிரோவின் பிரதான அடையாளமான உலகின் நான்காவது பெரிய இயேசு சிலை

லின் ரியோ டி ஜெனிரோ ஒலிம்பிக் தொடர் நடை வரும் நிலையில், வழக்க காலை, கொள்ளைச் சம் ளும் அங்கே அரங்கேறி றன. ரியோ நகரப் பொலி கருத்துப்படி அந்த நகரில் ரில் 65 கொலைகள் அரங் ருவதாக அறியவருகின்றது. ஜெனிரோ நகரின் சேரிப் ன பைக்சடா பூளுமினென் அதிகளவான கொலைகள் றுவதாகப் பன்னாட்டுச் செய்தி ம் ஒன்று உறுதிப்படுத்தியுள் றித்த விடயம் தொடர்பாக றுவனம் செய்தி சேகரிப்பில் போது, மிக அருகில் நடை துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் யும் குறித்த நிறுவனம் தனது ல் பதிவு செய்துள்ளது.

காட்டுமிராண்டித்தனமான கைகள் ஒலிம்பிக் தொடரைப் மலில்லை. ரியோ ஒலிம்பிக் ஆரம்பிப்பதற்கு ஒருசில ருக்கு முன்னர் குறித்த நகரின் ரயில் துண்டு துண்டாக வெட் உடல்கள் கண்டுபிடிக்கப்பட்டு ஏற் பட்டது. ரியோ ஒலிம்பிக் ல் தாக்குதல் நடத்துவதற்காக ளூர் ஆயுதக்குழு ஐ.எஸ். (ஈராக், சிரிய இஸ்லாமிக் அமைப்புடன் இணைந்து பட்டமை கண்டுபிடிக்கப்பட்டு வட்டை நடத்தப்பட்டது. ஒலிம் பிக் தொடரைக் காணவரும் மக்களி டம் உள்ளூர் வாசிகள் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபடுகின்றனர். ஒலிம்பிக் தொடருக்காக வந்துள்ள வீரர், வீராங்கனைகளிடத்தில் துப் பாக்கி முனையில் கொள்ளைகள் நடத்தப்படுகின்றன. இவற்றையும் தாண்டி ஒலிம்பிக் தொடர் நடை பெற்றுக்கொண்டுதான் வருகிறது. மொத்தத்தில் ஒலிம்பிக் தொடரின தும், அதனுடன் நேரடித் தொடர் புடையவர்களதும் நிலை கத்தியின் முனையில் நடப்பதைப் போலவே உள்ளது. (ம-ரி4)

# பக்கச்சார்பான நடுவர்கள் அதிரடியாக நீக்கப்பட்டனர்

ரியோ ஒலிம்பிக் தொடரில் குத்துச் சண்டைப் போட்டிகளின் தீர்ப்புக்களை மீளாய்வு செய்த பன்னாட்டு ஒலிம்பிக் சம்மேளனம், சில நடுவர்கள் பக்கச் சார் பாகச் செயற்பட்டதாகத் தெரிவித்து அவர் களைப் பணிநீக்கம் செய்துள்ளது.

239 குத்துச் சண்டைப் போட்டிகளில் கிட்டத்தட்ட 60 போட்டிகளின் முடிவுகள் தவறானவை என முறைப்பாடு தெரி வித்ததையடுத்து அவற்றை ஆராய்ந்து பார்த்த பன்னாட்டுக் குத்துச்சண்டைச் சம்மேளனம், பக்கச்சார்பாகச் செயற் பட்ட நடுவர்களைப் பணிநீக்கம் செய் தது. இது தொடர்பாகப் பன்னாட்டு குத்துச்சண்டைச் சம்மேளனம் விடுத் துள்ள அறிக்கையில், நடுவர்களின் கனவான் தன்மைமீது சந்தேகம் தெரிவிக்கப்பட்டுப் பல முறைப்பாடுகள் வந்து குவிந்தன. இதனையடுத்து முழுமையாகப் பரிசீலனை செய்வது என்று முடிவெடுக்கப்பட்டு அவ்வாறு பக்கச் சார்பாகச் செயற்பட்ட நடுவர் களைப் பணிநீக்கம் செய்துள்ளோம். எனினும் வழங்கப்பட்ட முடிவுகளில் மாற்றங்கள் இருக்காது எனக் குறிப்பிடப் பட்டுள்ளது. (ம-ரி4)

# ஐயாயிரம் மீற்றர் ஓட்டத்தில் தங்கத்தை குறிவைக்கும் அமெ.




ரியோ ஒலிம்பிக் தொடரில் ஆண்களுக் கான 5 ஆயிரம் மீற்றர் ஓட்டத்தில் அமெரிக்கா தங்கம் வெல்ல அதிக வாய்ப்புக்கள் உள்ள தாகக் கருதப்படுகிறது. அரையிறுதிப் போட் டிகள் நேற்று நடை பெற்றன. இறுதிப் போட்டிக்கு எட்டு வீரர்கள் தெரிவானார் கள். இவர்களில் அமெ ரிக்க வீரர் பவுல் செலிமோ 13 நிமிடங் கள், 19 செக்கன்கள், 54 மில்லி செக்கன்களில் இலக்கை அடைந்து தனது 'பிரிவில் முத லிடத்தைப் பிடித்தார். இதுவே 5 ஆயிரம் மீற்றர் ஓட்ட அரையி றுதியில் ஆகச்சிறந்த அடைவு மட்டமாக உள்ளது. இரண்டா வது இடத்தைப்பிடித்த வீரரைவிட இது 15 செக்கன்கள் குறை வாகும். இதனால் இன்று நடைபெற வுள்ள இறுதியில் பவுல் செலிமா மூலம் அமெரிக்கா தங்கம் வெல்ல அதிக வாய்ப்பு உள்ளதாகக் கருதப்படுகிறது. (ம-ரி4)

# தூக்கலில் ஜோர்ஜியா வீரர் சாதனை

ம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற 105 கிலோ ிவு பளுதூக்கலில் வீரர் உலக சாதனை ம் வென்றார். வைப்பிரதிநிதித்துவம் செய்து களமிறங்கிய லக்சா ரலக்ஸ்டி என்ற வீரர் ஒட்டுமொத்த மாக 481 கிலோ பளுவைத் தூக்கி தங்கப் பதக்கத்தைக் கைப்பற் றினார். ஆர்மெனிய வீரர் ஜோர் மனிஸ்ஜன் ஒட்டுமொத்தமாக 451 கிலோ பளுவைத் தூக்கி வெள் ளிப் பதக்கத்தையும், ஜோர்ஜியா வின் பிறிதொரு வீரர் ஜரக்லி ஒட்டு மொத்தமாக 448 கிலோ பளு வைத் தூக்கி வெண்கலப் பதக்கத் தையும் கைப்பற்றினர். (ம-ரி4)

# பானுக்குத் தங்கப்பதக்கம் கிடைத்தது

சுமோ இணை, டென்மார்க்கின் ஜுல், டர்சன் இணையை வீழ்த்தித் தங்கம் வென் டென்மார்க்கின் இணைக்கு வெள்ளிப் கம் கிடைத்தது. வெண்கலப் பதக்கத்தை தென்கொரியாவின் சின், ஜங் இணை வென் றது. தென்கொரிய இணை சீன இணையை வீழ்த்தியே தனது வெண்கலத்தைக் கைப்பற் றியது. (ம-ரி4)






# அமெரிக்காவுக்கு 100 பதக்கங்கள்

ரியோ ஒலிம்பிக் தொடரில் அமெரிக்கா தனது 100 ஆவது பதக்கத்தைக் கைப்பற்றி அசத்தியுள்ளது. இரண்டாவது இடத்திலுள்ள பிரிட்டனுக்கும் அமெரிக்காவுக்கும் இடையில் மிகப்பெரும் இடைவெளி பேணப்படுகிறது.

இதன்படி அமெரிக்கா 35 தங்கப்பதக்கங்கள், 33 வெள்ளிப் பதக்கங்கள், 32 வெண்கலப் பதக்கங்கள் ஆகியவற்றைத் தன்வசம் வைத் துள்ளது. 22 தங்கப் பதக்கங்கள், 21 வெள்ளிப் பதக்கங்கள், 13 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 56 பதக்கங்களைப் பிரிட்டன் கைப் பற்றியுள்ளது. 20 தங்கப் பதக்கங்கள், 16 வெள்ளிப் பதக்கங்கள், 22 வெண்கலப் பதக்கங்கள் என மொத்தம் 58 பதக்கங்களுடன் சீனா மூன்றாவது இடத்தில் உள்ளது. சீனாவை விட பிரிட்டன் குறைந்த பதக்கங்களைப் பெற்றுள்ள நிலையிலும் தங்கப் பதக்கங்களின் அடிப்படையிலேயே அந்த அணி இரண்டாம் இடத்தைப் பிடித்துள்ளது.

13 தங்கப் பதக்கங்களுடன் ஜேர்மனி நான் காவது இடத்திலும், 12 பதக்கங்களுடன் ரஷ்யா ஐந்தாவது இடத்திலும் உள்ளன. (ம-ரி4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களுக்கு வியாழ மாற்றம் எப்படி? விருச்சிகம்

**குருப் பெயர்ச்சி, ஓகஸ்ட் 2ஆம் திகதி, தமிழுக்கு ஆடி 18, ஆடி அமாவாசை கூடிய நன்னாளில் காலை 9.24 மணிக்கு சிம்ம ராசியில் இருந்து கன்னி ராசிக்கு குரு மாறுவதால் ஏற்படுகிறது. கன்னி ராசிக்கு மாறும் குரு உங்கள் ராசிக்கு எந்த இடத்தில் இருக்கிறார். அதனால் உங்கள் ராசிப்படி உங்களுக்கு ஏற்படும் நன்மை–தீமைகளைப் பற்றிப் பார்ப்போம். அதிக ஆதாயம் அடையும் ராசியினர் – இடபம், சிம்மம், விருச்சிகம், மகரம், மீனம் இவர்கள் ராசிக்கு குரு 2,5,7,9,11 என முழு சுபப் பார்வை செலுத்துவதால் இந்த ராசியினருக்கு அதிக நன்மைகள் கிடைக்கும்.**



## விசாகம் 4ஆம் பாதம், அனுசம், கேட்டை வரை

விதியை மதியால் வெல்லலாம் என்று சொல்லும் விருச்சிக ராசி அன்பர்களே!

நியாயத்தையும், நேர்மையையும் நிலைநாட்ட வேண்டுமென்று பாடுபடுபவர்கள் நீங்கள். மூளைப் பலமே உங்களுக்கு மூலதனமாக இருக்கும். எவருக்கும் வராத யோசனைகள் உங்களுக்கு வரும். அது சீரோடும், சிறப்போடும் வாழ வழிவகுத்துக் கொடுக்கும். உங்களது யோசனைகளைக் கேட்டு நடந்தவர்கள், வெற்றிப்படிகளின் விளிம்பில் ஏறுவதால்தான், உங்களைச் சுற்றி நண்பர்கள் கூட்டம் இருந்து கொண்டே இருக்கிறது. ஆலோசனை சொல்வதில் அசகாய சூரர்களாக விளங்கும் நீங்கள், சொன்னது பலிக்கும். தூங்கும்பொழுது காணும் கனவும் பலிக்கும். வெற்றி ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு செயற்படுவீர்கள். உங்கள் ராசிநாதன் செவ்வாயாக இருப்பதால் ராஜ கிரகத்தின் ஆதிக்கம் உண்டு. செயல் ஸ்தானாதிபதி சூரியன் என்பதால் அரசு மரியாதைகள் வந்து சேரும்.

உங்கள் ராசிக்கு 2,5 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. தன பாக்யாதிபதியான குரு இப்பொழுது லாப ஸ்தானத்துக்கு வருகிறார். உங்கள் சுய ஜாதகத்தைப் புரட்டிப் பாருங்கள். களத்திர ஸ்தானாதிபதி சுக்கிரனின் பலத்தைப் பொறுத்தே வாழ்க்கைத் துணை அமையும். ராசிநாதன் செவ்வாயின் பலத்தைப் பொறுத்தே உடல் ஆரோக்கியம் அமையும். குரு இருக்கும் இடத்தைப் பொறுத்து தன லாபத்தை நிர்ணயிக்கலாம். சனியின் சஞ்சாரத்தைப் பொறுத்து சகாயங்களை காணலாம். மேற்கண்ட கிரகங்கள் ஜாதகத்தில் வலிமை பெற்றிருந்தால் நீங்கள் மதிக்கப்படுபவர்களாகவும், துதிக்கப்படுபவர்களாகவும் விளங்குவீர்கள்.

**லாப ஸ்தானத்தில் குருபகவான்!**

ஆடி 18ஆம் திகதி (2.8.2016) உங்கள் வாழ்க்கையில் ஓர் அற்புதமான நாளாக அமைந்தது. அன்றுதான் குருப்பெயர்ச்சி. குரு லாப ஸ்தானத்துக்கு வந்து பணத்தைப் பெருக்கிக் கொடுக்கப் போகிறது. இனித் தொட்ட காரியங்களில் வெற்றி கிடைக்கும். இலாபம் எதிர்பார்த்ததைவிட இருமடங்காக வந்து சேரும். உழைத்தும், களைத்தும் ஒவ்வொரு நாளும் பொருளாதாரத்தை அடையப் போராடிய காலம் மாறி, இப்பொழுது எளிய முறையில் சம்பாத்தியம் வரப்போகிறது.

உங்கள் ஜாதகப்படி லாப ஸ்தானத்துக்கு வரும் குரு, திரண்ட செல்வத்தை வாரி வழங்கப் போகிறார். தேக நலன் சீராகும். திசை எட்டும் புகழ் பரவும். முக்கிய புள்ளிகள் உங்கள் இல்லம் தேடிவந்து முன்னேற்றத்துக்கு வித்திடுவர். அடிப்படை வசதிகளைப் பெருக்கிக் கொள்வதில் ஆர்வம் காட்டுவீர்கள். பலருக்கும் முன்னேற்றம் படிப்படியாகத்தான் வரும். ஆனால் உங்களுக்கோ, பணபலம் கொடுக்கும் இடத்தில் குரு வந்து விட்டதால் திடீர் முன்னேற்றங்கள் வந்து திக்குமுக்காடச் செய்யும்.

உத்தியோகமாக இருந்தாலும் சரி, தொழிலாக இருந்தாலும் சரி ஏராளமான வாய்ப்புகள் எதிரில் வந்து அலை மோதும்.

இதில் மிகச் சிறப்பு என்னவென்றால் 2ம் இடம் மற்றும் 5ம் இடத்துக்கு அதிபதியான குரு, 11ம் இடமான லாப ஸ்தானத்தில் சஞ்சரிப்பதுதான். அதுமட்டுமல்ல, லாப ஸ்தானத்தில் சஞ்சரிக்கும் குரு பாக்ய ஸ்தானம் எனப்படும் இடமான 5ம் இடத்தைப் பார்க்கிறார்.

(தொடரும்)

# தவறான கணிப்புக்களால் யாழ்ப்பாணத்துக்கு அவப்பெயர்

தேவராசா பிறேமராஜா

சாராய வரி வருமானம் அதிகப்படியாக ஈட்டிக் கொள்ளப்படும் பிரதேசம் யாழ்ப்பாணம். அதிக சாராயத்தை குடித்து தள்ளுபவன்தான் யாழ்ப்பாணத்தவன் என்ற அர்த்தப் பொதிவு அங்கில்லை.

கடந்த மாதம் நிகழ்வொன்றில் பங்கு கொண்டிருந்த எமது நாட்டின் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மதுப் பாவனையில் அதிகளவு செல்வாக்கு செலுத்தும் முதல் மூன்று மாவட்டங்களாக தமிழ் மக்கள் செறிந்து வாழும் பிரதேசங்களான யாழ்ப்பாணம், நுவரெலியா மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களைக் குறிப்பிட்டிருந்தார். அதிலும் யாழ்ப்பாணம் மதுப்பாவனையில் முதலிடம் என்றும் குறிப்பிட்டிருந்தார். நாட்டின் தலைவரின் வாயில் இருந்து வரும் ஒவ்வொரு வசனமும் மகத்துவம் வாய்ந்தவை. அதற்கு ஏற்றாற்போல அவரைத்தொடர்ந்து ஒவ்வொரு அரசியல் மேடைகளிலும் சரி, விழிப்புணர்வு நிகழ்வுகளிலும்சரி இதே பேச்சுத்தான். தற்போதைய புதிய நல்லிணக்க அரசு போதைப்பொருள் இல்லாத இலங்கை என்ற தூரநோக்கை அடைவதற்காக தேசிய போதைப் பொருள் ஒழிப்புக்கொள்கையையும் செயற்றிட்டங்களையும் வகுத்து அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களை உற்சாகப்படுத்தி மதுசாரம் மற்றும் போதைப்பொருள் தடுப்பு செயற்றிட்டங்களை செயற்படுத்தி வருகின்றமை சிறப்பானதொரு விடயமாகும்.

இருப்பினும் மதுசாரப் பாவனையில் யாழ்ப்பாணம் முதலிடம் என்ற ஜனாதிபதியின் உரையானது தமிழ்ப் பிரதேசங்களில் வாழும் எம்மவர்களைத் தாழ்வு மனநிலைக்கு கொண்டு சென்றுள்ளது. அபிவிருத்திப் பாதையை நோக்கிச் செல்லும் தற்போதைய காலகட்டத்தில், மதுசாரப் பாவனையின் அதிகப்படியான நுகர்விடம் யாழ்ப்பாணம் தான் என்ற ஜனாதிபதியின் முழக்கமானது, எம்மவர்களின் கலை கலாசார விழுமியங்களில் பாதிப்பை ஏற்படுத்துவதாக அமைந்திருந்தது. பல்வேறு சமூக ஆர்வலர்களின் கருத்தும் அதுவே. இருப்பினும் மதுசாரப் பாவனையில் யாழ்ப் பாண மாவட்டம் முதலிடம் என்ற கூற்றின் சரியான தெளிவை இந்த இடத்தில் ஒவ்வொருவரும் அறிந்திருக்க வேண்டியது அவசியமானதாகும். மதுப் பாவனையில் யாழ்ப்பாணம் முதலிடம் என்று கூறுபவர்கள் பின்வரும் சில கேள்விகளுக்கான பதிலைத் தேடிப்பார்ப்பதன் மூலம் அந்த கருத்தை மறுதலிக்கமுடியும்.

1.போரின் பிற்பட்ட காலத்தில் அதிக சுற்றுலாப் பயணிகள், வெளிநாட்டவர் உட்பட தென்னிலங்கையை சார்ந்தவர்கள் வந்துபோகும் சுற்றுலாத்தளமாக முதன்மை அடைந்திருப்பது யாழ்ப்பாண மாவட்டம்.

2.இலங்கையிலேயே அதிக பனஞ்சாராய உற்பத்தியை வெளி மாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்யும் மாவட்டங்களில் முதல் இடம் வகிப்பது யாழ்ப்பாண மாவட்டம்.

3.எந்தவொரு மாவட்டத்திலும் இல்லாத அளவுக்கு அதிகளவு இராணுவம் குவிக்கப்பட்டு இருப்பதும் யாழ்ப்பாண மாவட்டத்தில்தான்.

4.தற்பொழுது கோடை விடுமுறையில் ஐரோப்பிய நாடுகளில் இருந்து வருகை தரும் சுற்றுலாதாரிகள் அதிகம் தஞ்சமடைந்து இருப்பதும் யாழ்ப்பாணத்தில்தான்.

எனவே மேற்குறிப்பிட்ட சம்பவங்களை ஆராயும்போது அதிக மதுப்பாவனையாளன் யாழ்ப்பாணத்தவன் அல்ல என்பதும், ஜனாதிபதி உரையில் குறிப்பிட்டது அதிக சாராய வரி வருமானம் கிடைப்பதில் முதலிடம் பெறுவது யாழ்ப்பாணமே தவிர, மதுப்பாவனையாளன் அதிகம் வாழும் பிரதேசம் யாழ்ப்பாணம் அல்ல என்ற உண்மையை ஒவ்வொருவரும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

யாழ்ப்பாணத்தில் அதிக மதுசாரம் விலைபோவதற்கு காரணமாக அமைவது வெளிநாட்டவர்களின் வருகையும், பிற மாவட்டத்தினரின் இருப்புமே ஆகும். உதாரணமாக காலி மாவட்டத்தில் உள்ள ஒருவர் யாழ்ப்பாண மது விடுதியில் சாராயம் குடித்தால், அதன் வரிவருமானம் யாழ்ப்பாண மது வரித் திணைக்கள புள்ளி விவரத்தில் பதியப்படுமே தவிர, காலி மாவட்ட மதுவரித் திணைக்களத்தின் புள்ளி விவரத்தில் பதிவேற்றப்படமாட்டாது. அது போலவே வெளிமாவட்டங்களுக்கு விற்பனைக்காக ஏற்றுமதி செய்யப்படும் அனைத்துப் பனஞ் சாராயங்களுக்குமான வரிவருமானம் யாழ்ப்பாண மதுவரித் திணைக்களத்திலேயே பதிவு செய்யப்படும். ஆனால் போருக்குப் பின்னர் யாழ் மாவட்டத்தில் மதுப் பாவனை சற்று அதிகரித்து காணப்படுகின்றது என்பது ஒருபுறமிருக்க, மதுசாரப் பாவனையை அதிகரித்துக் காட்டும் இதே பிரச்சினை ஏனைய மாவட்டங்களில் இருந்தாலும் யாழ்ப்பாணத்தில் அது சற்று அதிகமாகவே இருப்பதாக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அது மட்டுமல்லாது மதுசாரப் பாவனையை நவீன நாகரிகமாகப் பார்க்கும் சமூகத்தின் மத்தியில் மது சாரப் பாவனையை ஒரு பெறுமதியற்ற செயற்பாடாக வும் ஏமாந்த முட்டாள்களின் செயலாகவும் பார்க்கும் சமூகமே யாழ்ப்பாண சமூகம் என்பதை கூறிக்கொள்வதில் பெருமிதம் கொள்வோம். இந்தப் பிரச்சினை ஒருபுறமிருக்க, இன்றைய தினசரிப் பத்திரிகைகளின் வாயிலாகத் தினம்தோறும் பார்க்கும் விசேட செய்தியாக, போதைப் பொருள் கைப்பற்றப்பட்டது போன்ற செய்திகள் வலம் வந்து கொண்டிருக்கின்றன. இதனைப் பார்க்கும்போது அனைவரினது சிந்தனையிலும் தோன்றுவது யாழ்ப்பாணத்தில் இப்போது போதைப் பொருள்தான் பிரச்சினை என்று. பிடிபடுகின்ற போதைப்பொருளுக்கு என்ன நடந்தது? பிடிபட்டவர்கள் என்ன ஆனார்கள்? பிடிபட்டவர்களை சட்டத்துக்கு முன்னாள் நிறுத்தி பெற்றுக்கொடுத்த தண்டனை என்ன? அனைத்துப் போதைப் பொருள்களும் யாழ்ப்பாணத்தில் பயன்படுத்துவதற்காகக் கடத்திவரப்பட்டதா? அல்லது இலகுவாக இந்தியாவில் இருந்து ஏனைய நாடுகளுக்கு கடத்திச்செல்ல இலகுவானதும் கிட்டியதுமான கடல் மார்க்க தளமாக யாழ் குடாநாடு விளங்குகின்றமை காரணமா? போன்ற காரணகாரிய அலசல் செய்திகளைக் காண முடிவதில்லை.

உண்மையில் யாழ்ப்பாணத்தில் போதைப்பொருள் என்பது சொல்லிக்கொள்ளும் அளவுக்கு ஒரு பெரிய பிரச்சினையே இல்லை. தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் அறிக்கையின்படி, யாழ்ப்பாணத்தில் விரல்விட்டு எண்ணக்கூடிய அளவுக்கே போதைப் பொருள் பாவனை உள்ளது. குறிப்பாக வியாபார வர்த்தக நடவடிக்கையில் ஈடுபடுபவர்கள் மற்றும் போக்குவரத்து பிரிவுகளில் வேலை செய்பவர்களில் சிலருமே இப்படியான குற்றச்செயல்களில் ஈடுபடுகின்றனர். இருந்தபோதிலும், மதுசார, சிகரட் கம்பனிகளின் தந்திரோபாயங்களாக இந்த செயல்நிலைகள் இருக்குமோ என்பதாக சமூக ஆர்வலர்களின் யதார்த்த சிந்தனை ஐயம் கொள்கின்றது.

*கட்டுரையாளர்*
*தலைவர், மதுசாரத்துக்கு எதிரான தமிழ் இளைஞர் அணி*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழனித்துரை தர்மகுமாரன்

# வீதி விபத்துக்களைத் தடுக்க வழியேதும் இல்லையா....?

இன்றைய மனிதர்களின் தலைவிதியை தீர்மானிக்கும் சக்தியாக வீதி விபத்துக்கள் விளங்குகின்றன. பத்திரிகைச் செய்திகளைப்பார்க்கும்போதுகுறைந்ததுஒருநாளில் ஐந்துக்குக் குறையாத விபத்துக்கள் ஏற்படுகின்றன. அதில்சிலசாவிலேயே முடிகின்றன. வீதி விபத்துக்கள் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன. சாவு வீடுகளும் நடந்து கொண்டே இருக்கின்றன. விபத்துக்களில் சிக்கிய உறவுகளின் நிலையோ ஊசல் ஆடுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் இதற்கான காரணங்களைக் கண்டறிந்து, உடனடித் தீர்வை மேற்கொள்ள வேண்டும். இல்லையெனில் பெரிய விளைவுகளை சந்திக்க நேரிடும்.

பச்சிளம் பாலகனை வீதியிலே பந்தாடிய போது, பலரது குரல்களும் ஓங்கி ஒலித்தது. முகப்புத்தகங்களில், அனுதாபத்தையும் ஆட்சேபனையையும் தெரிவித்தனர். பேருந்துகளிலும், தனியார் பஸ்களிலும், முச்சக்கரவண்டிகளிலும் வாசகங்கள் எழுதி ஒட்டப்பட்டிருந்தன. மக்கள் மத்தியிலே விபத்து பற்றிய விழிப்புணர் ஏற்படுத்தப்பட்டது. காவல்துறையும் சட்டமும் தன் பங்குக்குக் கடுமையான நடவடிக்கைகளை மேற்கொண்டன. இதனால் மக்கள் மன நிம்மதியுடன் நடமாடினர்.

இந்த நிம்மதி சிறிது காலம் நிலைத்து நிற்க முன்னர், மீண்டும் வீதிவிபத்துக்கள் அரங்கேறத் தொடங்கிவிட்டன. இதனால் மீண்டும் மக்கள் அச்சத்தில் மூழ்கியுள்ளனர். விபத்து என்பது கண்ணை இமைக்கின்ற பொழுதினிலோ அல்லது கைநொடிப் பொழுதினிலோ ஒரு கணத்தில் ஏற்படுவது. ஆனால் விபத்தினால் ஏற்படும் வளைவுகள் விபரீதங்கள் எண்ணில் அடங்காதவையாகக் காணப்படுகின்றது.

விபத்து ஏற்படுவதற்கான முக்கிய விடயமாக, அவதான குறைவும், வீதி விதிகளை அறியாமையையும் காரணமாகக் கூறப்படுகின்றன. இன்றைய விபத்துக்கான காரணத்தைப் பல்வேறு வழிகளில் இனங்கண்டு கொள்ளலாம்.

1. யாழ்.மாவட்டத்தில் வாகனத்தில் எண்ணிக்கை அதிகரித்துக் கொண்டே செல்கின்றது. அதாவது குடும்பத்துக்கு மூன்று என்ற வகையில் வாகனத்தின் எண்ணிக்கையுள்ளது.
2. வாகன எண்ணிக்கையின் அதிகரிப்புக்கு ஏற்ப வீதிகள் அபிவிருத்தியடையவில்லை.
3. பலவீதிகள் குண்டும் குழியுமாகக் காணப்படுகின்றன.
4. வீதி விதிகளை மக்கள் முழுமையாக கடைப்பிடிக்காமையும் சட்டத்தின் முழுமையை அறியாமையும்.
5. வெளிநாட்டுப் பணத்தில் உல்லாசமாக இருப்போருக்குப் பணத்தின் பெறுமதியும்,உழைப்பின்பெறுமதியும்தெரியாமை. இதனால்தமது செந்த வாகனங்களைக் கூட பாதுகாப்பாகச் செலுத்தாமை.
6. வீதிச் சமிக்ஞைகள் பொருத்தப்படாமையும்வேகக்கட்டுப்பாட்டைமதிக்காமையும்.
7. தமது ஆளுமைக்குப் பொருந்தாத வாகனங்களைத்தெரிவுசெய்துசெலுத்துதல்.
8. மதுபோதையிலும் நித்திரைத் தூக்கத்துடனும் வாகனத்தைச் செலுத்துதல்.
9. கைத் தொலைபேசியைப் பாவித்துக் கொண்டு வாகனத்தை செலுத்துதல்.
10. மனிதாபிமானத்தையும் மானிடத்தின் புனிதத் தன்மையையும் அறியாது இருத்தல்.
11. வீதிகளிலே நாய்களின் எண்ணிக்கை வகை தொகையின்றி பெருகிக் காணப்படுதல்.
12. போட்டிக்கு வாகனங்களைச் செலுத்துதல்.

போன்ற காரணங்களை வீதி விபத்துக்கு அடுக்கிக் கொண்டே போனாலும், பயணிக்கும் நாம் மனிதர்கள் விலங்குகள் அல்ல. எனவே எமது கட்டுப்பாட்டை உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் இழந்து விடக்கூடாது.

ஏனெனில் இன்றைய காலகட்டத்தில் தமிழினத்தின் ஒவ்வொரு உயிரும் பெறுமதிமிக்கது. அதனை நாம் பாதுகாக்க வேண்டும். அதாவது குறிப்பிட்டுச் சொல்லக்கூடிய விடயம், தமிழினம் அபிவிருத்தியிலே மேலோங்கிச் செல்ல வேண்டிய காலத்தில் உள்ளது. பிறப்பு வீதம் குறைந்து செல்கின்றது. இறப்புவீதம் அதிகரித்துச் செல்கின்றது. அதில் வீதி விபத்துக்களிலும் கணிசமான இறப்பு ஏற்படுகின்றது. இதனைத் தவிர்த்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். வீதி விபத்துக்களைத் தடுப்பதற்கு நாம் கவனமெடுக்க வேண்டிய விடயங்கள்.

1. சாரதிகளும் பயணிகளும் வீதி ஒழுங்குகளைக் கடைப்பிடித்தல்.
2. களைப்பாக இருக்கும்வேளைகளிலும், தூக்கம் வரும்வேளைகளிலும் வாகனத்தை செலுத்துவதைத் தவிர்த்தல்.
3. போதையுடன் வாகனம் ஓட்டுதல் போதையுடன் பாதையில் நடத்தல் என்பவற்றைத் தவிர்த்தல்.
4. பாதசாரிகள் வலது பக்கமாக நடத்தல்.
5. பயணிகள் இரவு நேரங்களில் பயணிக்கும்போது மென்மையான நிறங்களிலான ஆடைகளை அணிதல்.
6. பாதசாரிகள் எப்போதும் பாதசாரிகள் கடவையூடாகப் பாதையைக் கடத்தல்.
7. பாதையிலே பாதசாரிகள் கூட்டமாக நடப்பதைத் தவிர்த்தல்.
8. சாரதிகள் மற்றும் பாதசாரிகளின் கவனத்தைக் கலைக்கும் விளம்பரப் படங்களை வீதியிலே அமைப்பதைத் தவிர்த்தல்.
9. பழுதுபட்ட பழைய வாகனம், ஒழுங்கற்ற வாகனம் தடுப்பு இல்லாத வாகனம், ரயர் வளம் தேய்ந்த வாகனம் போன்றவற்றைப் பயன்படுத்துவதைத் தவிர்த்தல்.
10. வேகக் கட்டுப்பாட்டைக் கவனத்தில் கொண்டு ,வாகனத்தைச் செலுத்துதல்.
11. குடும்பத்திலோ அல்லது சமூகத்திலோ முரண்பாடு ஏற்பட்டு உளப் பாதிப்புடன் வாகனம் செலுத்துவதைத் தவிர்த்தல்.

இவ்வாறான காரியங்களைக் கடைப்பிடிப்பதன் மூலமும் நாம் எமது தேவையறிந்து, வேலையறிந்து, சேவையறிந்து, செயற்படுவதற்கு நேர முகாமைத்துவத்தைப் பயன்படுத்திக்கொண்டால் அவசரப்பட வேண்டிய பதற்றப்படவேண்டிய தேவையில்லை. விபத்துக்களும் ஏற்படாது.

ஆனால் மாறாக நேரத்தைக் கடைப்பிடிக்காமல் குறுகிய நேரத்தில் எல்லாவற்றையும் செய்து முடிக்க நினைப்பவர்கள் மத்தியிலே, அவசரம் பதற்றம் நிதானம் இல்லாமை வேகம் என்பன காணப்படும். இதன் மூலமும் விபத்து ஏற்படுவதற்கு வழிவகுக்கின்றது.

அண்மையிலே ஏற்பட்டுள்ள விபத்துக்களில் அதிகளவான விபத்துக்களுக்குக் காரணமாகக் கருதப்படுவது நித்திரைத் தூக்கத்தில் வாகனம் செலுத்தியமை, மதுபோதையில் வாகனம் செலுத்தியமை, அதிக வேகத்தில் வாகனம் செலுத்தியமை ஆகிய வற்றைக் குறிப்பிடமுடியும். காரணமாகப் பாதசாரிகள் மஞ்சள் கோட்டைப் பாவிக்காது வீதியைக் கடக்க முற்பட்டமையினாலும், ரயில் கடவை சில இடங்களில் இல்லாமையினாலும் திடீர் திடீர் என விபத்துக்கள் ஏற்படுகின்றன. இதனைக் கட்டுப்படுத்த சட்டமும்–காவல்துறையும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிமுறைகளை மீறுவோரையும் கவனக்குறைவாக வாகனம் செலுத்துபவரையும் கடுமையான தண்டனைக்கு ஆளாகுவதன் மூலமாகவும் வழங்குவதன் மூலமும் ஏனையோரைக் கட்டுப்படுத்த முடியும்.


> “மது போதையில் வாகனம் செலுத்தியமை, அதிக வேகத்தில் வாகனம் செலுத்தியமை ஆகியவற்றைக் குறிப்பிடமுடியும். காரணமாகப் பாதசாரிகள் மஞ்சள் கோட்டை பாவிக்காது வீதியை கடக்க முற்பட்டமையினாலும், ரயில் கடவை சில இடங்களில்இல்லாமையினாலும் திடீர் திடீர் என விபத்துக்கள் ஏற்படுகின்றன.
> இதனைக் கட்டுப்படுத்த சட்டமும்–காவல்துறையும் கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும். விதிமுறைகளைமீறுவோரையும்கவனக்குறைவாக வாகனம் செலுத்துபவரையும் கடுமையான தண்டனைக்கு ஆளாகுவதன் மூலமாகவும் வழங்குவதன் மூலமும் ஏனையோரைக் கட்டுப்படுத்த முடியும்.”

அத்துடன் பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் தேவையறிந்து செயற்பட வேண்டும். ஏனெனில் பிள்ளைகளின் ஆசையை நிறைவேற்றுவதாகக் கருதி, அவர்களின் எதிர்காலத்தை இழக்கச் செய்யாதீர்கள். அதாவதுகல்விகற்கும்மாணவர்களுக்கு கைத்தொலைபேசி, மோட்டார் சைக்கிள், தேவைக்கு மீறிய பணம் தேவையற்றது.

அவர்களை அன்பு, அரவணைப்புடன், சமூகப் பற்றுடன் வளர்த்தெடுத்தால் தம்மையும் பாதுகாத்துக் கொள்வார்கள். ஏனையோரையும் பாதுகாத்துக் கொள்வார்கள். இந்த நிலையை உருவாக்க வேண்டும்.

அத்துடன் கட்டாக்காலி நாய்கள் வீதியில் நடமாடுவதைத் தடைசெய்யவேண்டும். வீதிகளிலே காணப்படும் நாய்களை அழிப்பதற்கு இதுவரையில் எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை.

எனவே விபத்துக்களைத் தவிர்த்து நீண்ட ஆயுளுடன் வாழ ஒவ்வொரு தனி மனிதனும் அவதானமாகவும் நிதானமாகவும் சிந்தித்து வேகத்தை கட்டுப்படுத்தி, எம்மையும் எமது சமூகத்தையும் பாதுகாப்போம்.



*கட்டுரையாளர்:*
*ஆசிரியர், உடுவில் மகளிர் கல்லூரி.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# வர்ணம் தீட்டுவோம் வாங்க....





## வயலினைக் கண்டுபிடித்தவர் யார்?

16ஆம் நூற்றாண்டில், இத்தாலியைச் சேர்ந்த ஆன்டோனியோ ஸ்ட்ராடிவேரியஸ் (Antonio Stradivarius) என்பவரால் உருவாக்கப்பட்டதுதான் வயலின். பழங்காலத்தில் இது, பிடில் (fiddle) என்று அழைக்கப்பட்டது. இன்று, மின்சார வயலின் வரை பல வகைகள் கிடைக்கின்றன. கர்நாடக இசை, திரைப்பட இசை எனப் பலதரப்பட்ட நிகழ்ச்சிகளுக்கு வயலின் பயன்படுத்தப்படுகிறது.

## மானும் மீனும்

ஒரு காட்டில், மான் ஒன்று மிகவும் தாகத்துடன் இருந்தது. அப்போது, தூரத்தில் ஒரு குளம் தெரிந்தது. அந்த மான் வேகமாகத் தண்ணீரை அருந்தச் சென்றது. அப்போது, அந்தக் குளத்தில் இருந்த மீன் ஒன்று, "இங்கு தண்ணீர் அருந்தாதே. வெயிலால் தண்ணீர் கொஞ்சமாக இருக்கிறது. நீ இங்கு தண்ணீர் அருந்தினால், நாங்கள் அனைவரும் இறந்துவிடுவோம்" என்றது. "எனக்கும் தாகம் உயிர்போவதுபோல உள்ளது. ஆனால், என்னால் வேறு இடம் சென்று தாகம் தணித்துக்கொள்ள முடியும். உங்களால் செல்ல முடியாது. நான் வேறு இடம் பார்த்துக்கொள்கிறேன்" என்று கூறிவிட்டு, சென்றது மான்.



இரண்டு நாள்கள் கழித்து, காட்டில் மழை பெய்தது. மான் திரும்பவும் தண்ணீர் அருந்த வந்தது. அப்போது கரையில் எட்டிப் பார்த்த மீன், "அருகே வராதே" என்றது. அதற்கு அந்த மான், "ஏன்? தண்ணீர்தான் நிறைய இருக்கிறதே" என்று கேட்டது. "மழை அதிகம் பெய்ததால், குளத்தில் முதலை வந்துள்ளது. நீ அருகே வந்தால், பிடித்துக் கொள்ளும்" என்றது மீன்.
"உன் எச்சரிக்கைக்கு நன்றி" என்று சொல்லிவிட்டுத் தப்பித்தது மான்.



## குப்பை போடாதே

குப்பை போடாதே - தம்பி
குப்பை போடாதே
எப்பவும் நீ எங்கேயும்
குப்பை போடாதே

குப்பையைக் கண்டால்
கூடையில் போடு
கண்ட இடத்தில் போடாதே
ஒன்றாய் சேரு ஓரிடத்திலே
சேர்த்து வை பின்னே
அகற்றிவிடு

குப்பை போடாதே - தம்பி
குப்பை போடாதே

## வரலாற்றில் இன்றைய தினம்

1000 - சென்.ஸ்ரீபனால் ஹங்கேரி நாடு உருவாக்கப்பட்ட நாள், தேசிய ஹங்கேரி தினமாகக் கொண்டாடப்படுகின்றது.

1083 - ஹங்கேரியின் முதலாவது அரசர் சென்.ஸ்ரீபனும், அவரது மகன் சென்.மெரிக்கும் புனிதர்களாகப் பிரகடனம்.

1858 - இயற்கைத் தேர்வின் மூலமான கூர்ப்புக் கொள்கையை சார்ள்ஸ் டார்வின் முதன்முதல் வெளியிட்டார்.

1866 - அமெரிக்க சிவில் போர் முடிவுக்கு வந்ததாக ஜனாதிபதி அன்றூ ஜோன்சன் முறைப்படி பிரகடனம் செய்தார்.

1914 - முதலாம் உலகப் போர், புருஸ்ஸெல்ஸை ஜேர்மனியப் படைகள் ஆக்கிரமித்தன.

1926 - ஜப்பானின் பொது ஒலிபரப்பு நிறுவனம் நிப்பொன் கொசோ யோகை தொடங்கப்பட்டது.

1940 - ரஷ்யாவிலிருந்து வெளியேற்றப்பட்ட புரட்சியாளர் லியோன் ட்ரொஸ்கி மெக்ஸிகோ நகரில் ரமோன், மேர்செடரால் காயத்துக் குள்ளாக்கப்பட்டு, மறுநாள் உயிரிழந்தார்.

1992 - குடாநாடு மீதான பெருந்தாக்குதல் காலை ஆரம்பம். வலி.வடக்கு, வலி.மேற்குப் பகுதிகளில் குண்டு வீச்சு. ஷெல் பீரங்கித் தாக்குதல். பூகம்பம் நடவடிக்கை என அரசு அறிவிப்பு.

1995 - அரசின் தீர்வு யோசனைக்கு தெற்கில் எதிர்ப்பு வலுக்கின்றது: சிங்கள இனவாதிகளின் கை ஓங்குகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெடிபொருளால் இழப்புத்தான்: மறவாதீர்!

வெடிபொருள் உள்ள இடங்களை வைத்துப் பிழைப்பு நடத்துபவர்களும், அந்த இடங்களில் இயற்கையைத் திருடுபவர்களும் திருந்துவதாக இன்னும் தெரியவில்லை. தினமும் நடக்கும் இத்தகைய செயல்களில், இடையிடையே இழப்புக்களை எதிர்கொண்டுள்ளனர் பலர். அது ஒரு பாடமாக எவருக்கும் உறைக்கவில்லை என்பது தெரிகிறது.

சில நாள்களுக்கு முன்னர் முகமாலையை அண்மித்த பகுதியில் வெடிபொருள் வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். சம்பவம் இடம் பெற்ற பகுதியில் காயமடைந்தவரை மீட்க எவரும் முற்படவில்லை. கண்ணிவெடி அகற்றும் நிறுவனத்தினரே பாதைகளைத் தெரிவுசெய்து அதில் கண்ணிவெடிகள் இருக்கின்றனவா என்று நிலம் கிளறிப் பரிசோதனை செய்த பின்னரே காயப்பட்டவர் இருந்த இடத்தைச் சென்றடைந்தனர். ஆனால், அதிக குருதிப் பெருக்குக் காரணமாக அவர் உயிரிழந்துவிட்டார். சடலமாகவே அவரை மீட்க முடிந்தது.

அதற்கு முன்னரும் உயிரிழப்புக்கள் ஏற்பட்டுள்ளன. பலர் படுகாயமடைந்திருக்கின்றனர். சிலர் அங்கவீனர்களாகி கைகளை, கால்களை, விரல்களை இழந்துள்ளனர்.

வெடித்தவைபோக, வெடிக்காதவை மறைந்தும், புதைந்தும் இன்னும் அங்குதான் உள்ளன. அவ்வப்போது எவராவது கண்டறிந்து பொலிஸாருக்கும், படையினருக்கும் சொல்லிவிடுவர். அவர்கள் அவற்றை எடுத்துச்செல்கின்றனர். இவை அதிகம் இடம்பெறுவது மக்கள் நடமாட்டம் உள்ள இடங்களில்தான்.

ஆனால், எச்சரிக்கை செய்யப்பட்ட இடங்களைச் சாதாரண பொதுமக்கள் எட்டியும் பார்ப்பதில்லை. புதைபொருள் வளங்களும், இயற்கை வளங்களும் அங்கு காணப்படுகின்றன. அப்படியிருந்தும், பேராசைப்பட்டு அந்த இடங்களை வைத்துப் பிழைப்பு நடத்தலாம் என்று அங்கு சென்று வெடிக்காத பொருள்களையும், வெடித்த பொருள்களின் வெற்றுக்கோதுகளையும், கோதுகளினுள் ஏதாவது வெடிமருந்து காணப்பட்டால் அவற்றை எடுப்பதிலும், எஞ்சிய பாகங்களை இரும்புக்கு விற்றுவிடுவதற்கென்றும் சில குழுக்கள் அலைந்து கொண்டு திரிகின்றன.

அவர்கள் பிழைப்பு நடத்தும் எண்ணத்தில் கண்முன்னே உள்ள ஆபத்தைக் கணக்கிலெடுப்பதில்லை. சிலர் "பட்டால் தான் தெரியும்" என்று இருப்பர். அவர்களை ஒன்றும் செய்ய முடியாதுதான். ஆனால், இழப்பின் மோசமான விளைவு சம்பந்தப்பட்டவருக்கு மட்டுமல்ல அவரது குடும்பத்திலும் சமூகத்திலும் ஏற்படுத்திவிடுகிறது.

வெடிபொருள்கள் கண்ணிவெடி புதைக்கப்பட்ட பகுதிகளில் குவிந்திருக்கும் என்பது யாருக்குத்தான் தெரியாது? அந்த இடங்கள் பயன்பாட்டுக்குத் தடுக்கப்பட்டுள்ளமையும் தெரியும். அப்படியிருந்தும் அத்தகைய இடங்களுக்குச் சென்று ஏன் இழப்பை விலைக்கு வாங்குவதற்கு முற்படுகின்றனர்?

மீட்கும் வெடிமருந்துக் கலவைகளைச் சட்டவிரோத மீன்பிடி உள்ளிட்ட பலவற்றுக்கும் பயன்படுத்துகின்றனர். அதனால் கடல் வளமும் பாதிக்கப்படுகிறது. வெற்றுக்கோதுகளை இரும்பு வியாபாரிகளிடம் விற்கின்றனர்.

அத்தகைய இடங்களில் வெடிபொருள்களுக்கு மட்டுமன்றி மரங்களைத் தறித்துப் பலகைகளாக்கவும் சில கூட்டம் திரிகிறது. காட்டு மரங்களை வெட்டுவோர், கடத்துவோர், பல தடவைகள் பிடிபட்டும் அவற்றைப் பறிமுதல் செய்தும், வாகனங்களைப் பறிமுதல் செய்தும், நீதிமன்றங்களால் பலர் தண்டிக்கப்பட்ட போதிலும் இன்னும் அவர்கள் திருந்தினபாடில்லை. நீதிமன்றங்களால் தண்டிக்கப்பட்டவர்கள் மீண்டும் இத்தகைய சட்டவிரோதச் செயல்களில் ஈடுபடுகின்றனர். அப்படியாயின் அத்தகையவர்களுக்கு நீதிமன்றங்களால் மேலும் கடுமையான தண்டனைகளை வழங்குவது தொடர்பாகச் சிந்திக்கவேண்டியுள்ளது.

அதே வெடிபொருள்கள் உள்ள இடங்கள், முன்னர் போர் நடந்த இடங்கள் என்பதனால் பனை மரக்குற்றிகளால் அரண் அமைக்கப்பட்ட பல இடங்கள் இன்னும் அப்படியே உள்ளன. அவற்றை விறகாக்கவும் செல்கின்றனர்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் கல்லுடைப்பதற்கு வெடிபொருள்களை இன்றும் பயன்படுத்திவருவதால் பலர் படுகாயமடைந்தும் அங்கவீனர்களாகியும் யாழ்.போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். சில வாரங்களுக்கு முன்னரும் கல்லுடைப்பதில் ஈடுபட்டிருந்தவரின் முகம், கைகள் முழுதும் ஏகப்பட்ட காயங்களும், கீறல்களும் ஏற்பட்டன.

எனவே இந்த விடயங்களில் மிக அவதானமாக இருங்கள். வாழ்க்கையைக் கொண்டு நடத்தவென்று புறப்பட்டு, வாழ்க்கையை முடிக்கும் இடத்துக்குள் செல்லும் எண்ணத்தைக் கைவிடுங்கள்.



# அதிகஷ்டப் பிரதேசத்தின் கலங்கரை விளக்கு குட்டியப்புலம் அ.த.க. பாடசாலை

திருமதி கிருஷ்ணவேணி சிங்கராஜன்

வலிகாமம் கல்வி வலயத்தின் அதிகஷ்டப் பிரதேசப் பாடசாலைகளுள் குட்டியப்புலம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையும் ஒன்றாகும். யாழ். பலாலி வீதியில்,வயாவிளானின் கிழக்குப் பிரதேசத்திலே நன்னீர் வளத்தையும், பொன்விளையும் செம் மண்ணையும் தனது அணிகலன்களாகக்கொண்டுதலை நிமிர்ந்து நிற்கின்றது இந்தப் பாடசாலை.

வலி.வடக்கு (தெல்லிப்பழை) பிரதேச செயலகத்தின் ஆளுகைக்குட்பட்டு, வயாவிளான் கிழக்கு ஜே/244 கிராம அலுவலர் பிரிவில் அமைந்துள்ள அழகிய கிராமம் குட்டியப்புலமாகும்.

இங்குள்ள மக்களில் பெரும்பான்மையோர் விவசாயத்தின் விளைநிலங்களாக உள்ளனர். ஆனாலும் தமது பிள்ளைகளின் கல்வியிலே அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றனர்.

இந்தப் பாடசாலை 1956இல் ஓலைக் கொட்டிலில் ஆரம்பிக்கப்பட்டு, பின்னர் 1958இல் அரசினால் பொறுப்பேற்கப்பட்டது. ஆரம்பத்தில் தரம் 1தொடக்கம் 5 வரையான வகுப்புக்களே நடைபெற்றன. பின்னர் படிப்படியாக ஒவ்வொரு வகுப்பும் ஆரம்பிக்கப்பட்டது. அதன்பின் 1991 இல் மாணவர்கள் க.பொ.த சாதாரணதரப் பரீட்சைக்கு முதன் முதலாகத் தோற்றினர். இடைநிலை வகுப்புக்களை ஆரம்பித்த பெருமை அப்போதைய அதிபர் மு. வடிவேலனையே சாரும்.

அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்கு அண்மையில் அமைந்துள்ள இந்தப் பாடசாலை 1990ஆம் ஆண்டு தொடக்கம் பல இடப்பெயர்வுகளைச் சந்தித்து, மீண்டும் 1997இல் சொந்த இடத்தில் இயங்க ஆரம்பித்தது.

இங்கு கற்கும் மாணவர்கள் சுறுசுறுப்பானவர்கள். விளையாட்டுக்களிலே உற்சாகமாக ஈடுபடுபவர்கள். அடிப்படை வசதிகள் குறைந்த நிலையில் இருந்தாலும், அக்கறையுடன் கல்விதனைக் கற்கின்றவர்கள். கடந்த வருடம் (2015) நடைபெற்ற க.பொ.த சாதாரண தரப் பரீட்சையிலே சாதனை படைத்திருக்கிறார்கள். கடந்த காலங்களில் சராசரியாக நான்கு அல்லது ஐந்து மாணவர்களே க.பொ.த. உயர்தரத்துக்குத் தகைமை பெற்று வந்தார்கள். ஆனால் கடந்த வருடப் பெறுபேற்றை நோக்குமிடத்து பதினொரு (11) மாணவர்கள் கணித பாடத்துடன் சித்தியடைந்திருகிறார்கள். இது ஒரு வரலாற்றுச் சாதனையாக உள்ளது. எதிர்காலத்தில் சித்தி வீதம் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

திடற்புலம், சுதந்திரபுரம், கோணாவளை, செல்வநாயகபுரம் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் இங்கு கல்வி கற்கின்றனர். வயாவிளான் மத்திய கல்லூரியின் ஊட்டல் பாடசாலைகளில் இதுவும் ஒன்றாகும்.

தற்போதைய அதிபர் வை.விஜயபாஸ்கரின் வழிநடத்தலில் கற்றல், கற்பித்தல் செயற்பாடுகள் சிறப்பாக இடம்பெற்று வருகின்றன. பல்துறை ஆற்றல் கொண்ட அதிபரின் தலைமையில் ஆசிரியர் குழாம் சிறப்பாகச் செயற்பட்டு வருவது குறிப்பிடத்தக்கதாகும். வலிகாமம் வலயக் கல்விப் பணிப்பாளர் செ.சந்திரராஜாவின் அதீத அக்கறையினால் பாடசாலைத் தேவைகள் முழுமை செய்யப்பட்டு வருகின்றன.

இந்தப் பாடசாலையிலே கற்ற பலர் அரச உத்தியோகத்தர்களாக உள்ளமையானது பெருமைப்படத்தக்க விடயமாகும்.

விளையாட்டைப் பொறுத்தவரையில் சிறிய மைதானம் காணப்படுகின்றது. மாணவர்களின் பயிற்சி நடவடிக்கைகளுக்கு இந்த மைதானம் ஏற்றதாக இல்லை.

தற்பொழுது பாடங்களுக்கேற்ற ஆசிரியர்கள் தொகை காணப்பட்டாலும், சித்திர பாடத்துக்கு ஆசிரியர்கள் நியமிக்கப்படவேண்டும். இங்கே கற்பித்துக் கொண்டிருந்த சித்திரபாட ஆசிரியர், விரிவுரையாளராக நியமனம் பெற்றுச் சென்றமையானது ஆசிரியர் பற்றாக் குறையைத் தோற்றுவித்துள்ளது.

இந்தப் பாடசாலை அன்னையவள், தன் மழலைகளுக்குக் கல்விச் செல்வத்தை வழங்கும் ஆசிரியர்களுக்கு தனது அருட்கடாட்சத்தை அள்ளி வழங்கி வருகின்றாள். இங்கு கற்பிக்க வரும் திருமணமாகாத ஆசிரியர்களுக்கு இங்கு வந்த குறுகிய காலத்துக்குள் திருமண சுபநிகழ்வு இடம்பெறுகிறது. அத்துடன் மழலைச் செல்வங்கள் இல்லாத ஆசிரியர்களும் குழந்தைப் பாக்கியத்தைப் பெற்றுக்கொள்ள அருள் செய்கின்றாள். இது ஏனைய பாடசாலைகளுக்கில்லாத இந்தப் பாடசாலைக்கே உரிய தனித்துவமாகும்.



எதிர்காலத்தில் இந்தப் பாடசாலை அனைத்துச் செயற்பாடுகளிலும் உன்னதமான இடத்தைப் பெற்று, தனித்துவமாய் தலைநிமிர வேண்டுமென்பது பாடசாலைச் சமூகத்தினரது எதிர்பார்ப்பாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இன்று வெளியாகும் இலங்கை தமிழன்டா பாடல்

எமது நாட்டின் மூத்த சொல்லிசைக் கலைஞனும் தென்னிந்தியத் திரைத்துறையில் தனது நாமத்தைப் பதித்தவருமான கிரிஷான் மகேசனின் முயற்சியில் எமது நாட்டில் வளர்ந்து வரும் சிறந்த தமிழ் சொல்லிசைக் கலைஞர்கள் இணைந்து உருவாக்கிய "இலங்கைத் தமிழன்டா" எனும் பாடலானது காணொளியாக யூ.ரி.யூப் இணையத்தளத்தில் இன்று சனிக்கிழமை பதிவிறக்கம் செய்யப்படவுள்ளது. கிரிஷான் மகேசன் உட்பட நாடு முழுவதையும் உள்ளடக்கி, வளர்ந்து வரும் திறமையான இளம் கலைஞர்களில், திருகோணமலையைச் சேர்ந்த சி.வி.லக்ஸ், ஸ்ரீ நிரோஷன், கொழும்பைச் சேர்ந்த ஜி.கே.ரெஜினோல்ட், பிரேம்.ஜே.ஆர், மட்டகளப்பைச் சேர்ந்த எம்.சி.ரா, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த வோரன்ஸ், கண்டியைச் சேர்ந்த விக்கி, நுவரெலியாவைச் சேர்ந்த யங்.கிரிஷ், அம்பாறையைச் சேர்ந்த ஓமர் ஆகியோர் அவரவர் பிரதேசத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தப் பாடலில் பங்கு பற்றியுள்ளனர்.




| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 6 | | | 2 | 4 | | |
| | | | | | 5 | | | 9 |
| | 3 | | | 7 | | | | |
| | 2 | | 3 | | | | 1 | |
| | | | 1 | | | 6 | | 7 |
| 8 | | | 7 | 6 | | | | |
| 4 | | | | | 3 | 8 | | |
| | | 5 | | | | | | 1 |
| 9 | | | 5 | | | 7 | | |

# சுடோக்கு எண் விளையாட்டு

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 3 | 4 | 5 | 7 | 2 | 9 | 6 | 8 | 1 |
| 8 | 9 | 6 | 1 | 4 | 5 | 3 | 7 | 2 |
| 2 | 7 | 1 | 6 | 8 | 3 | 9 | 4 | 5 |
| 4 | 3 | 9 | 5 | 6 | 2 | 7 | 1 | 8 |
| 5 | 8 | 7 | 9 | 3 | 1 | 4 | 2 | 6 |
| 1 | 6 | 2 | 4 | 7 | 8 | 5 | 9 | 3 |
| 7 | 1 | 3 | 8 | 5 | 4 | 2 | 6 | 9 |
| 9 | 5 | 4 | 2 | 1 | 6 | 8 | 3 | 7 |
| 6 | 2 | 8 | 3 | 9 | 7 | 1 | 5 | 4 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).

இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும். தர்க்கரீதியில் ஏனையவற்றை நிரப்பவேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனிஎண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவனமான நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.




நண்பன் 1: "டேய்! ஒரு 10 ரூபாய் இருந்தா கொடு!"
நண்பன் 2: "என்னிடம் சுத்தமா இல்லை!"
நண்பன் 1: "பரவாயில்லை!
கொடு, நான் சுத்தம் பண்ணிக்கிறேன்!"






**மேடம்:** தனித்திறமைகளை வளர்த்துக் கொள்வீர்கள். தொழில், வியாபாரத்தில் கூடுதல் வருமானம் கிடைக்கும். வழக்கு, விவகாரத்தில் சமரச தீர்வு கிடைக்கும். அரசு சார்ந்த வகையில் நன்மை உண்டாகும்.

**இடபம்:** விலகிய உறவினர் விரும்பி, சொந்தம் பாராட்டுவர். தொழில், வியாபார வளர்ச்சியால் இலாபம் அதிகரிக்கும். நிலுவைப் பணமும் வசூலாகும். விருந்து விழாவில் பங்கேற்பீர்கள்.

**மிதுனம்:** நல்ல நண்பரை தவறாகக் கருத நேரிடலாம். தொழில், வியாபாரத்தில் விடா முயற்சி அவசியம். வருமானம் சுமாராக இருக்கும். உடல்நலனில் அக்கறை கொள்வது அவசியம்.

**கடகம்:** தொடர்பில்லாத பணி குறுக்கிட்டு சிரமம் தரலாம். முன்யோசனையுடன் செயற்படுவது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான இலாபம் கிடைக்கும். பெண்கள் நகை இரவல் கொடுக்க, வாங்க வேண்டாம்.

**சிங்கம்:** மனதில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி இலக்கு நிறைவேறும். பணவரவு அதிகரிக்கும். புத்திரர் வெகுநாள் கேட்ட பொருள் வாங்கிக் கொடுப்பீர்கள்.



**கன்னி:** மனதில் உருவான திட்டம் நிறைவேறும். பிறரது விமர்சனத்தை பொருட்படுத்த வேண்டாம். தொழில், வியாபாரம் சிறப்பாக அமையும். தாராள பணவரவால் சேமிப்பீர்கள். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும்.

**துலாம்:** பரபரப்புடன் செயற்பட்டு வருவீர்கள். தொழில், வியாபாரத்தில் இலாபம் சுமாராக இருக்கும். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர். பெண்கள் குடும்ப வளர்ச்சிக்காகப் பாடுபடுவர்.



**விருச்சிகம்:** உங்களின் எதார்த்தப் பேச்சால் சிலர் பாதிக்கப்படலாம். பணிகளில் முன்னேற்பாடுடன் ஈடுபடுவது அவசியம். தொழில், வியாபாரத்தில் அளவான பணவரவு கிடைக்கும். போக்குவரத்தில் மிதவேகம் பின்பற்றவும்.

**தனுசு:** பொதுநல எண்ணத்துடன் செயற்படுவீர்கள். புதிய முயற்சி எளிதாக நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் திட்டமிட்ட வளர்ச்சி உருவாகும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவீர்கள். சுபசெய்தி வந்து சேரும்.

**மகரம்:** பின்விளைவு உணர்ந்து செயற்படுவது நல்லது. உடன்பிறந்தவர் உதவிகரமாக நடந்து கொள்வர். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம் போதும். இலாபம் சுமார். பணியாளர்கள் பணி விடயமாக வெளியூர் செல்வர்.

**கும்பம்:** நண்பரிடம் கேட்ட உதவி கிடைக்கும். தொழில், வியாபார வளர்ச்சியால், பணவரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர். குடும்பத்தினருடன் சுற்றுலா செல்ல திட்டமிடுவீர்கள்.

**மீனம்:** பணிகள் நிறைவேற தாமதமாகலாம். அனுபவசாலியின் ஆலோசனையை ஏற்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் மிதமான வருமானம் இருக்கும். ஆரோக்கியம் மேம்படும். விருந்து, விழாவில் பங்கேற்பீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சேமியா, பாயசம் செய்யும்போது குழைந்து போய்விட்டால் இரண்டு சொட்டு எலுமிச்சை சாறு அதில் சேர்த்தால் சேமியா தனித்தனியாகிவிடும்.
- குலோப்ஜாமூன் செய்யும்போது உருண்டை கல் போலாகிவிட்டால் ஜீராவுடன் சேர்த்து சிறிது நேரம் அடுப்பில் வைத்துவிட்டால் மென்மையாகிவிடும்.
- கட்லெட் செய்ய பிரெட் கிரம்ப்ஸ் கிடைக்கவில்லையெனில் ரவையை மிக்சியில் அரைத்து பயன்படுத்தலாம்.
- கூடையில் வைத்திருக்கும் உருளைக்கிழங்கு முளை விடாமல் இருக்க, கூடவே கூடையில் ஒரு அப்பிள் பழத்தையும் போட்டு வையுங்கள்.
- வீட்டில் டீ தயாரிக்க நீரைக் கொதிக்க விடும்போது ஒரே ஒரு புதினா இலையையும் போட்டுக் கொதிக்க விட்டுப் பாருங்கள். டீயின் மணமும், ருசியும் அபாரமாயிருக்கும்.
- ரசம் தயாரிக்கும் போது சுண்டைக்காய் அளவு இஞ்சி சேருங்கள். சூப்பராக இருக்கும் ரசம்.
- இட்லிக்கு மா வாட்டும்போது ஒரே ஒரு ஆமணக்கு விதையைத் தோல் நீக்கிப் போட்டுப் பாருங்கள். இட்லி பிளவுபடாமல் மெதுமையாக இருக்கும்.
- காட்டு நெல்லிக் காயைக் கழுவி, கொதிக்க வைத்த நீரில் போட்டுச் சிறிது உப்புப் போட்டு மூடி வையுங்கள். விட்டமின் குறையாத ஊறு காய் ரெடி. தேவைப்பட்டால் மிளகாய்ப் பொடியும் போட்டுக் கொள்ளலாம்.
- அடைக்கு அரைக்கும்போது மரவள்ளிக் கிழங்கை உரித்து சில துண்டுகள் சேர்த்து அரைக்கலாம். உருளைக் கிழங்கையும் துண்டுகளாக்கிப் போட்டு அரைக்கலாம். மொறு மொறுவென்று இருக்கும் அடை.
- மிஞ்சி விட்ட பழைய சோற்றை உப்புப் போட்டுப் பிசைந்து நாலைந்து மிளகாய், வெங்காயம், கறிவேப்பிலை ஆகியவற்றைப் பொடி செய்து போட்டுக் கலந்து சிறிய உருண்டைகளாய் உருட்டி வெயிலில் வைத்து விடுங்கள். சோற்று வடகம் ரெடி.
- பச்சைக் கொத்துமல்லித் தழையைப் பச்சையாகவே துவையல் அரைக்கும் போது புளி போடுவதற்குப் பதிலாக ஒரு துண்டு மாங்காயைப் போட்டு அரைத்தால் சுவையும் மணமும் அதிகமாகும்.




# சமையல் குறிப்புகள்



# நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 700 | 600 | 700 | 800 | 600 | – |
| நண்டு | 250 | 400 | 300 | 400 | 400 | 350 | 600 |
| கணவாய் | 600 | 600 | 500 | 600 | 700 | 600 | – |
| பாரை | 550 | 600 | 500 | 800 | 700 | 600 | 450 |
| சுறா | 500 | 600 | 600 | 800 | 1000 | 700 | – |
| சீலா | 300 | 500 | 400 | 600 | 400 | 400 | 400 |
| விளை | 650 | 600 | 400 | 600 | 500 | 450 | 420 |
| முரல் | 300 | 400 | 350 | 500 | 300 | 300 | 400 |
| கும்பிளா | 400 | 400 | 300 | 400 | 400 | 500 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | – | 500 | 600 | 400 | – |
| ஓரா | 400 | 400 | – | – | 500 | 400 | – |
| திரளி | 300 | 300 | 200 | 150 | 300 | 200 | 380 |
| நகரை | 250 | 300 | – | 250 | 400 | 200 | 400 |
| சூடை | 150 | 200 | 100 | 200 | 200 | 200 | – |
| ஒட்டி | 300 | 250 | 150 | – | 300 | 400 | – |
| திருக்கை | 150 | 350 | 200 | 400 | 400 | 300 | 160 |
| மதனம் | 150 | 250 | 180 | 400 | 350 | 200 | 300 |
| கொய் | 100 | 200 | 60 | 70 | 80 | 200 | – |
| பாலை | 400 | 250 | 250 | 400 | 600 | 300 | – |
| வாழை | 100 | 200 | 200 | 400 | 400 | 300 | – |



# நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 40 | 40 | 50 | 80 | 40 | 40 | 30 | 20 |
| கத்தரி | 80 | 70 | 100 | 60 | 60 | 60 | 90 | 40 |
| கரட் | 120 | 110 | 200 | 160 | 140 | 120 | 110 | 140 |
| மரவள்ளி | 100 | 100 | 80 | 80 | 80 | 80 | 80 | 50 |
| பயிற்றை | 70 | 40 | 40 | 80 | 60 | 40 | 100 | 50 |
| பாகல் | 140 | 100 | 180 | 100 | 120 | 80 | 240 | 100 |
| கருணைக்கிழங்கு | 180 | – | 140 | 140 | 120 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 90 | 90 | 90 | 90 | 80 | 80 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 60 | 80 | 70 | 80 | 70 | 80 | 90 | 60 |
| பூசணி | 60 | 50 | 60 | 50 | 60 | 80 | 70 | 40 |
| தக்காளி | 50 | 60 | 60 | 60 | 40–50 | 60 | 120 | 40 |
| வாழைக்காய் | 100 | 110 | 80 | 100 | 80 | 40 | 70 | 40 |
| கீரை | 25 | 20 | 30 | 15 | 20 | 20 | 20 | 30 |
| பொன்னாங்காணி | 25 | 30 | 30 | 35 | 20 | 20 | 20 | 20 |
| பச்சை மிளகாய் | 200 | 200 | 300 | 160 | 160 | 200 | 400 | 160 |
| புடோல் | 50 | 40 | 50 | 50 | 60 | 40 | 70 | 30 |
| கோவா | 100 | 90 | 160 | 140 | 120 | 160 | 90 | – |
| வெண்டி | 40 | 30 | 50 | 80 | 40–60 | 80 | 70 | 20 |
| போஞ்சி | 180 | 140 | 180 | 180 | 140 | 200 | 130 | 130 |
| லீக்ஸ் | 120 | 100 | 120 | 120 | 100–120 | 120 | 90 | 80 |
| தேங்காய் | 40 | 26 | 40 | 25–30 | 20–30 | 40 | 15–25 | 25 |
| உருளைக்கிழங்கு | 120 | 90 | 100 | 100 | 90–100 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 100 | 100 | 120 | 200 | 120–160 | 120 | 120 | 160 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 15 | 20 | 10 | 15 |
| கறிமிளகாய் | 140 | 150 | 200 | 180 | 160 | 240 | 200 | 100 |
| இராசவள்ளி | 160 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 120 | [illegible] | [illegible] | 120 | [illegible] | [illegible] |



# அவல் பிடிக்கொழுக்கட்டை

**தேவையான பொருள்கள்**

*அவல் – 1 கப்*
*வெல்லம் – 1/2 கப்*
*தண்ணீர் – 1 1/4 கப்*
*தேங்காய் – 1/4 கப் (துருவியது)*
*ஏலக்காய் பொடி – 1 தேக்கரண்டி*
*நெய் – 2 தேக்கரண்டி*

**செய்முறை:**

*முதலில் அவலை மிக்ஸியில் போட்டு அரைத்து தனியாக வைத்துக் கொள்ள வேண்டும்.*

*பின்னர் ஒரு சட்டியில் வெல்லத்தைத் தட்டிப் போட்டு, 1/2 கப் தண்ணீர் ஊற்றி, வெல்லம் முற்றிலும் உருகியதும் இறக்கி, வடிகட்டிக் கொள்ள வேண்டும்.*

*பின்பு மீண்டும் அந்த வெல்லப் பாகுவை சட்டியில் ஊற்றி, மீதமுள்ள நீரை சேர்த்துக் கொதிக்க விடவேண்டும்.*

*கலவை கொதிக்க ஆரம்பித்ததும், அதில் தேங்காய், ஏலக்காய்ப் பொடி மற்றும் நெய் சேர்த்து கிளறி, மெதுவாக பொடித்த அவலையும் சேர்த்து, கலவை ஓரளவு கெட்டியாகும் வரை கிளறி இறக்கி குளிர்ந்ததும், அதனை சிறு கொழுக்கட்டைகளாகப் பிடித்து, இட்லித் தட்டில் வைக்க வேண்டும்.*

*பின் இட்லி பாத்திரத்தில் வைத்து, 7–8 நிமிடம் வேக வைத்து இறக்கினால், அவல் கொழுக்கட்டை தயார்.*

## நாளை

ஆவணி-05
ஞாயிற்றுக்கிழமை
-21.08.2016
திதி: திருதியை மு.ப.10.57
நட்சத்திரம்: உத்தரட்டாதி
மு.இ.10.05
ராகுகாலம்:
04.35-06.05 வரை
சுபநேரம்:
09.05-10.35 வரை
சங்கடஹர கணபதி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரண அறிவித்தல்

### நல்லதம்பி முத்துலிங்கம்



புங்குடுதீவு கிழக்கு, 11 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் தற்போது நல்லூர் சங்கிலியன் வீதியில் வசித்து வந்தவருமான நல்லதம்பி முத்துலிங்கம் 18.08.2016 வியாழக்கிழமை சிவபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் அன்னலெட்சுமியின் (அன்னம்) அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான நல்லதம்பி - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான விசுவலிங்கம் - செல்லம்மா தம்பதியரின் அன்பு மருமகனும் அரவிந்தன்(கனடா), அன்பரசன்(கனடா), அருளானந், பிரமிளா, சுகந்தா ஆகியோரின் ஆருயிர்த் தந்தையும் ஜெயகுமாரி, பத்மலதா, நிசாந்தினி, அகிலன், செந்தூரன் ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பிரவீன், மகிழன், கிரிஷான், கபிலேஷ், டயனிதா, பரணீத், அக்ஷயா, டக்ஷிகா, தனிஷ், தேனுஷா, யாழவன் ஆகியோரின் பாசமுள்ள பேரனாரும் காலஞ்சென்றவர்களான மருதாம்பாள், விஜயரெத்தினம் மற்றும் மனோன்மணி, கருணாகரன், சிவபாக்கியம் ஆகியோரின் மூத்த சகோதரரும் காலஞ்சென்ற பரமசாமி மற்றும் நித்தியானந்தன், சரஸ்வதி, தங்கமலர், மகாலிங்கம், யோகநாயகி, மகாலிங்கம், நடனலிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனரும் அமரசிங்கம், பவளராணி, ஜெகதீஸ்வரி ஆகியோரின் உடன்பிறவாச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.


**393/15, கோயில்வீதி,**
**நல்லூர்.**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 990 9721 / 077 737 4874**

## மரண அறிவித்தல்

### சின்னப்பொடி முத்து



சிறுப்பிட்டி தெற்கு, கலைஒளி வீதி, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னப்பொடி முத்து 17.08.2016 புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னப்பொடி - பாலியம்மா தம்பதிகளின் அன்பு மகனும், கமலாதேவியின் அன்புக் கணவரும், சதீபன், சதீபா, சதீன்ராஜ், சதீனா, பகின்ராஜ், பிரார்த்னா ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காலயம்புலம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

சிறுப்பிட்டி தெற்கு, கலைஒளி வீதி,
நீர்வேலி.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**077 544 9615, 077 713 4723** (J/3867) (11,18)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலி



எமது நிறுவனத்தின் உறுப்பினர்

**ஜெ. ஜெயசுலக்சன்** அவர்களின் அன்புத் தந்தை

### கண்ணப்பு ஜெயபாலு

(வத்திராயன் - வடமராட்சி கிழக்கு)

அவர்களின் 31 ஆவது நினைவுநாள் இன்று (20.08.2016) சனிக்கிழமை நடைபெறும்.

இந்நாளில் அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது இதய அஞ்சலிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

நிறுவுனர் [illegible]
மற்றும் [illegible]

**சிவன் அறக்கட்டளை**

(c/24982)(13.18)

## 17 ஆவது பிறந்தநாள் நினைவும் 59 ஆம் நாள் நினைவு நாளும் அந்தியேட்டி அழைப்பும்

அமரர்

### தேவராசா (நகுலன்) நிறோஜ்

அன்னை மடியில்
1999.08.20

ஆண்டவன் அடியில்
2016.06.23



தம்பி என்றழைக்கையில் ஓடிவந்து
ஊருக்கே உதவி புரிவாயடா
தம்பி உன்னை இழந்து
கதறுகிறோம் காது கேட்கவில்லையோடா?
நாம் படும்பாடு உனக்குத் தெரியவில்லையோ?
என்ன செய்வோம் உன்னை இழந்து
எம் வயிறு எரிகிறது பதினாறு
வயதினிலே உனக்கு மட்டும் ஏன்
இப்படி வாழ்க்கை முடிந்தது?
எம் நெஞ்சைவிட்டு உன் நினைவுகள்
அகலாது என்றும்
உன் நினைவுகளுடன் .......

இன்று (20.08.2016)சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதியபோசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**இந்த அழைப்பைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்.**

இவரின் பிரிவினால் துயருறும்
**குடும்பத்தினர்.**

**காளிகோவிலடி, தாவடிவடக்கு,**
**கொக்குவில்.**

**077 829 4182** (கே/3881) (11,18,)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT

## சிங்களப் புலம்பெயர் அமைப்பை உருவாக்க இத்தாலிக்கு மகிந்த

சிங்களப் புலம்பெயர் அமைப்பை உருவாக்கும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இத்தாலிக்குப் பயணம் மேற்கொள்ள உள்ளார் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் நடை பெற வுள்ள சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் 65 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வுகளில் பங் கேற்குமாறு மகிந்த ராஜபக்சவுக்குச் சுதந் திரக் கட்சி நேரடி அழைப்பு விடுத் துள்ளது. இந்த நிகழ்வுகளைத் தவிர்த்து வெளி நாட் டுப் பயணத்தை மேற்கொள்ள மகிந்த திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப் படுகின்றது.

(த-5)


### கண்ணீர் அஞ்சலி

**அன்ரனி யோசப்**



யோசப் ஐயாவின் திடீர் மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நண்பர்கள் (நாச்சிமார் கோயிலடி)

### கண்ணீர் அஞ்சலி

கடந்த 17.08.2016 ஆம் திகதி புதன்கிழமை அன்று இறைபதமடைந்த வலிகாமம் வடக்கு பிரதேச சபையில் கடமையாற்றும் **திரு.சிவநேசன் புருஷோத்தமன்** அவர்களின் அன்புத் தந்தை

**துரைசிங்கம் சிவநேசன்**

அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதுடன் அன்னாரின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

ஊழியர் நலன்புரி சங்கம்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை,
காங்கேசன்துறை (மல்லாகம்).

### 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



தோற்றம் 08.09.1946 — மறைவு 21.07.2016

அமரர் **செல்வினி மகாலிங்கம்**

கடந்த (21.07.2016) அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவி செல்வினி மகாலிங்கம் அவர்களின் வீட்டுக்கிருத்திய கிரியைகள் இன்று (20.08.2016) சனிக்கிழமை மு.ப. 11 மணியளவில் எமது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் தாங்களும் குடும்பசகிதமாக வருகைதந்து அன்னாரின் ஆத்ம சாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத்தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.
(இதனை தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்)

பருத்தித்துறை வீதி,
மட்டுவில் தெற்கு, (நுணாவில்)

குடும்பத்தினர்.

### மரண அறிவித்தல்



மலர்வு: 26.09.1947 உதிர்வு: 17.08.2016

**திரு.சின்னத்துரை துரைராஜா**

(ABRAJ Pvt Ltd உரிமையாளர்)

கன்னாகத்தை பிறப்பிடமாகவும், இமையாணன் உடுப்பிட்டி, No.18 கொட்டாஞ்சேனை No.8 ஆதர்ஸ் இடம், பம்பலப்பிட் டியை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. சின்னத்துரை துரை ராஜா (ABRAJ Pvt Ltd உரிமையாளர்) அவர்கள் 17.08.2016, புதன்கிழமை அன்னாரது பம்பலப்பிட்டி வீட்டில் சிவபதம் அடைந்தார்.

அன்னாரின் பூதவுடல் வெள்ளிக்கிழமை 19.08.2016 12 மணி முதல் அவரது இல்லத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு, பின்பு ஈமைக்கிரியைகள் அவரது இல்லத்தில் ஞாயிறு காலை 8.30 மணியளவில் ஆரம்பித்து தகனக்கிரியைகள் கனத்தை இந்து மயானத்தில் இடம்பெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : மனைவி திருமதி மல்லிகாதேவி துரைராஜா
மகன் ரஞ்சித் (Art of Living)
No.8 ஆதர்ஸ் இடம், பம்பலப்பிட்டி

### பணிப்பெண் தேவை

வீட்டில் சமையல் வேலை செய்வதற்கு பெண் ஒருவர் தேவை. சம்பளம் நேரில் பேசி தீர்மானிக்கலாம்.
தொடர்பு - கந்தர்மடம், யாழ்ப்பாணம்
076 8514296

### கண்ணீர் அஞ்சலி

யாழ் மாவட்டச்செயலக விளையாட்டுத்துறை பயிற்றுநர்
**திரு.கு.முகுந்தன்** அவர்களின் அன்புத் தாயார்

**திருமதி உரோகினி குருசாமி**

அவர்கள் 17.08.2016 ஆம் திகதி இறைபதம் அடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியினைத் தெரிவித்துக் கொள்வதுடன் அவரது குடும்பத் தினருக்கு மாவட்டச் செயலகத்தின் சார்பில் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

யாழ். மாவட்டச்செயலக நலன்புரி கழகம்

### பிரத்தியேக வகுப்பு

தரம் : 9-11 வரையான மாணவர்களுக்கான கணித, விஞ்ஞான பிரத்தியேக வகுப்புக்கள்
தொடர்பு: 077 395 0510

### ASTROLOGY SOFTWARES

Based On வாக்கிய பஞ்சாங்கம்

ICS நிறுவனத்தாரின் வாக்கியபஞ் சாங்க முறையிலான Softwares விற்ப னைக்கு, துல்லியமான கணிதம், எல்லா நாடுகளுக்குமானது. திருமணப் பொருத் தம், சுபமுகூர்த்தம், குழந்தைப் பெயர், நியூ மாஜி உள்ளடக்கப்பட்டுள்ளது. ஜாதகம், 7, 11, 21, 115 பக்கங்களில் பிரிண்ட் செய்யும் வசதி.

தொடர்புகளுக்கு: கமலநாதன் - 077 789 1945

### திருநெல்வேலியில் பெரிய காணியுடன் வீடு விற்பனைக்கு

(சந்திக்கு அருகில் 6 1/2 பரப்புடன்)
தொடர்பு - 077 7037058
(Hotel, Restaurant, Medical Centre)
(அமைக்கக்கூடியது)

### பணிப்பெண் தேவை

சிறிய குடும்பம் ஒன்றிற்கு வீட்டில் தங்கி இருந்து வேலை செய்வதற்கு பெண் தேவை.
தொடர்பு - 077 2987506, 077 2626944

### விற்பனைக்குண்டு

பழைய தளபாடங்கள் விற்பனைக்குண்டு.
தொடர்புகளுக்கு - 077 6103242

### வேலைக்கு ஆள் தேவை

தனியார் நிறுவனம் ஒன்றிற்கு
1) விற்பனைப் பிரதிநிதி (மோட்டார் சைக்கிள் அனுமதிப்பத்திரம் தேவை)
2) கூலி ஆள்
3) வாகன சாரதி தேவை.

தொடர்பிற்கு: கே.கே.எஸ் வீதி.சுன்னாகம், யாழ்ப்பாணம். (கொமர்ஷல் வங்கி முன்பாக)
தொலைபேசி இலக்கம்: 077 3867696

### வீடு வளவு விற்பனைக்கு உண்டு

மீசாலை வடக்கு.வீரசிங்கம் மத்திய கல் லூரிக்கு அருகில் சகல வசதிகளுடன் உடன் குடியமரக் கூடிய நல்ல நிலையில் உள்ள 4 பரப்புக் காணி வளவு விற் பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு
நவம்- 077 6474639
தவம்- 077 5977210

### மரண அறிவித்தல்

**தம்பித்துரை சரவணபவானந்தன்**

(ஓய்வு பெற்ற ஆசிரியர் - கண்ணன் மாஸ்டர்)



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிட மாகவும், வதிவிடமாகவும் கொண்ட தம்பித்துரை சரவணபவானந்தன் 18.08.2016 வியாழக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை - மகேஸ்வரி தம்பதியரின் அருமைப்புத்திரனும் காலஞ்சென்ற இராஜ ராஜேஸ்வரியின் அன்புக் கண வரும் திருமகள் (ஐஸ்லாண்ட்) திருக் குமரன், திருவேணி, கலைமகள் (லண்டன்), கமலவண்ணன் (கனடா) ஆகியோரின் அன்புத்தந்தையும் நந்த கஜேந்திரன் (ஐஸ்லாண்ட்), தர்சினி, யோகேஸ்வரன் (ஆசிரியர் யா/ கோப்பாய் மகாவித்தியாலயம்), சிவ தாஸ் (லண்டன்), வத்சலா (கனடா) ஆகி யோரின் பாசமிகு மாமனும் அகலியா (ஐஸ்லாண்ட), அபறாஜிதன் (ஐஸ்லாண்ட்), அக்னியா (ஐஸ்லாண்ட்), குமரதர்சனா, தர்மப்பிரியா, அபிஷனா, கலைவாணன், கலாவர்த்தனன், ஆருயன், பானுயன் (லண்டன்), சானிக்கா (லண்டன்), அக்ஷயன் (லண்டன்), ஆருயானா (கனடா), அபிசரன் (கனடா) ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை ந.ப. 12 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக உரும்பிராய் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
உரும்பிராய் கிழக்கு, உரும்பிராய்.
077 7730356, 021 223 0608


## மகிந்தவின் கட்சிக்கு செயலாளர் பவித்ரா

### கூறுகிறார் டிலான் பெரேரா

கொழும்பு, ஓக. 20

கூட்டு எதிர்க்கட்சியினால் ஆரம்பிக்கப்படவுள்ள மகிந்த தலை மையிலான புதிய கட்சியின் செயலாளராக நாடாளுமன்ற உறுப் பினர் பவித்ரா வன்னியாராச்சி நியமிக்கப்படவுள்ளார் என்று இராஜாங்க அமைச்சரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் பேச் சாளருமான டிலான் பெரேரா தெரிவித்தார். பவித்திராவுக்குச் செயலாளர் பதவி வழங்குவதற்குப் பசில் ராஜபக்ச உறுதிய ளித் துள்ளார்.

தற்போது நாடாளு மன்ற உறுப்பினர் பவித்ரா, பசில் வீட்டு உப் பையே உண்பதாகவும், புதிய கட்சியின் செயலாளர் பதவியை அவருக்கு வழங்குவதற்கு உறுதியளித்துள்ளதாலேயே பவித்ரா, பசிலின் புராணம் பாடுவதாகவும் அமைச்சர் டிலான் குறிப்பிட் டுள்ளார்.

(த-5)

### வருடாந்த மகோற்சவம்

பன்னாலை, தெல்லிப்பழை கற்பக விநாயகர் கோயிலின் வருடாந்த மகோற்சவம் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.30 மணிக்கு கொடி யேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது. தொடர்ந்து 12 நாள்கள் உற் சவம் நடைபெற வுள்ளதுடன் எதிர் வரும் 31ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்குத் தேர்த் திருவிழாவும், மறுநாள் வியாழக்கிழமை மு.ப. 10 மணிக்குத் தீர்த் தோற்சவமும் இடம் பெறும்.

(து)

### 4 கிலோ

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தெரிவித்தனர். அதனைக்கொண்டுசென்ற குற்றச்சாட்டில் ஒருவர் கைது செய்யப்பட்டார். நேற்றுமுன்தினமிரவு 7 மணியளவில் சம்பவம் இடம்பெற்றது. கைது செய்யப்பட்டவரை எதிர்வரும் 31 ஆம்திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு யாழ்.நீதிவான் மன்றம் நேற்று உத்தரவிட்டது. இது தொடர்பில் மதுவரித் திணைக்கள அதிகாரி சிறிமான்ன தெரிவித்ததாவது:

மோட்டார் சைக்கிள் ஒன்றில் கஞ்சாப் பொதி கள்எடுத்துச்செல்வதாகக் கிடைத்த இரகசிய தகவலை அடுத்து நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. வீதியால் சென்றுகொண்டிருந்தவரை இடைமறித்து சோதனையிட்டபோது, அவர் பயணித்த மோட்டார் சைக்கிளின் இருக்கைக்குக் கீழ் வைக்கப்பட்டிருந்த நிலையில் கஞ்சா மீட்கப்பட்டது.

கஞ்சா போதைப் பொருள்களைக் கொண்டு சென்ற குற்றச்சாட்டில் கொக்குவில் கிழக்கு கோணாவளை வீதியைச் சேர்ந்த இராமலிங்கம் கணேசகுமார் (வயது - 46) என்பவர் கைது செய்யப்பட்டார்.

ஆரம்ப விசாரணைகளில் குறித்த கஞ்சாப் பொதிகள் பல்கலைக் கழக மாணவர்களுக்கு விற்பனை செய்ய எடுத்துச் சென்றதாகச் சந்தேகநபர் தெரிவித்தார். மேலதிக விசாரணைகள் இடம்பெறுகின்றன. - என்றார்.

(வ-4,109)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கன்னியா வெந்நீருற்றின் உரித்து தமிழர்களுடையது

## கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் தெரிவிப்பு

கன்னியா வெந்நீருற்றுக்கான உரித்தும் பாரம்பரியமும் தமிழர்களுடையதாக இருக்கவேண்டும். ஏனைய மக்கள் சுதந்திரமாக அந்த வளங்களை அனுபவிக்க முடியும். எனினும் உரிமைகள் தமிழர்களுடையதாக வந்து சேர வேண்டும் எனக் கிழக்கு மாகாண கல்வி அமைச்சர் சி.தண்டாயுதபாணி தெரிவித்தார்.

திருகோணமலை- உப்புவெளி பிரதேசசபையினால் முன்னெடுக்கப்பட்ட கொத்தணி அடிப்படையிலான வேலைத் திட்டம் கன்னியா வெந்நீருற்றுப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. அதில் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போது, கன்னியா வெந்நீருற்று தொல்பொருள் திணைக்களத்திடம் இருந்து எதிர்வரும் ஜனவரி மாதம் உப்புவெளி பிரதேசசபையிடம் கையளிக்கப்படவுள்ளது. அதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது - என்றார். (த-40)

### மீண்டும்...

எமது போராட்டத்தின் உணர்வுபூர்வமான தன்மையை உணர்ந்து கொண்ட பல பொது அமைப்புக்கள், ஊடகங்கள் எல்லாம் எமக்கு ஆதரவாக நாடு தழுவிய ரீதியில் பல கண்டனப் பேரணிகளை நடத்தியது மட்டுமல்லாது வடக்கு-கிழக்கு மாகாணங்களில் முழுக் கடையடைப்பும் முன்னெடுக்கப்பட்டது.

எமது போராட்டத்தின் வீரியத்தை உணர்ந்து கொண்ட தேசிய நல்லிணக்க அரசு உயர் மட்ட அமைச்சர்களரன, டி.எம்.சுவாமிநாதன், விஜயதாச ராஜபக்ச, மனோ கணேசன், பிரதமரின் செயலர் சமன் எக்கநாயக்க, இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் எனப் பலரும் எம்மை அணுகியதோடு பல வாக்குறுதிகளையும் வழங்கி எமது உணர்வு தவிர்ப்புப் போராட்டத்தை நிறுத்தி வைத்தனர்.

வழக்குத் தொடரப்படாதவர்கள் உடன் விடுதலை செய்யப்படுவார்கள் என்றும், வழக்குத் தொடரப்பட்டவர்கள் ஒரு வருட காலப் புனர்வாழ்வு அளிக்கப்பட்டு விடுதலை செய்யப்படுவார்கள் என்றும் அமைச்சர் டி.எம்.சுவாமிநாதன் உறுதிமொழி வழங்கியமைக்கு அமைய, முதற்கட்டமாக 90 அரசியல் கைதிகளிடம் இருந்து சுய விருப்பத்தின். அடிப்படையில் புனர்வாழ்வு நிலையத்துக்குச் செல்வதற்கு என்று விண்ணப்பப் படிவங்கள் பூர்த்தி செய்யப்பட்டு அமைச்சரின் உதவியாளரிடம் கையளிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின்போது சட்டமா அதிபரின் உயர் அதிகாரியான பிரதி சொலிசிற்றர் ஜெனரல் சுகத கம்லத் உடன் இருந்தார். அத்துடன் நின்றுவிடாது உணவு தவிர்ப்பை இடைநிறுத்தி வைத்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், கடந்த ஆண்டு நவம்பர் 7 ஆம் திகதிக்கு முன் உங்கள் அனைவரையும் ஏதோ ஓர் உபாய மார்க்கத்தின் அடிப்படையில் விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை விரைந்து பெற்றுத் தருவேன் என்றும் உறுதிமொழி வழங்கிச் சென்றார்.

நவம்பர் கடந்து டிசெம்பர் ஆனது. ஆனாலும் எந்த அமைச்சரும் சொன்ன வாக்குறுதிகளை நிறைவேற்றி வைக்கவில்லை என்பதே கசப்பான உண்மையாகும். அத்துடன் வாக்குறுதி வழங்கிச் சென்ற அரசியல்வாதிகளையும் காணவில்லை. கைவிடப்பட்ட கைதியாக நாம் மட்டும் தனித்து விடப்பட்டுள்ளோம் என்பதுதான் நியாயமான உண்மையாகும்.

தற்காலிக நிவாரணமாக ஒரு சிறப்பு நீதிமன்றம் அமைக்கப்பட்டது. இந்த நீதிமன்றத்தின் செயற்பாடானது "எண்ணெய்ச் சட்டியில் இருந்து நழுவி அடுப்பில் விழுந்தது போலானது".

சிறப்பு நீதிமன்றத்தின் செயற்பாடுகள் பற்றி ஏற்கனவே நாம் இது சம்பந்தப்பட்ட அரசியல் தலைவர்களுக்கும், அமைச்சர்களுக்கும், சிறைச்சாலைத் திணைக்களத்தின் ஊடாகத் தெரியப்படுத்தி உள்ளோம்.

மனிதாபிமானத்தின் அடிப்படையில் அரசியல் கைதிகளாகிய எங்கள் விடுதலைக்கு விரைந்து நடவடிக்கை எடுக்காத பட்சத்தில் வேறு வழிகள் எதுவும் இன்றி நாமே சாத்வீகப் போராட்டத்தில் இறங்க வேண்டிய நிர்ப்பந்தத்தில் உள்ளோம். அரசினால் உருவாக்கப்பட்ட சிறப்பு நீதிமன்றத்தையும் புறக்கணிப்புச் செய்ய வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுளோம் என்பதையும் மிகவும் வேதனையுடன் தெரிவித்துக் கொள்கின்றோம் - என்றுள்ளது. (த-5)

### கஜு தோட்டத்தை...

தற்போது படையினர் தயாராகவே உள்ளனர்.

அந்தப் பண்ணை 2010ஆம் ஆண்டு முதல் இன்று வரைக்கும் படையினரால் பெருந்தொகைப் பணம் செலவு செய்யப்பட்டே பராமரிக்கப்படுகின்றது. இவ்வாறு இது வரை காலமும் செலவு செய்த தொகையினை மட்டும் வழங்க முன்வரும் சந்தர்ப்பத்தில் உடனடியாகப் பண்ணையை விடுவிக்க முடியும் என்று இராணுவ அதிகாரி தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் கிளிநொச்சி மாவட்டத்தில் படையினர் வசமுள்ள வட்டக்கச்சியில் உள்ள 419 ஏக்கர் பண்ணை, அக்கராயனிலுள்ள 80 ஏக்கர் கரும்புத் தோட்டம், மலையாளபுரம், கண்டாவளை உள்ளிட்ட நிலங்கள் விடுவிப்புத் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(வ-4,101)

### புனர்வாழ்...

பிரச்சினை உள்ளது. இதற்கு முடிவு காணப்படவேண்டும் என்று வலியுறுத்தியுள்ளேன்.

கடந்தமுறை சில சட்டத்தரணிகள் புனர்வாழ்வு வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவித்தன் காரணமாக அது முடியாமல் போனது. எனினும் அரசியல்வாதிகளுடன் இது தொடர்பாகக் கதைத்துள்ளேன். அவ்வாறான எதிர்ப்புகள் வராது என்று அவர்கள் தெரிவித்துள்ளனர்.

விச ஊசி ஏற்றப்பட்ட விவகாரம் தொடர்பில் எங்களுக்கு எதுவும் தெரியாது. யார் ஏற்றினார்கள் என்றும் எங்களுக்கு எதுவும் தெரியாது. எனினும் அந்தப் பிரச்சினையுள்ளது என்றார். (த-5)

### நிதி...

அழைக்கப்பட்டுள்ளார். குறித்த முறைகேடு தொடர்பில் முன்னாள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோவின் மீது குற்றம் சுமத்தப் பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-4)

### கலாசார...

செயலாளர்தலைமையில் இடம்பெற்றசுவட்டத்தில்ஆராயப்பட்டது. இதன்போது வவுனியா கலாசார மண்டபம் , செட்டிகுளம் மெனிக்பாம் முகாம் பகுதி உள்ளிட்ட நிலங்களை மாவட்டச் செயலாளரிடம் கையளிக்க படையினர் சம்மதம் தெரிவித்தனர். இதன் பிரகாரம் கலாசார மண்டபம் எதிர்வரும்24ஆம் திகதி புதன் கிழமை கையளிக்கவுள்ளதாக படையினரால் வவுனியா மாவட்டச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டது.

இந்த கலாசார மண்டபம் மீண்டும் நகரசபையினரிடம் வழங்கப்பட்டு மக்கள் பயன்பாட்டுக்கு விடப்படுமெனத் தெரிவிக்கப்பட்டது. (வ-101)

## மரண அறிவித்தல்கள்

### செல்லத்துரை சிவஜங்கரன்

தோற்றம்
07
06
1961



மறைவு
18
08
2016

இணுவிலைப் பிறப்பிடமாகவும் அமெரிக்காவை வசிப்பிடமாகவும் கொண்ட செல்லத்துரை சிவஜங்கரன் கடந்த (18.08. 2016) வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லத்துரை - பாக்கியம் தம்பதியரின் மகனும், காலஞ்சென்றவர்களான அரசரத்தினம் - நவமணி தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகௌரி (சிவம்) அவர்களின் அன்புக் கணவரும், அஞ்சலி, அஸ்வின் ஆகியோரின் பாசமிகு தகப்பனாரும், காலஞ்சென்ற கலாநிதி, மனோகரன், கமலாகரன் (ஆசிரியர்), விஜயசத்தியா-மகாதேவன், சண்முகபாஸ்கரன், ஜெயசக்தியா-சிறிரஞ்சன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21..08.2016) ஞாயிற்றுக்கிழமை அமெரிக்காவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்பு:- (931) 380- 9131
செல்லிடப் பேசி (262) 598 - 4650
சண்முகபாஸ்கரன் - 001 815 9759065

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி ஞானசோதி நமசிவாயம்

பிறப்பு
28
05
1941



இறப்பு
16
08
2016

யாழ். சுதுமலையைப் பிறப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட திருமதி ஞானசோதி நமசிவாயம் கடந்த (16.08.2016) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற துரைச்சாமி- சிவகாமிஅம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற கந்தையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகளும், நமசிவாயம் (நில அளவைத் திணைக்களம்-கைதடி) அன்பு மனைவியும், சுரேந்திரன், விஜேந்திரன், சசீந்திரன், ஜெஜேந்திரன் ஆகியோரின் அன்புத் தாயாரும், லோகநாதன், காலஞ்சென்ற சச்சிதானந்தன், வைத்தியலிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், வாசுகி, சேர்ளி, லின்டா, டிலானி ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான நடராசா, செல்வரத்தினம் மற்றும் சிதம்பரம், ராசம்மா, வேலாயுதர், செல்வராசா, லக்ஷ்மணன், சரோசினிதேவி, புவனேஸ்வரி, சுலோசனாதேவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், விசாலினி, யெய்டா, மாயா, அரன் ஆகியோரின் பாசமிகு பாட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.08.2016) சனிக்கிழமை கனடாவில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


கனடா - + 14166702931
செல்லிடப்பேசி +164 74 789003
கனடா - + 14162901246

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்கள்

### வினாசித்தம்பி விக்னேஸ்வரன் (குலம்)

பிறப்பு
21
05
1969



இறப்பு
18
08
2016

வேளாப்பள்ளம் மிருசுவிலைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கருவேலடி லேனை வசிப்பிடமாகவும் கொண்ட வினாசித்தம்பி விக்னேஸ்வரன் 18.08.2016 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வினாசித்தம்பி மற்றும் சிவயோகம் தம்பதியரின் மகனும் றாஜினியின் அன்புக் கணவரும் டள்சி, தர்ஷினி, லக்சி ஆகியோரின் அன்புத் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (21.08.2016) ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கொக்குவில் கருவேலடி
லேன், கொக்குவில்.
077 8630159

தகவல்:
குடும்பத்தினர்.

### ஐயக்கோன் உதயகுமார்

தோற்றம்
1977
02
25



மறைவு
2016
08
18

யாழ். வீதியைப் பிறப்பிடமாகவும், 283/5, புகையிரத வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட ஐயக்கோன் உதயகுமார் கடந்த 18.08.2016 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற ஐயக்கோன் மற்றும் கமலாதேவி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரனும் பரராஜசிங்கம் - ரஞ்சிதம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் ஜெயாவின் அன்புக் கணவரும் ஜோனநாப் (மாணவன் சென்.ஜோன்ஸ் கல்லூரி 11 ) அபிநதாப் ஆகியோரின் பாசமிகு தந்தையும் நாகேஸ்வரி, பவாணி, கண்ணன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் ராங்கராஜ், உஷாதேவி, செல்வராஜ், செல்வி ஆகியோரின் மருமகனும் சந்திரன், சாரதாதேவி, மனோகரன், பரமேஸ்வரி, நாகேஸ்வரி ஆகியோரின் பெறாமகனும் மகேசன், வசந்தி, ஜெயந்தன், மாலா ஆகியோரின் அன்புமைத்துனரும் சூரியமூர்த்தி, ஞபி, ராதிகா, ரகுநாதன் ஆகியோரின் சகலனும் கிருஷிகா, தர்ஷிகா, தனுஷ்காந்த், அபிஷேக், பிரியதர்ஷன் ஆகியோரின் பாசமிகு மாமாவும் மிலோஜன், மதுஷன், வைஷாலி, ஆரா ஆகியோரின் பாசமிகு சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (20.08.2016) சனிக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் நல்லடக்கத்திற்காக மு.ப. 11 மணியளவில் கோம்பயன்மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவின்ர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

283/5 புகையிரத வீதி,
நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

தகவல்:
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


## இந்திய மல்யுத்த வீரர் யாதேவுக்குத் தடை

ஊக்கமருந்தை எடுத்துக்கொண்ட குற்றச் சாட்டில் இந்திய மல்யுத்த வீரர் நர்சிங் யாதேவுக்கு 4 ஆண்டுகள் தடை விதிக்கப்பட்டது.

இந்திய மல்யுத்த வீரர் நர்சிங் யாதேவ் 2015 உலக சம்பியன்சிப் போட்டியில் வெண்கலம் வென்று ரியோ ஒலிம்பிக் தொடருக்கு நேரடியாகத் தகுதி பெற்றார். கடந்த ஜூன் 25 ஆம் திகதி இவருக்கு ஊக்கமருந்து சோதனை நடத்தப் பட்டது. இதில், தடைசெய்யப்பட்ட 'மெட்டாடியனன்' என்ற ஊக்கமருந்தை அவர் பயன்படுத்தியிருந்தது அம்பலமானது. இதனால் ரியோ ஒலிம்பிக் தொடரில் நர்சிங் யாதேவ் கலந்து கொள்வது கேள்விக்குறியானது. இதற்கிடையே இந்திய தேசிய ஊக்கமருந்துச் சோதனை அமைப்பின் ஆணையம் நர்சிங் யாதேவ் பிரச்சினை குறித்து விசாரணை நடத்தியது. அப்போது, தனக்கு தெரியாமல் உணவில் ஊக்கமருந்தைக் கலந்து விட்டதாகவும், இது தனக்கு எதிராக நடந்த சதி என்றும் நர்சிங் யாதேவ் குற்றம்சாட்டினார். மேலும், ஆணைத்தில் முன்னிலையாகி 600 பக்க விளக்கத்தையும் சமர்ப்பித்தார்.

விசாரணை முடிவில் "நர்சிங் யாதேவ் ரியோ ஒலிம்பிக்கில் கலந்து கொள்ளலாம். அவர் மீது எந்தத் தவறும் இல்லை. விடுதியில் வழங்கப்பட்ட உணவில்தான் ஊக்கமருந்து கலந்துள்ளது. அவர் தெரியாமலேயே இதைப் பயன்படுத்தியுள்ளார்" என்று ஆணையம் தெரிவித்திருந்தது.


இந்தியாவின் தேசிய ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு நர்சிங் யாதேவிற்கு வழங்கிய தடையில்லாச் சான்றிதழை எதிர்த்து உலக ஊக்கமருந்து தடுப்பு அமைப்பு முறையீடு செய்தது. உலக ஊக்கமருந்துத் தடுப்பு அமைப்பின் முறையீட்டு மனுவை விசாரித்த பன்னாட்டு விளையாட்டு தீர்ப்பாயம் நர்சிங் யாதேவ் ஒலிம்பிக்கில் பங்கேற்க தடை விதித்துள்ளது. மேலும் நான்கு ஆண்டுகளுக்கு பன்னாட்டுப் போட்டிகளில் பங்கேற்பதற்கும் தடை விதித்துள்ளது. (ம)




## நடுவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஓக. 20

பாடசாலைகளுக்கு இடையிலான தேசிய மட்ட கால்பந்தாட்டத் தொடர் எதிர்வரும் 9 ஆம், 10ஆம், 11ஆம் திகதிகளில் அநுராதபுரம் மாவட்டத்தில் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இதில் நடுவராகக் கலந்து கொள்ளவுள்ள யாழ். மாவட்டத்தைச் சேர்ந்த 11 நடுவர்களுக்கான கலந்துரையாடல் அநுராதபுரத்தில் நேற்றும் நேற்று முன்தினமும் நடைபெற்றது. (ம-422)





# வசிம், சர்ஜீல் கான் மிரட்டலில் அயர்லாந்தை நொறுக்கியது பாக்.

அயர்லாந்துக்கு எதிரான இரு ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் முதலாவது ஆட்டத்தை அபாரமாகக் கைப்பற்றிய பாகிஸ்தான் அணி தொடரைக் கைப்பற்றுவதையும் கிட்டத்தட்ட உறுதிப்படுத்தியது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற அயர்லாந்து முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தது. ஆரம்ப வீரர்களாக சர்ஜீல் கான் மற்றும் அசார் அலி. ஒரே ஓட்டத்துடன் ஆட்டமிழந்தார் அசார் அலி. ஆரம்பம் முதலே அடித்தாடினார் சர்ஜீல் கான். ஹபீஸ், சர்ஜீல்கான் இணை மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது. 37 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் ஹபீஸ். அசாமை வீழ்த்தினார் மெக்கார்த்தி. அஹமட்டை வீழ்த்தினார் முஸ்ராக். மறுமுனையில் சர்ஜீல் கானின் சதம் அரங்கேறியது. சதத்துக்காக அவர் வெறும் 61 பந்துகளையே எதிர்கொண்டார். மலிக், சர்ஜீல் கான் இணை ஓட்டங்களை மேலும் அதிகரித்தது. 34 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் மலிக். சர்ஜீல் கான் 152 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். நிர்ணயிக்கப்பட்ட 47 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் பாகிஸ்தான் 337-6. பந்துவீச்சில் அயர்லாந்தின் சார்பாக மெக்கார்த்தி 4 இலக்குகளையும், முஸ்ராக், சேஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய அயர்லாந்தின் ஆரம்ப வீரர்களாக ஸ்ரெய்லிங் மற்றும் ஜொய்ஸ். இருவரும் ஒற்றை இலக்கங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஸ்ரெய்லிங்கை வீழ்த்தியவர் ஆமிர். ஜொய்ஸை வீழ்த்தியவர் உமார் குல். போட்டர்பீல்டை போல்ட் செய்தார் உமார் குல். அயர்லாந்தின் மத்திய வரிசையை இமாட் வசிம் இல்லாமல் செய்தார். கெவின் ஓ பிரைன், பொயிட்னர், மெக்கார்த்தி, முஸ்டாக், சேஸ் ஆகிய ஐவரும் வசிமால் தகர்க்கப்பட 82 ஓட்டங்களில் சுருண்டது அயர்லாந்து.

பந்துவீச்சில் பாகிஸ்தானின் சார்பாக இமாட் வசிம் 5 இலக்குகளையும், உமார் குல் 3 இலக்குகளையும், ஆமிர் நவாஸ் இருவரும் தலா ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)



## தரப்படுத்தலில் முதலிடத்தில் நீடிக்க இந்தியா இரு முனைப் போராட்டம்

இந்தியா, மேற்கிந்தியத் தீவுகளுக்கு இடையிலான நான்காவது டெஸ்ட் ஆட்டத்தில் இந்திய அணி, மேற் கிந்தியத் தீவுகள், மழை எனும் இரு முனைப் போராட்டத்தில் சிக்கித் தவிக்கிறது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. மழை குறுக்கிட, சில நிமிடங்கள் தாமதமாகவே ஆட்டம் ஆரம்பமானது. தீவுகளின் ஆரம்ப வீரர்களாக பிரித்வைட் மற்றும் ஜோன்சன். 9 ஓட்டங்களுடன் ஜோன்சனை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் இசாந் சர்மா. பிராவோவை போல்ட் செய்தார் அஸ்வின். அப்போது தீவுகள் 48-2. அந்த அணி 62-2 என்ற நிலையிலிருந்தபோது மழை குறுக்கிட ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது. மழை தொடர ஆட்டம் கைவிடப்பட்டது.

தற்போதைய டெஸ்ட் தரப்படுத்தலில் முதலிடத்தில் உள்ள இந்திய அணி, தொடர்ந்து முதலிடத்தில் நீடிக்க வேண்டுமாயின் இந்த ஆட்டத்தில் வெற்றிபெற வேண்டும் என்ற நெருக்கடி நிலை உள்ளது.

மாறாக ஆட்டம் சமநிலையில் முடிந்தாலோ அல்லது இந்தியா தோல்வியடைந்தாலோ இந்தியா இரண்டாவது இடத்துக்குப் பின்தள்ளப்பட்டு பாகிஸ்தான் முதலிடத்தைப் பிடிக்கும்.

எனவே இந்திய அணி, மேற்கிந்தியத் தீவுகள், மழையெனும் இருமுனைப்போராட்டத்தில் ஈடுபட வேண்டிய நெருக்கடி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூசிலாந்து போராடும்; ரெய்லர் தெரிவித்தார்

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரை இழக்க வேண்டிய நிலை ஏற்படாது என நியூசிலாந்துத் துடுப்பாட்ட வீரரான ரெய்லர் தெரிவித்தார்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான இரண்டு ஆட்டங்களைக் கொண்ட டெஸ்ட் தொடர் நேற்று ஆரம்பமானது. நியூசிலாந்து, சிறப்பான நிலையில் உள்ளதாலும், தொடர் தென்னாபிரிக்காவில் நடைபெறுவதாலும் இந்தத் தொடர் பெரிதும் எதிர்பார்க்கப்படுகிறது. அதுமட்டுமல்லாமல் தென்னாபிரிக்கா தொடரை முழுமையாகக் கைப்பற்ற வேண்டும் என்று கிப்ஸ், பவுச்சர் போன்ற முன்னாள் வீரர்களும் கருத்துத் தெரிவித்துள்ளனர். இந்தநிலையிலேயே ரெய்லர் இவ்வாறு தெரிவித்தார்.

தென்னாபிரிக்காவின் மண்ணில் தொடர் நடைபெறுவதால் அந்த அணிக்கு அதிக வாய்ப்புக்கள் உள்ளன எனக் கருதுவது நியாயமானது. ஆனால் நியூசிலாந்து தொடரைப் பறிகொடுக்கும் என்று எண்ண வேண்டாம். எமது அணியில் துடுப்பாட்டம், பந்துவீச்சு, களத்தடுப்பு மூன்றும் சீரான அளவில் பேணப்படுகிறது. எனவே தொடரை இழக்க வேண்டிய தேவை ஏற்படாது. கடினமான போராட்டத்தை வெளிப்படுத்துவோம் என ரெய்லர் மேலும் தெரிவித்தார். (ம)

# இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஓக. 20

**வடமராட்சி லீக்கின் கால்பந்துத் தொடர்**

வடமராட்சி கால்பந்தாட்ட லீக் நடத்தத் திட்டமிட்ட கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் வல்வெட்டித்துறை நெற்கொழு பொதுவிளையாட்டு மைதானத்தில் இன்று ஆரம்பமாகிறது. பிற்பகல் 3 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் வடமராட்சி கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து முல்லைத்தீவு கால்பந்தாட்ட லீக் அணியும், மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் மன்னார் கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மூதூர் கால்பந்தாட்ட லீக் அணியும், இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தீவக கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து மட்டக்களப்பு கால்பந்தாட்ட லீக் அணியும், இரவு 9 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அம்பாறை கால்பந்தாட்ட லீக் அணியை எதிர்த்து வவுனியா கால்பந்தாட்ட லீக் அணியும் மோதவுள்ளன.

**சக்திவேல் வி.க. தொடர்**

கொக்குளாய் சத்திவேல் விளையாட்டுக் கழகம் நடத்தும் விலகல் முறையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் குறித்த கழகத்தின் மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். செபஸ்ரியன் அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் அணி மோதவுள்ளது. காலை 9.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் சென். மேரிஸ் 'ஏ' அணியை எதிர்த்து ரம்போ அணி மோதவுள்ளது.

**இலங்கை கிரிக்கெட் சபையின் தொடர்**

இலங்கை கிரிக்கெட் சபை நடத்தும் 15 வயதுப் பிரிவுக்குட்பட்ட மாவட்ட அணிகளுக்கு இடையிலான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட துடுப்பாட்டத் தொடரில் சில இன்று நடைபெறவுள்ளன. சென். ஜோன்ஸ் கல்லூரியின் மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் முல்லைத்தீவு மாவட்ட அணியை எதிர்த்து யாழ்.மாவட்ட அணி மோதவுள்ளது. சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெறும் ஆட்டத்தில் கிளிநொச்சி மாவட்ட அணியை எதிர்த்து வவுனியா மாவட்ட அணி மோதவுள்ளது. (ம-422-23-108)



# வொலிகிங்ஸின் கரப்பந்தாட்டம்; புத்தூர் வளர்மதி அணி சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 20
கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டு கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'பி' பிரிவில் புத்தூர் வளர்மதி அணி சம்பியனானது.

வொலிகிங்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் புத்தூர் வளர்மதி அணியை எதிர்த்து ஆவரங்கால் மத்தி அணி மோதியது. முதலாவது செற்றை வளர்மதி அணி 25:21 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது செற்றில் ஆவரங்கால் மத்தி அணி 25:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றி பெற்று பதிலடி கொடுத்தது.

நிலமை 1:1 என்றிருந்தது. சரிவிலிருந்து மீண்ட புத்தூர் வளர்மதி அணி அடுத்த இரு செற்களையும் முறையே 25:15, 25:22 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 3:1 என்ற செற்கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-422-23)




இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி 3 டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரை 3:0 என்ற கணக்கில் பறிகொடுத்தது. மூன்றாவது ஆட்டம் முடிந்த பின்னர் ஆஸ்திரேலிய வீரர்களின் உடைமாற்றும் அறைக்குச் சென்ற இலங்கை வீரர்கள் அவர்களுடன் கலந்துரையாடிய படங்களை இலங்கை கிரிக்கெட் சபை வெளியிட்டது. (ம)

# இளவாலை மத்தி. சம்பியன்

யாழ்ப்பாணம், ஓக. 20
கச்சாய் வாகையடி வொலிகிங்ஸ் விளையாட்டுக் கழகம் இரு பிரிவாக நடத்திய கரப்பந்தாட்டத் தொடரில் 'ஏ' பிரிவில் இளவாலை மத்திய அணி சம்பியன் கிண்ணத்தைச் சுவீகரித்தது.

வொலிகிங்ஸின் மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் இளவாலை மத்திய அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி அணி மோதியது. முதலாவது செற்றில் இளவாலை மத்திய அணி 25:23 என்ற புள்ளிகளின் அடிப்படையில் வெற்றிபெற்றது. இரண்டாவது, மூன்றாவது செற்களை புத்தூர் கலைமதி அணி முறையே 25:14, 25:12 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி பதிலடி கொடுத்தது. இளவாலை மத்திய அணி நான்காவது செற்றை 25:21 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்ற நிலமை 2:2. இறுதி செற்றில் வெற்றிபெறும் அணி எதுவோ அந்த அணியே சம்பியன் என்ற நிலை. இறுதி செற்றை 15:10 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய இளவாலை மத்திய அணி முடிவில் 3:2 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்றுச் சம்பியனானது. (ம-422)



# ஆதிசக்தி, சிவானந்தா அணிகளுக்கு வெற்றி

யாழ்ப்பாணம், ஓக. 20
பொலிகண்டி பாரதி விளையாட்டுக் கழகம் மாவட்ட ரீதியில் முன்னெடுத்துவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆட்டங்களில் வல்வை ஆதிசக்தி அணியும் சிவானந்தா அணியும் அடுத்த சுற்றுக்கு முன்னேறின.

முதலில் நடைபெற்ற ஆட்டத்தில் பாசையூர் சென். அன்ரனிஸ் அணியை எதிர்த்து சிவானந்தா அணி மோதியது. ஆட்டத்தின் 14ஆவது நிமிடத்தில் சிவானந்தா அணியின் கபில் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். வேறெந்த மாற்றமும் இல்லாமல் முடிந்தது முதல் பாதி. இரண்டாவது பாதியில் கோல் கணக்கில் மாற்றம் ஏற்படாத நிலையில் சிவானந்தா அணி 1:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இரண்டாவதாக நடைபெற்ற ஆட்டத்தில் கருணாகரன் அணியை எதிர்த்து ஆதிசக்தி அணி மோதியது. ஆட்டத்தின் 18ஆவது நிமிடத்தில் ஆதிசக்தி அணியின் மதீசன் தனது அணியின் முதல் கோலைப் பதிவுசெய்தார். அடுத்த நிமிடத்திலேயே கருணாகரன் அணியின் கரிகரன் பதில் கோலைப் பதிவு செய்தார். 1:1 என்ற கோல் கணக்கில் முதல் பாதி முடிவு கண்டது. இரண்டாம் பாதியில் எந்த அணியாலும் தமது கோல் கணக்கில் மாற்றத்தை ஏற்படுத்த முடியவில்லை. சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட முடிவில் 5:4 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது ஆதிசக்தி அணி. (ம-422)

# கலையொளி, பூநகரி நண்பர்கள் சமநிலைத் தவிர்ப்பில் வென்றன

யாழ்ப்பாணம், ஓக. 20
பூநகரி ஐயனார் விளையாட்டுக் கழகம் நடத்திவரும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்களில் கலையொளி, பூநகரி நண்பர்கள் அணிகள் வெற்றிபெற்றன.

ஐயனார் விளையாட்டுக் கழகத்தின் மைதானத்தில் பிற்பகல் 2.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வலைப்பாடு சென். ஆன்ஸ் அணியை எதிர்த்து பூநகரி கலையொளி அணி மோதியது.

நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது கலையொளி.

தொடர்ந்து இடம்பெற்ற ஆட்டத்தில் பூநகரி நண்பர்கள் அணியை எதிர்த்து பூநகரி அண்ணா அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரு அணிகளும் தலா ஒரு கோலைப் பதிவுசெய்தமையால் சமநிலைத் தவிர்ப்பில் வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. முடிவில் 4:3 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது நண்பர்கள் அணி. (ம-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்னாபிரிக்காவை சுருட்ட நியூசிலாந்து கடும் முனைப்பு

தென்னாபிரிக்காவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் முதல் நாளில் நியூசிலாந்து பந்துவீச்சால் பலமான ஓர் அடித்தளத்தை அமைத்துள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்கா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக எஸ்.ஹொாக் மற்றும் எல்கர். ஹொாக்கை வீழ்த்தி இலக்குச் சரிவை ஆரம்பித்து வைத்தார் போல்ட். 19 ஓட் டங்களுடன் பிரேஸ்வெல்லால் வீழ்த்தப்பட்டார் எல்கர். டுமினியால் முடிந்தது 14 ஓட்டங்களே. அரைச்சதம் கடந்தார் அம்லா. பிளாசிஸ் சுமாரான ஆட்டம். 53 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் அம்லா.



அடுத்த சில நிமிடங்களில் பிளாஸிஸும் பவிலியன் திரும்பினார். குயின்டன், பிளன்டர் இருவரையும் முறையே சான்நெர், வாக்நெர் வெளியேற்றினர். தென்னாபிரிக்கா 236-8 என்ற நிலையில் இருந்த போது ஆட்டம் முடிவுக்கு வந்தது. களத்தில் ரபாடா, ஸ்ரெய்ன் இருவரும் உள்ளனர். பந்துவீச்சில் நியூசிலாந்தின் சார்பில் வாக்நெர் மூன்று இலக்குகளையும், சான்நெர், போல்ட் இருவரும் தலா இரு இலக்குகளையும், பிரேஸ்வெல் ஓர் இலக்கையும் வீழ்த்தினர். (ம)

கிராமசேவகர்(GS)
சமுர்த்தி
உத்தியோகத்தர்

விசேட கருத்தரங்கு

உங்கள் இடங்களில்
ஆரம்ப நேரம்
தரப்பட்டுள்ளது.
ஏனைய நேர அட்டவணை
உரிய அலுவலகங்களில்
பெற்றுக்கொள்ளவும்.

கிளிநொச்சியில்
எடிசன் கல்லூரி
திங்கள் 2.00 மணி
077 5483470

வவுனியாவில்
CBA கதிரேசன் வீதி
செவ்வாய் 9.30-3.30
024 2221730

மன்னாரில்
BCS College
023 2250666
புதன் 9.30-3.30

நெல்லியடியில்
Science Center
077 6079346
வியாழன் 2.00-5.00

சித்தன்கேணியில்
Subra வில்
வியாழன்,வெள்ளி
5.00-7.30

யாழ் நகரில்
யாழ்ப்பாணக்
கல்லூரி
பட்டப்படிப்புகள் பிரிவு
சனி,ஞாயிறு இரு
பிரிவுகள்

சகல
தொடர்புகளுக்கும்
076 6883394

வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு

யாழ்./நல்லூர், மருதடி ஒழுங்கையில் இல.38/2/A முகவரி கொண்ட 1675 சதுர அடி கொண்டதும் 4 அறைகளும் இணைந்த குளியல் அறையும் புறம்பான குளியல் அறையும் கொண்ட சகல வசதிகளும் உள்ள மாடி வீடும் 3 பரப்புக் காணியும் விற்பனைக்குண்டு. தரகர்கள் தேவையில்லை.

தொடர்புகளுக்கு:-
077 801 4335, 076 545 5426

வெளிவந்து விட்டது

வலைத்
தொகுப்பு
2015

அண்மையில் நடைபெற
இருக்கும் சகல போட்டிப்
பரீட்சைகளுக்குமான சமகால
பொது அறிவுத் தொகுப்பு

பூபாலசிங்கம் புத்தகசாலை
ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம் 021 222 6693
வேம்படிச் சந்தி யாழ்ப்பாணம் 021 222 1637

பணிநிலை வேண்டுகை

வெல்டர்ஸ்
Welders
அனுபவமுள்ளவர்கள் மட்டும்

20, 22, 23 .08.2016 ஆம் திகதிகளில்
நேர்முகத்தேர்வு நடைபெறும்.
விண்ணப்பிக்க விரும்புவோர்
நேரில் வரவும்

கரிகணன்
வடக்கின் அச்சகதாரர்

இல. 681, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
T.P.: +94 21 222 2717/ 8
+94 21 222 2737

# உலகச்சம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்தார் மரின்




ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்கள் ஒற்றையர் பிரிவுப் பூப்பந்தாட்டத்தில் தங்கப் பதக்கம் வென்று உலகச் சம்பியன் என்பதை மீண்டும் நிரூபித்தார் ஸ்பெய்னின் கரோலின் மரின்.

இலங்கை நேரப்படி இரவு 7.30 மணியளவில் நடைபெற்ற இந்தப் போட்டியில் ஸ்பெய்னின் கரோலின் மரினை எதிர்த்து இந்தியாவின் சிந்து பலப்பரீட்சை நடத்தினார். முதல் செற்றை 21:19 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி முன்னிலை பெற்றார் சிந்து. இதனால் அடுத்த இரு செற்களிலும் வெற்றிபெற்றால் மட்டுமே கரோலின் தங்கம் வெல்லலாம் என்ற இக்கட்டான நிலை ஏற்பட்டது. இந்த நிலையில் இரண்டாவது செற்றை 21:13 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிப் பதிலடி கொடுத்தார் மரின்.

மூன்றாவது செற்றில் வெற்றிபெறுபவருக்குத் தங்கப்பதக்கம் என்ற நிலை. ஒரு கட்டத்தில் மரின் 10:5 என்று முன்னிலை வகித்த போதிலும் 10:10 என்று மீண்டெழுந்து நெருக்கடி கொடுத்தார் சிந்து. சரிவிலிருந்து மீண்ட கரோலின் இறுதி செற்றை 21:16 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றி 2:1 என்ற செற் கணக்கில் வெற்றிபெற்று தங்கப்பதக்கத்தைக் கைப்பற்றினார்.

ஒலிம்பிக் வரலாற்றில் பூப்பந்தாட்டப் போட்டியில் வெள்ளிப் பதக்கம் வென்ற முதல் இந்திய வீராங்கனையாக சிந்து பதிவானார். (ம)

## பெண்களுக்கான ஈட்டி எறிதலில் குரோசியாவுக்குத் தங்கப்பதக்கம்



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான ஈட்டி எறிதலில் குரோசிய வீராங்கனை தங்கப் பதக்கம் வென்றார்.

குரோசியாவின் சார்பாகக் களமிறங்கிய சாரா கோலக் என்ற வீராங்கனை 66 மீற்றர் 18 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து தங்கப் பதக்கத்தை வென்றார். தென்னாபிரிக்க வீராங்கனை வல்யோன் 64 மீற்றர் 92 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெள்ளிப் பதக்கத்தையும், செக்குடியரசின் பார்போரா 64 மீற்றர் 80 சென்ரிமீற்றர் தூரத்துக்கு எறிந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றனர். (ம)

## 10 மீற்றர் உயர டைவிங்: பதக்க வேட்டையில் சீனா



ரியோ ஒலிம்பிக் தொடரில் நேற்று நடைபெற்ற பெண்களுக்கான 10 மீற்றர் உயரமுடைய டைவிங் போட்டியில், தங்கம், வெள்ளி என இரு பதக்கங்களை வென்றது சீனா.

சீன வீராங்கனை ரென் குவான் ஒட்டுமொத்தமாக 439.25 புள்ளிகளைப் பெற்று தங்கப் பதக்கத்தையும், சி ஜெய்லி 419.40 புள்ளிகளைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தையும், கனடாவின் மெக்கான் வென்பிட்டோ 389.20 புள்ளிகளைப் பெற்று வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர். (ம)

## அத்தனையும் நாடகம் என அம்பலம்
# சிக்கலில் அமெரிக்க நீச்சல் வீரர்கள்

துப்பாக்கி முனையில் தம்மிடம் கொள்ளையிடப்பட்டதாக அமெரிக்க நீச்சல் வீரர்கள் தெரிவித்தமை வெறும் நாடகம் என்று அம்பலமானது.

பிரேஸிலின் ரியோ டி ஜெனிரோ நகரில் ஒலிம்பிக் தொடர் நடைபெற்று வருகிறது. சில தினங்களுக்கு முன்னர் ஆடம்பர விடுதியொன்றுக்குச் சென்று திரும்பும் போது அமெரிக்க நீச்சல் வீரர்கள் நால்வர் தம்மிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்தனர். இது உலகெங்கும் பரபரப்புக்களை ஏற்படுத்தியது. அமெரிக்க ஒலிம்பிக் சம்மேளனம் குறித்த விடயத்துக்குக் கண்டனம் தெரிவித்தது. ஆனால் வீரர்கள் நால்வரும் இந்த விவகாரத்தில் திட்டமிட்டு நாடகமாடியது நேற்று அம்பலமானது.

வீரர்களிடத்தில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில், வீரர்கள் நால்வரும் வாகன எரிபொருள் நிரப்பு நிலையமொன்றுச் சென்று அங்கு கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட முயன்றதாகவும், இதனையடுத்து ஏற்பட்ட சேதாரங்களை ஈடுசெய்ய அவர்களிடமிருந்து எரிபொருள் நிரப்பு நிலைய காவலர்கள் பணத்தைப் பெற்றமையும் தெரியவந்தது. இதை மறைக்கவே அந்த வீரர்கள் நால்வரும் தம்மிடம் துப்பாக்கி முனையில் கொள்ளையிடப்பட்டதாகத் தெரிவித்து நாடகமாடினர் என்றும் தெரிவித்து பிரேஸில் பொலிஸார் அறிக்கை சமர்ப்பித்தனர். இதனை வீரர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

இதனையடுத்து பிரேஸிலுக்கும், ரியோ டி ஜெனிரோ நகருக்கும், பிரேஸில் மக்களுக்கும், ஒலிம்பிக் தொடருக்கும் களங்கம் விளைவித்தமைக்காக வீரர்களின் சார்பில் அமெரிக்க ஒலிம்பிக் சம்மேளனம் மன்னிப்புக் கேட்டுள்ளது. (ம)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 20.08.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.